


கல்கி
22.8.99
KALKI
ரூ. 4.50
ஜோதிகாவைக் கேட்டுப்பார்!

இல்லதரசிகளுக்கு புதிய துணை
சமையல் கலையில் திருப்புமுனை
மில்க் பாய்லர், இட்லி குக்கர்,
வாட்டர் ஃபில்டர், குழிகரண்டி
எல்லாம் தந்திடும்

Murugan


முருகன் மெட்டல் என்றாலே
முகம் மலரும் தன்னாலே






















முருகன் மெட்டல் இண்டஸ்ட்ரீஸ்

21, பொன்னப்ப செட்டி தெரு, சென்னை — 3.

போன்: 5350182, 5343412



• சிராவயல் கிராமம்

• வேலுச்சாமி

வேட்பாளர்கள் நுழைய முடியாத கிராமம்!

தேர்தல் என்றால் பிரசாரம். தேர்தல் என்றால் சுவரொட்டி. தேர்தல் என்றால் லவுட் ஸ்பீக்கர். தேர்தல் என்றால் வெள்ளைச் சுவர்களுக்கு வேட்டு. தேர்தல் என்றால் வீடு வீடாக, வேட்பாளர்கள் நிகழ்த்தும் கையேந்தி பவன் காட்சி.

சாதாரணமாக ஒரு தேர்தல் வந்தால் இது தானே நடைமுறை?

''நாடு முழுக்க இது நடைமுறையாக

கல்கி இண்டர்நெட் முகவரி :
www.kalkiweekly.com
ஈ மெயில் : kalkiweekly@vsnl.com



இந்த உலகில் வாழும் ஒவ்வொருவருக்கும் தலா 12 அமெரிக்க டாலர்கள் வீதம் அன்பளிப்பாக 'பில்கேட்ஸ்' அளித்த பிறகும் அந்த பணக்காரரிடம் இரண்டரைக் கோடி டாலர் மிச்சமிருக்கும்!

— கே. வைத்தியநாதன்

இருக்கலாம். ஆனால், எங்கள் ஊர் மட்டும் விதிவிலக்கு!" என்கிறார்கள் சிராவயல் கிராமத்தினர். வோட்டுப் போடுகிற ஒரு வைபவத்தைத் தவிர, தேர்தல் திருவிழாக் கொண்டாட்டம் எதுவும் இங்கே கிடையாது. காற்றின் 'உஸ்ஸ்' சப்தம் கூடத் துல்லியமாகக் கேட்கும் கிராமங்களுக்கே உரிய இனிய அமைதி, தேர்தல் காலங்களில் கூட இங்கே இருக்கும் என்கிறார்கள்.

ப. சிதம்பரத்தின் சிவகங்கைத் தொகுதியில், குன்றக்குடி – பிள்ளையார்பட்டி சாலையில், பிள்ளையாரை வணங்கிக் கடந்த ஐந்தாவது நிமிஷத்தில் வருகிறது சிராவயல் கிராமம். சுமார் மூவாயிரம் வோட்டுகள், ஓலை மற்றும் ஓட்டு வீடுகள், கிராமப் பஞ்சாயத்து நிர்வாகம், பிரதானமாக விவசாயத் தொழில். தி.மு.க., அ.தி.மு.க., த.மா.கா., காங்கிரஸ், பா.ம.க. எனப் பல கட்சி அபிமானிகள் இருக்கிறார்கள். அதிகம் பேர் ப. சிதம்பரத்தின் விசுவாசிகள்தாம் என்று சொல்கிறார்கள்.

ஆனால், ஊரில் ஒரு கட்சிக் கொடி கிடையாது; கறை வேட்டி கிடையாது. தேர்தல் சமயத்தில் சுவர் வாசகம் எழுதுகிற வழக்கமோ, மைக் பிடித்து பிரசாரம் செய்ய அனுமதியோ கிடையாது. வேட்பாளர்கள் வீடு வீடாக வந்து வோட்டுக் கேட்கக் கூட முடியாது – சிதம்பரம் உட்பட.

இது ஒட்டுமொத்த கிராமத்தாரின் ஒப்புதலுடன் பஞ்சாயத்துத் தலைவர் எடுத்த முடிவு; செய்த தீர்மானம்; இப்போதல்ல – பல வருடங்களுக்கு முன்பாகவே.

ஆச்சர்யமாக இருந்தது. ஆனால், இதை ஒரு சாதனையாகக் கருதாமல், 'இப்படித்தான் இருக்க வேண்டும்' என்பது போல அலட்டிக் கொள்ளாமல் பேசினார், பஞ்சாயத்துத் தலைவர் வேலுச்சாமி. இளைஞர். தி.மு.க.காரர். இவரது தந்தையும் முன்னதாகப் பஞ்சாயத்து தலைவராக இருந்திருக்கிறார். அவர் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட வழக்கம்தானாம் இது.

"கட்சி ஈடுபாடுன்றது எல்லாருக்கும் இருக்கக் கூடியதுங்க. ஆனா, தேர்தல் பிரசாரம்னு வரும்போது ஊர் அமைதி கெட்டுப் போயிடுது. மனஸ்தாபத்துல தொடங்கி, கைகலப்பு வரைக்கும் போயிடுது சமயத்துல. இந்தக் கட்சிக்கு வோட்டுப் போடறது, அல்லது இன்னார்தான் எம்.எல்.ஏவாகவோ, எம்.பியாகவோ வரணும்ங்கறதை மக்கள் மனசுக்குள்ள தீர்மானிச்சுடறாங்க. பிரசாரம்னு வரும்போது வேடிக்கை பார்க்கறது தான் நடக்கறதே தவிர, மனமாற்றமெல்லாம் சாத்தியம்னு தோணலைங்க.

"தேர்தல் கலாட்டா ஒரு மாசம் நடக்குமா? அந்த களேபரத்துல ஒட்டுமொத்த கிராம அமைதியும் பறிபோயிடுமே? அதான், இதையெல்லாம் அனுமதிக்கிறதில்லைன்னு முடிவு பண்ணிட்டோம்" என்றார் வேலுச்சாமி.

கிராமத்தின் எல்லையில் இருக்கிறது தலைவரின் வீடு. ஊரில் ஒரே பெரிய வீடு அதுதான். வேட்பாளர்கள் தேர்தல் சமயத்தில் தலைவர் வீட்டுக்கு மட்டும் வருவார்கள். தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டு, கிராமத்தாரின் ஆதரவைக் கேட்பதாகச் சொல்லிவிட்டு அப்படியே திரும்பிப் போய்விட வேண்டும்.

பிறகு தலைவர், இன்னார் வந்து வோட்டு கேட்டுப் போனார் என்கிற விவரத்தை மக்களுக்குத் தெரியப்படுத்தி விடுவார். அப்புறம் அவர்கள் இஷ்டம்!

"இந்த ஏற்பாட்டால பிரச்னை ஒண்ணும் இல்லை பாருங்க! இதாங்க வசதி" என்றனர் கிராமவாசிகள்.

இந்த முறை சிவகங்கைத் தொகுதியில் தி.மு.கவும் த.மாகாவும் எதிரெதிர் அணியில் நின்று போட்டியிடுவதில் மக்கள் மத்தியில் சற்றுக் கசப்புணர்வு தூக்கலாக இருப்பதாகச் சொன்னார்கள்.

ப. சிதம்பரத்தின் மேல் எல்லோருக்குமே ஒரு பாசம் உண்டாயினும் வோட்டு என்று வருகிறபோது, பழைய அளவில் அது இம்முறை கணிசமாகக் குறையும் என்று தோன்றுவதாகச் சொன்னார் வேலுச்சாமி.

— ஔரங்கசீப்

படங்கள் : **ஸ்ரீஹரி**

மேல் கட்ட முணுமுணுப்புகள்!

• சீட் கிடைக்காத அதிருப்தியை வெளிப்படுத்தாமல், போயஸ் தோட்டத்து திசை நோக்கி சாஷ்டாங்கமாக விழுந்து எழுந்து விட்டுத் தேர்தல் பணி செய்கிறார்கள் சேடப்பட்டி, சத்தியமூர்த்தி, கடம்பூர் ஜனார்த்தனன் போன்ற ரத்தத்தின் ரத்தங்கள். தி.மு.க.வில் மதுரை பாராளுமன்றத் தொகுதியைப் பொறுத்தவரை காவிரி மணியத்துக்குத்தான் வாய்ப்புக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அழகிரி முதற்கொண்டு கட்சி முக்கியஸ்தர்கள் வாக்குறுதி கொடுத்து விட்டு, கவிழ்த்து விட்டார்களாம்! இப்போது பொன். முத்துராமலிங்கத்திற்கு ஸீட் கொடுக்கப்பட்டதில் மதுரை கழகப் பிரமுகர்கள் கடும் கோபத்தில் இருக்கிறார்களாம். குறிப்பாக, சபாநாயகர் பி.டி.ஆர். பழனிவேல் ராஜன், மிக்க அதிருப்திக்கு ஆளாகியிருக்கிறார் என்று சொல்லப்படுகிறது. திருப்பரங்குன்றம் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், கழகத் தொண்டர்களிடையே செல்வாக்குப் பெற்றவருமான ராமச்சந்திரனை நிறுத்தி வைத்தால் கண்டிப்பாக மதுரையை சுவாமியிடம் இருந்து மீட்டு விடலாம்'' என்று அவர் சொல்லி வந்தாராம். அழகிரி ஏன் தன்னைக் கைவிட்டார் என்று காவிரி மணியத்துக்கு ஒரே குழப்பமாம். அதே போல், பா.ம.கவில் செங்கல்பட்டுத் தொகுதியில் வேட்பாளராக நியமிக்கப்பட்டுள்ள ஏ.கே. மூர்த்திக்கு மாவட்டப் பிரமுகர்களிடமிருந்து ஒரே எதிர்ப்பு. வேட்பாளர் அறிவிப்பு வந்தவுடன், அந்த மாவட்ட பா.ம.க. செயலாளர் இருக்கச்சூர் ஆறுமுகம் என்பவர் தேனாம்பேட்டை தலைமை கழகத்துக்கு வந்து புலம்பி விட்டுப் போனாராம். தர்மபுரி தொகுதியில் பாரி மோகனுக்கு மீண்டும் கொடுக்காமல் புதா. இளங்கோவனுக்குக் கொடுத்திருப்பதை பா.ம.க. தொண்டர்கள் வரவேற்கிறார்கள். பா.ம.க.வை ஆட்டி வைத்துக் கொண்டிருப்பது தலித் எழில்மலை விவகாரம்தான். பா.ம.க. வலுவாக உள்ள இடங்களில், விடுதலைச் சிறுத்தைகளும், தலித் அமைப்புகளும் ஏற்கெனவே பா.ம.க.வுக்கு எதிராகக் களம் அமைத்திருக்கும் நிலையில், எழில்மலைக்கு ஸீட் கொடுக்காதது தலித் இனத்தாருக்கு இன்னமும் கடுமையான அதிருப்தியைக் கொடுக்கும் என்கிறார்கள். சிதம்பரம் தொகுதியில் போட்டியிட மூப்பனார் அணி சார்பில் இளையபெருமாள் நிறுத்தப்படலாம். ஆனால் சமீபத்தில் த.மா.காவில் வந்து இணைந்த வள்ளல்பெருமான்



• தலித் எழில்மலை

மூப்பனாரை நச்சரித்து வருகிறாராம்!

• ஒட்டைக் கப்பலுக்கு ஒன்பது மாலுமிகள் என்பது போல, ஏற்கெனவே காங்கிரஸின் நிலை பரிதாபமானது. இந்த முறை முக்கியப் புள்ளிகள் அவரவர்க்கு வேண்டிய தொகுதியை, தொகுதிப் பங்கீட்டில் ஜெ.விடம் பெற்றுக் கொண்டு, தலித்துகளை அம்போ என கைவிட்டு விட்டதாகப் புலம்பிக் கொண்டிருக்கிறார்கள் அந்தச் சமூகத்தைச் சேர்ந்த காங்கிரஸ் பிரமுகர்களான லதா பிரியகுமார், யசோதா, ஆர்.வி. சுப்பிரமணியம், மற்றும் போளூர் வரதன் போன்றோர். தமிழ்நாட்டில் ஏழு ரிசர்வ் தொகுதிகள் இருக்கின்றன. அவற்றில் ஒன்றே ஒன்றுதான் (சிதம்பரம்) காங்கிரஸுக்கு ஒதுக்கப்பட்டது. அந்தத் தொகுதியையும், நீண்ட நாட்கள் கட்சிக்காகப் பாடுபட்டவர்களுக்கு ஒதுக்காமல், தொகுதிக்கே சம்பந்தமில்லாத ஒரு பெண்மணிக்கு கொடுக்கப்பட்டிருப்பதைக் குறித்துக் கடுமையான கண்டனம் தெரிவிக்கிறார்கள். குறிப்பாகத் தலித் அமைப்பினர் ஏற்கெனவே மூப்பனார் அணியுடன் இணைந்து வியூகம் வகுத்துள்ள நிலையில், காங்கிரஸ் கட்சி தலித் இன மக்களை அவமதிப்பது போல் நடந்து கொண்டிருப்பது தேர்தலில் எதிரொலிக்குமாம். சில தீவிரமான காங்கிரஸ் பிரமுகர்கள் 'திண்டிவனம் தொகுதியில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரையே தோற்கடிக்க வேண்டும்' என்று சூடாகப் பேசி வருகிறார்கள்!

— சஞ்சயன்

'பூவெல்லாம் கேட்டுப் பார்' மூலம் இன்று ஊரெல்லாம் பேசப்படுகிறவர் ஜோதிகா. அசப்பில் நக்மா போலவே இருந்தாலும் நடிப்பில் அசத்தியிருக்கும் இந்த மும்பைப் பறவையைச் சென்னையில் சந்தித்துச் சில கேள்விகள் கேட்டுப் பார்த்தோம்!

" 'பூவெல்லாம் கேட்டுப் பார்' தான் நான் ஒப்பந்தம் ஆன முதல் தமிழ்ப் படம். ஆனால், இடையே இயக்குனர் சூர்யா கேட்டுக் கொண்டதால் 'வாலி' படத்தில் சின்ன ரோல் பண்ண ஒப்புக் கொண்டேன். அது முதலில் ரிலீசாகி விட்டது" என்கிறார் படபடப்பாக.

"நான் நடித்த முதல் படம் இந்திப் படம் தான். 'காதலுக்கு மரியாதை'யின் இந்தி வடிவம். பிரியதர்ஷன்தான் டைரக்டர். ஹீரோ அக்ஷய்கன்னா. ஆனாலும் அந்தப் படம் சராசரி வெற்றியைக் கூடப் பெறவில்லை! காரணம், அந்தப் படம் குடும்ப சென்டிமெண்ட் படம். அது ரிலீஸ் ஆன சமயம், இந்தித் திரையுலகில் குடும்ப சென்டிமெண்ட் காலம் முடிந்து, இளமைக் காதலுக்கு வரவேற்பு கிடைத்துக் கொண்டிருந்த நேரம். இந்தியில் என் முதல் படம் வெற்றிப் படமாக அமையாத குறையைத் தமிழ்த் திரையுலகம் தீர்த்து விட்டது. வாலி, பூவெல்லாம் கேட்டுப்பார் இரண்டுமே ஹிட்!" என்று பூவாய்ச் சிரித்தபடி பேசுகிறார் ஜோதிகா. ஒரிஜினல் பெயரே அது தானாம்.

"அக்கா நக்மாதான் உங்களுடைய திரையுலகப் பிரவேசத்துக்கு இன்ஸ்பிரேஷனா?"

"நக்மா ஒரு இன்ஸ்பிரேஷன்தான் என்றாலும், சினிமா எங்கள் குடும்பத்துக்குப் புதில்லை. இருபது வருடங்களாக சினிமாத் துறையில் ஈடுபட்டுள்ள குடும்பம்! அப்பா ஏகப்பட்ட இந்திப் படங்கள் தயாரித்திருக்கிறார். நடிப்பு என்று எடுத்துக் கொண்டாலும், மூத்த அக்கா நக்மா மட்டும்தான் நடிகை என்று நினைத்துக் கொண்டீர்களா? அடுத்த அக்கா ரோஷினியும் நடிகைதான்! தமிழில் கூட நடித்திருக்கிறார். படத்தின் பெயர் சட்டென்று எனக்கு நினைவுக்கு வரவில்லை... பை த வே, நான் ஒரு மனோ தத்துவ மாணவியும்



கூட. ஒருவரைப் பார்த்தாலே, அவர் எப்படிப்பட்டவர் என்று ஓரளவு என்னால் ஜட்ஜ் பண்ணி விட முடியும்!''

''என்ன, படித்துக் கொண்டிருக்கிறீர்களா?''

''ஆமாம்! நான் இன்னமும் மும்பை மிதிபாய் காலேஜில் மூன்றாம் வருட மாணவி. சைக்காலஜி எனக்கு மிகவும் பிடித்த சப்ஜெக்ட். பள்ளிக்கூடத்தில் பிளஸ்டூ படித்துக் கொண்டிருந்தபோது, கேஷுவலாக, என் புகைப்படங்களில் சிலவற்றை, குடும்ப நண்பரான இந்தி நடிகர் அனுபம்கேரிடம் கொடுத்திருந்தேன். அவற்றைப் பார்த்து விட்டு, டைரக்டர் பிரியதர்ஷன் தம் படத்தில் நடிக்க வாய்ப்புக் கொடுத்தார். அந்த ஷூட்டிங்கின் போது என்னைச் சந்தித்த டைரக்டர் வசந்த், தம் படத்தில் என்னை ஹீரோயினாக்கி விட்டார்!

'வாலி'யில் கொஞ்சம் துடிப்பான, கிளாமரான ரோல். பூவெல்லாம் கேட்டுப்பார் படத்தில் கிளாமர் எதுவுமில்லை. இது கூட ஒருவிதத்தில் எனக்கு அனுகூலம் தான். நான் வெறும் கவர்ச்சி பொம்மை என்ற தவறான எண்ணத்தை ஏற்படுத்தி விடாமல், ஆரம்பத்திலேயே என்னால் நடிக்கவும் முடியும் என்று நிரூபிக்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்து விட்டார் வசந்த்! படத்தில் ஒவ்வொரு காட்சியிலும் நான் எப்படி நடிக்க வேண்டும் என்பதை டைரக்டர் வசந்த்தே நடித்துக் காட்டி, என்னை அப்படியே நடிக்கும்படிச் சொன்னார். நான் அதைத்தான் செய்தேன். நான் நன்றாக நடித்திருப்பதாக யாராவது சொன்னால், அந்தப் பாராட்டு முழுக்க வசந்துக்குத்தான் போய்ச் சேர வேண்டும்.''

''லட்சியம் என்று ஏதாவது உண்டா?''

''இப்போதுதானே நடிக்க வந்திருக்கிறேன். எனவே, விருது பற்றியெல்லாம் எதிர்பார்ப்பு ஒன்றும் இல்லை. இப்போதைக்கு நன்றாக நடித்து, நிரந்தரமான இடம் பிடிக்க வேண்டும். தொடர்ந்து, நீண்ட காலம் நடிக்க வேண்டும் என்று ஆசை இல்லை. புகழின் உச்சகட்டத்தில் இருக்கிறபோதே விலகிவிட வேண்டும். கடைசி வரை நடிக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டு, வாய்ப்புகள் குறையும் வரை சினிமாவில் இருக்க மாட்டேன்.''

''அக்கா, தம் தமிழ்த் திரையுலக அனுபவங்களின் அடிப்படையில் நிறைய அட்வைஸ் கொடுத்திருப்பாரே?''

''ஓ, எஸ்! இங்கேயுள்ள இயக்குனர்கள், படக் கம்பெனிகள் பற்றி நிறைய சொல்லியிருக்கிறார். முடிவுகள் எடுப்பதற்கு அவரது அட்வைஸ் எனக்கு மிகவும் உபயோகமாக இருக்கிறது. தமிழ்த் திரையுலகில் அவரது காலம் திடீரென்று ஒரு முடிவுக்கு வந்து விட்டதில் எனக்கு ரொம்ப வருத்தம். நக்மா, தமிழ் ரசிகர்களை ஏமாற்றி விட்டுப் போய் விடவில்லை. அவர் விட்டுச் சென்ற இடத்தை நிரப்புவதற்குத்தான் நான் வந்திருக்கிறேன்!''



சந்திப்பு : **கௌதம்**

அட்டையில் : **'உயிரிலே கலந்தது' படத்தில் ஜோதிகா**

படஉதவி : **ஸ்ரீ அபயாம்பிகா பிலிம்ஸ்**

ஆர். நல்லகண்ணு பேட்டி

வலது கம்யூனிஸ்டின் மாநிலப் பொதுச் செயலாளர் ஆர். நல்லகண்ணு கோவை மக்களவைத் தொகுதியில் போட்டியிடுகிறார். சென்ற தேர்தலில் பா.ஜ.க. வேட்பாளர் சி.பி. ராதாகிருஷ்ணன் தமிழகத்திலேயே அதிக வாக்குகள் வித்தியாசத்தில் (சுமார் ஒன்றரை லட்சம்) வென்ற தொகுதி இது. எனினும், வெற்றி உறுதி என்கிற பூரண நம்பிக்கையுடன் இங்கே பிரசாரத்தைத் துவக்கியிருக்கும் நல்லகண்ணுவைச் சந்தித்தோம்.



மக்களவைத் தேர்தலிலேயே இதுவரை போட்டியிடாத நீங்கள், தற்போது அதில் – குறிப்பாக கோவைத் தொகுதியில் போட்டியிட விசேஷக் காரணம் ஏதும் உள்ளதா?

ஏற்கெனவே எங்கள் கட்சி சார்பில் பாலதண்டாயுதம், பார்வதி கிருஷ்ணன் ஆகியோர் பலமுறை வென்ற தொகுதி. மார்க்சிஸ்ட் தோழர் ரமணியும் இங்கே வென்றிருக்கிறார். தொழிலாளர்கள் நிறைந்த பகுதியும்கூட. ஆரம்ப காலத்திலிருந்தே தொழிலாளர் போராட்டங்கள், அவர் தம் எழுச்சிப் பேரணிகள் இங்குதான் நடந்துள்ளன. இடதுசாரி இயக்க ஆதரவும், தொழிலாளர் நிறைந்த வலுவான இடமாகவும் இது இருப்பதனால் கூட்டணியில் இத்தொகுதியை விரும்பிக் கேட்டோம். கொடுத்தார்கள். இதில் நான் போட்டியிட வேறு விசேஷக் காரணம் ஏதுமில்லை.

இந்த மக்களவைத் தொகுதியில் வென்று சென்ற இடதுசாரித் தலைவர்கள் – குறிப்பாக வ.கம்யூ தோழர்கள் தொகுதியைப் பொறுத்தவரை எதுவுமே செய்ததில்லை. டெல்லியிலேயே 'டேரா' அடித்து விட்டவர்கள். இவர் மட்டும் என்ன செய்து விடப் போகிறார் என மக்களிடம் ஒரு பொதுவான பார்வை தெரிகிறதே! அதை எப்படி சரிக்கட்டப் போகிறீர்கள்?

நீங்கள் சொல்லுவது போல் அப்படியொரு எண்ணம் மக்கள் மத்தியில் இருப்பதாகத் தெரியவில்லை. இதற்கு முன் எம்.பி.யாக இருந்தவர்களும் இங்கே மிகப் பெரும் தொழிற்சங்கத் தலைவர்களாக இருந்தவர்கள்தான். இன்றும் மக்களுடைய உரிமைக்காகப் போராடுகிற தலைவர்களாகவே இருக்கிறார்கள். பாலதண்டாயுதம் இங்கேயே இருந்து வேலை செய்தார். விபத்தில் சிக்கி இறந்து போனதாலேயே அவர் பணி நின்று போனது. பார்வதி கிருஷ்ணன் பலமுறை எம்.பி.யாக இருந்தார். ரமணி (இ. கம்யூ) இருந்தார். தொடர்ந்து அவர்கள் செய்து வந்த மக்கள் பணியையே நானும் செய்து வருவேன்.

நீங்கள் 'மண்ணின் மைந்தர் அல்ல', 'வென்றால் தொகுதிக்கே வர மாட்டீர்கள்' என்கிற பிரசாரத்தை பா.ஜ.க. உங்களுக்கு எதிராக நடத்துகிறதே, இந்நிலையில் உங்கள் பிரசார உத்தி எப்படி?

எங்கள் இயக்கத்தின் முழுநேர ஊழியன் நான். கட்சி இட்ட பணியைச் செய்யவே கடமைப்பட்டவன். அதனால் 'மண்ணின் மைந்தர் அல்லர்' என்கிற பிரசாரம் எடுபடவே வாய்ப்பில்லை. பா.ஜ.க தலைவர்கள் எல்லாம் அவரவர் பிறந்த மண்ணிலா போட்டியிடுகிறார்கள்? அப்படி யாரும் இங்கே குறுகிய வாதம் கற்பித்திட முடியாது. பி.ஜே.பி.யை அரசியல் கொள்கை ரீதியிலேயே எதிர்க்கிறோம். 'உழைக்கும் மக்களை ஜாதியின் பெயரால் மதத்தின் பெயரால் பிளவுபடுத்துவது – அந்தக் கொள்கையை விடாப் பிடியாய்ப் பற்றிக் கொண்டிருப்பது' என்பதை மக்கள்

வெற்றி நிச்சயம்!

மத்தியில் இன்னும் வலுவாகப் பிரசாரம் செய்வோம்.

பொதுத் துறையெல்லாம் தனியார் துறைக்கு மாற்றிக் கொண்டிருப்பது பி.ஜே.பி. அரசுதான். 'சுதேசி'ன்னு பேசிக் கொண்டு 'விதேசி'க் கம்பெனிகளுக்கு இது கடை விரித்துள்ளது. பல்வேறு தொழில்கள் மூடப்பட்டதும் இவர்கள் ஆட்சியில்தான். பஞ்சாலை, பனியன் என மூடப்படாத தொழில்களே இல்லை எனலாம். மதக் கலவரத்தினால் வியாபாரமே பாதிப்பு, விலைவாசி உயர்வு. தொடர்ந்து தவறுகளைச் செய்ததைத் தவிர பி.ஜே.பி வேறென்ன சாதனை நிகழ்த்தியுள்ளது?

• **பா.ஜ.க. அரசு வந்த பின் கலவரம் இல்லை. குண்டு வெடிப்பு இல்லை. மக்களுக்குப் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்கிற பிரசாரம்தானே கோவையில் அதிகமாக உள்ளது?**

இது தவறான கருத்து. கலவரம் என்று வந்ததும், இந்தியாவின் கௌரவமே உலக அரங்கில் பாதிக்கப்பட்டதும் பாபர் மசூதி இடிப்புக்குப் பிறகுதான். இதுதான் உண்மை. சரி, இந்தப் பதிமூன்று மாத காலத்தில் மட்டும் என்ன நடந்தது? குஜராத்தில் கலவரம். ஒரிசாவில் பாதிரியார் கொல்லப்பட்டார். சமீபத்தில் அகமதாபாத்தில் பஜ்ரங்தல்லும், சிவசேனையும் சேர்ந்து அடித்த கொட்டம். பயங்கர விளைவுகள்! பம்பாய், மத்தியப் பிரதேசத்தில் நடந்த துயரச் சம்பவங்கள். இதெல்லாம் யாருடைய தூண்டுதல்?

பொதுவாக கம்யூனிஸ்டு இயக்கங்களில் உள்ள மூத்த தலைவர்கள் புதியவர்களுக்கும், இளைஞர்களுக்கும் வழி விடுவதில்லை என்றொரு விமர்சனம் உண்டு. தற்போது கோவையில்கூட வேறு ஒருவரை (எஸ். கண்ணன்) வேட்பாளராக நிறுத்த இருந்ததாகவும், நீங்களே தலையிட்டு, வாய்ப்புக் கேட்டுப் போட்டியிடுவதாகவும் பேச்சு இருக்கிறதே?

அப்படியொன்றும் நாங்கள் இளைஞர்களையும், புதியவர்களையும் விலக்கி வைத்து விடவில்லை. பி.ஜே.பி.யை எதிர்க்க மாநிலச் செயலாளரை நிறுத்தினால் ஓர் அரசியல் முக்கியத்துவம் இருக்கும் என்கிற முறையில் ஏகமனதாக அனைவரும் சொல்லித்தான் இங்கே வேட்பாளராக என்னை நிறுத்தினார்கள்.

நீண்ட கால தி.மு.க. உறவைப் பேணி வந்த வ.கம்யூ தற்போது ஊழல் அ.தி.மு.க.வுடன் கை கோத்துக் கொள்ளும் சூழல் வந்து விட்டதே? வருத்தம் ஏதும் இல்லையா?


நாங்கள் தெளிவான அரசியல் குறிக்கோளோடுதான் இருக்கிறோம். 'மத்தியில் எந்த ஆட்சி வரக் கூடாது; எப்படிப்பட்ட அமைச்சரவை அமைய வேண்டும்' எனும் தெளிவோடுதான் இயங்குகிறோம். நாட்டில் மதம் சார்ந்து – வெறி கொண்ட கட்சி ஆட்சிக்கு வந்தால் நாட்டின் ஒற்றுமை பாதிக்கும். அமைதி கெடும். தொழில்கள் அழியும். தேசத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியே ஒடுங்கிப் போகும். அது வராமல் தடுக்கவே எங்கள் மையம் இயங்கி வருகிறது. அதைக் குறிக்கோளாக வைத்தே தி.மு.க.வையும் ஆதரித்தோம். இப்போது அவர்கள்தான் எங்களை விட்டுச் சென்றிருக்கிறார்கள். அவர்கள்தான் சந்தர்ப்பவாதக் கொள்கை வழி போனார்களேயொழிய நாங்கள் பழைய பாதையிலேதான் உள்ளோம். பொது எதிரியை வீழ்த்துவதற்கு வரும்பொழுது, அதனை எதிர்க்கக் கூடியவர்களுடன் சேர்ந்து இயங்குகிறோம்.


இங்கே தங்கள் கூட்டணிக் கட்சிகளின் ஒத்துழைப்பும், வெற்றி வாய்ப்பும் எப்படி?

இங்கே மட்டுமல்ல – தமிழ்நாடு முழுக்கவும் எங்கள் கூட்டணிக் கட்சிகள் துளி பாரபட்சம் காட்டாது செயலாற்றி வருகின்றன. மக்கள் திரண்டு வந்து ஆரம்பம் முதலே வாழ்த்துச் சொல்லியபடி இருக்கிறார்கள். அதன்படி பார்த்தால், நாற்பது தொகுதிகளிலும் இந்த அணிதான் வெல்லப் போகிறது.

பேட்டி: **கேயெஸ்வி**

வண்ணங்களோடு வாழ்கிறவர்கள்!





• சிமென்ட், ரெட் ஆக்ஸைட் கலவை தயாராகிறது...



• ஓடை மண் சலிக்கப்படுகிறது...

• மோல்ட் தயாரிக்கிறார் பெரியண்ணன்





• கண்ணாடி பிளேட்டில் 'கலர் உற்சவம்'.

இன்று புதிதாகக் கட்டப்படும் வீடுகளிலோ, ஃப்ளாட்களிலோ சிமெண்ட் தரைகளைப் பார்க்க முடியாது; மொஸைக்தான். பெரிய நிறுவனங்கள் அழகழகான மொஸைக் கற்களைத் தயாரித்து தரத்தில் மட்டுமல்லாமல் விலையிலும் பிரமிப்பூட்டிக் கொண்டிருக்கின்றன.

"நாங்கள் தயாரிக்கும் மொஸைக் கற்கள் தரத்தில் மட்டும்தான் பிரமிப்பூட்டும். விலைபடு மலிவு" என்கிறார்கள் காரைக்குடிக்கு அருகிலுள்ள ஆத்தங்குடி கிராமத்தினர்.

இயந்திர சம்பந்தம் ஏதுமில்லாமல், வெறும் கைகளைக் கொண்டே இவர்கள் உருவாக்கும் மொஸைக் கற்கள் ('பூக்கல்'



• 'டை' வைத்து, வண்ணம் சேர்த்து...

களைப் பதித்து, போகிற, வருகிறவர்களின் கவனத்தை ஈர்க்கிறார்கள். இந்தியாவிலேயே இப்படிக் கைகளால் மொஸைக் டைல்ஸ் தயாரிக்கப்படுவது தங்கள் ஆத்தங்குடி கிராமத்தில் மட்டும்தான் என்பதில் இவர்களுக்கு ஏகப் பெருமை.

"மொஸய்க் கல்லுக்கும் நாங்க தயாரிக்கிற பூக் கல்லுக்கும் வழ வழப்பு ஒண்ணு தாங்க பொதுவான ஒரே ஒற்றுமை. மத்தபடி நிறைய



• தயாரான மோல்ட்கள் காய்கின்றன...



• பூக்கல் ரெடி!

என்கிறார்கள்). கிராமம் முழுவதும் எங்கு பார்த்தாலும் வண்ண மயமாக ஜொலிக்கின்றன.

வெட்டவெளியில், வெயிலில் தான் வேலை செய்கிறார்கள் என்றாலும் உட்கார்ந்து சாப்பிட, ஓய்வெடுக்கவென இவ்வுழைப்பாளிகள் தாற்காலிகமாகத் தாம் பணி புரியும் இடங்களில் கட்டிக் கொண்டிருக்கும் குட்டித் திண்ணைகளில் கூட இந்தப் பூக்கற்



• கண்ணாடியைப் பிரித்ததும் 'கலர்ஃபுல்' கல் ரெடி!



• நாகராஜன்

வித்தியாசம் இருக்குங்க" என்று அடுக்கும் இவர்கள் சுட்டிக் காட்டும் முக்கிய வித்தியாசம்: மொஸைக் தரை, நடக்க நடக்க பளபளப்பும் வழவழப்பும் மங்கும். ஆனால் இந்த ஆத்தங்குடி பூக்கல், புழங்குவதாலேயே பொலிவு பெறுமாம்! "நடக்க நடக்க ஷைனிங் ஏறுங்க" என்கிறார்கள்.

அப்படி என்ன விசேஷம் இதில்?

"மண்ணுதான் காரணம். இந்தப் பக்கத்துல கிடைக்கற தரமான ஓடை மண் வேறெங்கும் கிடைக்கறதில்லைங்க. மண்ணுல பிசுபிசுப்பும் இருக்கணும். அதே சமயம் உறுதியும் வேணும். இந்த மண்ணை சலிச்சி, சிமெண்ட், ரெட் ஆக்ஸைடு சேர்த்து கலவை தயாரிப்போம். அப்புறம் கண்ணாடி பிளேட்ல ரெட் ஆக்ஸைடை ஊற்றி, மேலே கலவையை அடைச்சி மோல்ட் வைக்கிறது. என்ன மாதிரி பூ டிசைன் வேணும்னாலும் அதுக்கேத் தாப்பல 'டை' செய்துக்கறதுதான். மோல்ட் காய, ப்ளேட்டை எடுத்தா கல்லு ரெடி!" என்று தமது தயாரிப்பு முறையை விளக்கும் பெரியண்ணன்(எவரெஸ்ட் பூக்கல்) அதைச் செய்து காண்பித்தபோது பிரமிப்பு உண்டானது.

சராசரியாக ஒன்பது விநாடிகளில் ஒரு மொஸைக் கல் தயாரித்து விடுகிறார்கள்!

ஒரு நாளைக்கு, ஒரு நபர் சுமார் இருநூறு கற்கள் தயாரிக்க முடியும் என்று புள்ளி விவரம் தருகிறார் பெரியண்ணன்.

ஓவியர்களைக் கொண்டு மரபு சார்ந்த வண்ண/வடிவங்களில் முதலில் கோலங்கள் வரைந்து கொள்வதும் அதைப் புகைப்படமெடுத்து, அதனடிப்படையில் 'டை' தயாரித்துக் கொள்வதும்தான் இதன் பூர்வாங்கப் பணிகள்.

பொதுவாக மொஸைக் கல் பதிக்கப்பட்டதும் அதற்கு வழவழப்பு ஏற்ற 'மெஷின்' ஓட்டுவார்களல்லவா?

இந்தப் பூக்கல்லுக்கு அந்தச் சடங்கு தேவையில்லை!

கல் தயாரிப்பதே கண்ணாடித் தகட்டின் மீது வைத்துத்தான் என்பதால், காயக்காய, கண்ணாடியின் வழவழப்பை, கல்லின் மேற்புறம் அப்படியே சுவீகரித்துக் கொண்டு விடுகிறது!

"ஆத்தங்குடியில் மட்டும் சுமார் முப்பது பூக்கல் தயாரிப்பு நிலையங்கள் இயங்குவதாகச் சொன்னார் உமா ஃப்ளவர் டைல்ஸ் உரிமையாளர் நாகராஜன்.

ஒருசில வடகிழக்கு மாநிலங்கள் தவிர, நாடெங்கும் புதிதாக உருவாகும் வீடுகளுக்கும் கட்டடங்களுக்கும் ஆத்தங்குடியிலிருந்து மொஸைக் கற்கள் அனுப்பப்படுகின்றன என்றார் நாகராஜன்.

"கற்களில் வெறும் கோலங்கள் மட்டும் தான் போடுகிறீர்களா? அல்லது வேறு டிசைன்களும் உண்டா?" என்றதற்கு, "வெறுமனே வண்ணத்தெளிப்புகள் மட்டுமே சாதாரண மொஸைக் கற்களுக்கு உண்டு. இதில் நாங்கள் கோலம் போட்டுக் காட்டுவதற்கே ஏக வரவேற்பு. வேறெந்த வகை ஓவியத்தையும் இதில் கையாள இயலும். வாடிக்கையாளர் விருப்பம்!" என்கிறார்கள்.

சமீப காலமாக, குழந்தைகள் பால் குடிக்கும் 'நிப்பிளை' ஒரு குச்சியில் கட்டி, வண்ணக் குழம்பின் மீது லேசாகத் திட்டி விதவிதமாக 'மாடர்ன் ஆர்ட்' உருவங்களையும் தயாரித்து வருவது பற்றிக் குறிப்பிட்டார்கள் இங்கே பணிபுரியும் சித்ராவும் அன்னக்கொடியும். விதவிதமான வண்ணச் சேர்க்கைகளின் மூலம் எப்படியெல்லாம் அழகிய பூக்கற்களை உருவாக்குவது என்பதே இவர்களது நிரந்தர சிந்தனையாக இருக்கிறது.

"இந்த கிராமத்தில் மட்டும் தானா? அல்லது...?"

"இப்ப கொஞ்ச நாளா சிவகாசி, மதுரைப் பக்கமும் இந்தத் தொழில் பரவியிருக்குங்க. புதுசா யாரும் வரலை. எல்லாம், இங்கேருந்து போனவங்கதான்!" என்றார் நாகராஜன்.

மிகுந்த லாபம் தரத்தக்க இந்தக் கைத்தொழில் இன்னும் பரவலாகவில்லை. "தமிழ்நாட்டைவிட வெளி மாநிலங்களில் இதுக்கு மவுசு ஜாஸ்தியா இருக்கு சார்!" என்கிறார் பெரியண்ணன்.

கல்லிலே கலைவண்ணம் காட்டும் இந்தக் கைவினைஞர்களை நம்மவர்கள் கொஞ்சம் கவனிக்க வேண்டும்.

— ஔரங்கசீப்

உதவி: கே. சிங்காரவடிவேல்

படங்கள்: ஸ்ரீஹரி

பூவெல்லாம் கேட்டுப்பார்

பிரிந்து போன இரு இசையமைப்பாளர்களைப் (நாசர், விஜயகுமார்) பிள்ளைகள் (சூர்யா, ஜோதிகா) காதலித்து சேர்த்து வைக்கிற கதை.

"அதென்ன 'பால்பாண்டி'ன்னு ஒரு பேரா? உங்கப்பா பேரென்ன?"

"வெண்ணெய் கோவிந்தன்."

"உங்க தாத்தா பேரென்ன, தயிர்வடை தேசிகனா? சுத்த ஆவின் குடும்பமாவுல்ல இருக்கு?" – இப்படிப் படம் முழுக்க கிரேஸி மோகனின் கடியும் காமெடியும் கலந்த வசனங்கள். இருந்தாலும், அதற்குள் மூழ்கி விடாமல், சாமர்த்திய மாய்த் திரைக்கதையை நகர்த்திச் செல்லும் டைரக்டர் வஸந்துக்கு ஒரு பொக்கே கொடுத்தால் தப்பில்லை.

சூர்யாவின் அமைதி + அலட்டாத நடிப்பு கனகச்சிதம். நடனத்தில் எத்தனை முன்னேறி விட்டார்! தவிர்க்க முடியாத நெருக்கடி நேரங்களில் ஒரு மத்தாப்புப் புன்னகையால் சமாளித்து, அடுத்ததற்குத் தாவிவிடும் லாகவம் பிரமாதம்.

ஹீரோயின் ஜோதிகா, நக்மாவின் சொந்தச் சகோதரி. முகபாவத்தில் மட்டுமே ஒற்றுமை. மற்றபடி, கவர்ச்சியெல்லாம் காட்டாமல் கச்சிதமாக நடிக்க வருகிறது.

தமிழ்ச் சினிமாவில் இணைந்தும் பிரிந்தும் போன இசை இரட்டையர்கள் இரண்டு மூன்று ஜோடி உண்டு. இன்னார்தான் என்று யூகிக்க விடாமல் சம்பவங்களைப் புரட்டிப் போட்டு யோசிக்கவிட்டிருக்கும் சாமர்த்தியம் ஒரு புறம் என்றால், ஏராள சினிமாக்காரர்களை பீஸ் பீஸாகக் கிழித்து விமர்சித்திருக்கும் தைரியம் பிரமிப்பூட்டுகிறது.

ரொம்ப ஜாலியாகச் சில பிரபல திரை முகங்களையே சம்பந்தப்பட்ட காட்சிகளில் பயன்படுத்தியிருப்பது இன்னொரு வியப்பு.

இசையமைப்பாளர்களைப் பற்றிய கதைக்கு இசை உதவாவிட்டால் எப்படி? பொடிப் பயல் யுவன் சங்கர், பதினாறடிக்கும் மேல் பாய்ந்திருக்கிறான். ராஜா பெருமைப்பட்டுக் கொள்ள அந்தப் 'பூவெல்லாம் மெத்தைகளானது யாராலே?' ஒன்று போதும்.

கட்டுக்கோப்பான கதையும் திரைக்கதையும். ஆபாசமில்லாத காமெடி. மெத்துமெத்தென்று ஒளிப்பதிவும் இசையும். போதாது?

மீண்டும் ஒரு 'வஸந்த' காலம்.

மலபார் போலீஸ்

பாலக்காட்டில் ஒரு கேரள அமைச்சர் கொல்லப்படுகிறார். கொலையைக் கண்ணால் பார்த்த அப்பாஸும், மும்தாஜும் (காதலர்கள்) சென்னைக்கு ஓடி விடுகிறார்கள். துப்பறிய சென்னை வருகிற சத்யராஜ் ஒரு 'மலபார் போலீஸ்'.

தமிழ் சினிமா சென்டிமென்ட்ஸுக்குக் கொஞ்சம் கூட விதிவிலக்கில்லாத படம். குஷ்பூ உணர்ச்சிவசப்பட்டால் கர்ப்பம் கலைந்து விடும் அபாயம். சத்யராஜ் டென்ஷனானால் உயிர் போகும் அபாயம்.

போதாக்குறைக்கு, சென்னைக்கு வந்து இறங்கியதும் விதிவசத்தால் – ஸாரி – வில்லன் வசத்தால் பிரிந்து போன காதலர்கள் அப்பாஸும் மும்தாஜும் பக்கத்தில் பக்கத்திலிருந்தும் ஒருவரை ஒருவர் பார்க்க முடியாத 'பரிதாப' சூழ்நிலை. ஒரு டிபார்ட்மென்ட் ஸ்டோரில் ஆனந்தராஜ் அப்பாஸைத் துரத்தோ துரத்து என துரத்துகிறார். வில்லனுக்கு பயந்து ஒரு 'ரேக்'கின் இரு பக்கமும் ஒளிந்து ஒளிந்து மும்தாஜும் அப்பாஸும் ஒருவரை ஒருவர் பார்க்காமலேயே பிரிந்து போகிறார்கள். சத்யராஜ் வீட்டுக்கு வேலைக்காரியாக சேருகிறார் மும்



மலபார் போலீஸ்

தாஜ். அப்பாஸை அதே வீட்டில் விசாரணைக்காகப் பூட்டி வைக்கிறார் சத்யராஜ். அப்பவாவது காதலர்கள் சந்திக்கிறார்களா?

அதுதான் இல்லை. இருட்டில் மும்தாஜ் முகத்தில் சட்டையைப் போர்த்தி விட்டு தப்பித்து ஓடுகிறார் அப்பாஸ். லைட்டைப் போட்டுப் பார்த்த மும்தாஜ் அதிர்ந்து போகிறார். அது அப்பாஸுக்கு மும்தாஜ் கிஃப்டாகக் கொடுத்த சட்டை. புல்லரிக்கிறது.

எஸ்.ஏ. ராஜ்குமார் இசையில் 'என் கண்ணாடி பேசவில்லை' பாடல் சுகம்.

சத்யராஜ் தமிழும் இல்லாமல், மலையாளமும் இல்லாமல் பேசுகிற மொழி கொஞ்சம் ஓவர் டோஸ். அதிலும், படம் முழுக்க மிக நீ.ளமான வசனங்களையே பேசுகிறார்.

கவுண்டமணியும் சத்யராஜூம் இணைந்து காமெடி கடிக்குப் பயன்படுத்திய மொட்டை பிளேடில் நம் காது புண்ணானதுதான் மிச்சம்.

பழைய சென்டிமெண்ட்ஸ், நீளநீளமான வசனங்கள் எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டால் கடைசிப் பத்து நிமிட க்ளை மாக்ஸை ரசிக்கலாம்.



ரோஜாவனம்

அடராமா!

'ரோஜாவனம்' என்ற முதியோர் இல்லத்தில் வேலை பார்க்கும் கார்த்திக், ரோஜாவனத்திற்காகத் தன் காதலைத் தியாகம் செய்வது தான் கதை.

எம் ஆண்டவரே!

சினிமாவில் லாஜிக் பார்ப்பது அபத்தம். அதற்காக 'சினிமா லாஜிக்' கூட இல்லையென்றால் எப்படி?

ஒரு காட்சியில் லைலா கார்த்திக்கை காரில் உட்காரச் சொல்லி கதவை மூடிவிட்டு. "உன் மனசுல என்ன இருக்குன்னு சொல்ற வரைக்கும் காரை நிறுத்த மாட்டேன்" என்கிறார். வேகமாக காரை ஓட்டி, மரத்தில் மோதி மயக்கமாகிறார். மயக்கம் தெளிந்ததும், கார்த்திக் கொண்டு வந்த டாக்ஸியில் சிரித்தபடி ஏறி வீட்டுக்குப் போகிறார்.

அட தேவுடா!

முதியோர் இல்லத்தின் அத்தனை உறுப்பினர்களும் கார்த்திக்கின் காதலுக்காகப் பாடுபடுகிறார்கள். லைலா சைடிலிருந்தும் காதலுக்கு க்ரீன் சிக்னல் கிடைத்து விடுகிறது. லைலாவின் தந்தை மறுப்பே இல்லாமல் கல்யாணத்துக்கு ஓகே சொல்லி விடுகிறார். கார்த்திக் மட்டும் காதலைத் தியாகம் செய்தே தீருவேன் என்று பிடிவாதம் பிடிக்கிறார்.

என்ட குருவாயூரப்பா!

கதைப்படி கார்த்திக் ஹீரோ. லைலா ஹீரோயின். மற்றபடி சிறப்பாகச் சொல்லுவதற்கு ஒன்றுமில்லை.

மாளவிகா ஒரு கனவுக் காட்சியில் கார்த்திக்குடன் டூயட் பாட வேண்டும் என்பதற்காகப் படம் முழுக்க வருகிறார்.

கலகலப்புக்கு காக்கா ராதாகிருஷ்ணனும், அவருடைய 'கனீர்' வசனங்களும். படத்தின் ஒரே ஆறுதல் இவர்தான். அதனால்தானோ என்னமோ திடீரென்று கதைப்படி செத்துப் போகிறார்.

ஏடுகொண்டலவாடா, வெங்கடரமணா!

டைரக்டர் செல்வாவுக்கு அருமையான களம் (முதியோர் இல்லம்) கிடைத்திருக்கிறது. இடையில் காதலைப் பிரதானமாக இழைய விட்டதில் பூக்கள் உதிர்ந்து போய் முட்கள் மட்டுமே நீட்டிக் கொண்டிருக்கின்றன.

— கே.பி.எஸ்.

ஜாகிர் உசேன் என்றதும் தபலா ஞாபகம் வரும். இனி நடன ஞாபகமும் கூடவே வரும்! இந்த இளைஞரின் சுவாரசியமான அனுபவங்களைப் படியுங்கள்.

ஓட்டல் வேலை

எனக்கு சொந்த ஊர் சேலம். என் குடும்பம் தீவிரமான இஸ்லாமியக் குடும்பம். அப்பா பள்ளிக்கூட ஆசிரியர். அவர் எனக்கு அளித்த பெரும் சொத்து என்று நான் இன்றைக்கும் கருதுவது, சிறு வயது முதலே பல விதமான புத்தகங்களை எனக்குப் படிக்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தது தான். பள்ளி நாட்களிலேயே எனக்கு சிலப்பதிகாரம் சொல்லிக் கொடுத்திருக்கிறார். இஸ்லாம் சம்பந்தப்பட்ட நூல்களை மட்டுமின்றி இந்து சமயப் புராணங்கள், இலக்கியங்களில் ஈடுபாடு ஏற்படுத்தியவரும் அவர் தான்.

ஐந்தாறு வயது முதலே நடனத்தில் ஆர்வம் ஏற்பட்டது எனக்கு. சினிமாக்களில் கூட மற்ற காட்சிகளைவிட, நடனக் காட்சிகள் என்றால் நான் மெய் மறந்து பார்த்துக் கொண்டிருப்பேன்.

பள்ளிக்கூடம் முடித்த பிறகு, என்னை டெக்ஸ்டைல் டெக்னாலஜியில் டிப்ளமா படிப்பில் சேர்த்தார்கள். ஆர்வமாகத்தான் படித்தேன். இரண்டாவது வருடம் படிக்கிற போது, சேலம் நகரத்துக் கல்லூரிகளுக்கிடையில் கலைவிழா நடந்தது. அதிலே நான் ஒரு டான்ஸ் ஆடினேன். ஒரே பாராட்டு! அவ்வளவுதான்! நடனம் கற்றுக் கொள்ள வேண்டும் என்கிற ஆசை துளிர்விட்டது!

படிப்பு முடியும் வரை நடனம் கற்றுக் கொள்ளும் ஆர்வம் பற்றி, வீட்டில் மூச்சு விடவில்லை.

வேலைக்குப் போக எனக்கு விருப்பம் இல்லை. அப்பாவின் வற்புறுத்தலுக்காக, அவர் வாங்கிக் கொடுத்த சேல்ஸ் ரெப்ரசன்டேடிவ் வேலைக்குப் போனேன். கழுத்தில் டை கட்டிக் கொண்டு, படி ஏறி இறங்கி ஆர்டர் பிடிப்பது பிடிக்கவில்லை. இரண்டு மூன்று வாரம் கூடத் தாக்குப்பிடிக்க முடியவில்லை. வேலையை விட்டு விட்டேன். வீட்டில் செமை டோஸ்!

வேலைக்குப் போகாமல் சும்மா இருந்தேன். தண்டச்சோறு என்று வழக்கம் போலப் பட்டம் கிடைத்தது. அதுவும், சாப்பிட உட்கார்ந்து, பாதி சாப்பிட்டுக் கொண்டிருக்கிறபோதுதான் அர்ச்சனை ஆரம்பமாகும். கோபித்துக் கொண்டு எழுந்து விடுவேன்.

இனியும், அவமானங்களைப் பொறுத்துக் கொண்டு வீட்டில் இருப்பது சாத்தியமில்லை என்ற முடிவுக்கு வந்தேன். 'எனக்கு பரத நாட்டியம் கற்றுக் கொள்ள ஆசை. வேறு எதிலும் எனக்கு நாட்டம் இல்லை' என்று முதல் தடவையாக என் எண்ணத்தை வெளிப்படுத்தினேன்.

"இதை மூன்று வருஷத்துக்கு முன்னாலேயே சொல்லியிருந்தால், உன் படிப்புக்கு வீணாக செலவழித்திருக்க மாட்டேனே?" - இதுதான் என் அப்பாவின் ரியாக்ஷன். வாதப் பிரதிவாதங்களால் நிலைமை சீரியஸானது.

"நீ பரதநாட்டியம் கற்றுக் கொள்ள நான் ஆசிர்வாதம் வழங்க மாட்டேன்" என்றார் அப்பா.

"அப்போ நான் வீட்டை விட்டுப் போகிறேன்" என்றேன்.

"அதை நான் தடுக்கவும் மாட்டேன்" என்று அப்பா சொல்லிவிட்டார். நான் வீட்டைவிட்டு வெளியேறி, சென்னைக்கு ரயிலேறினேன்.

நேராக நான் சென்றது காஞ்சிபுரம் தான். கொட்டும் மழை. அதற்கு முன்னால் காஞ்சிபுரம் போனது கிடையாது. பஸ்ஸை விட்டு இறங்கி, வழி கேட்டுக் கொண்டு, காஞ்சி மடத்துக்குப் போனேன்.

மகா பெரியவரை தரிசித்தேன். அடுத்து ஜெயேந்திரர். என் உருவம், பைஜாமா உடை இவற்றைப் பார்த்துவிட்டு, நான் வட



• ஜாகிர் உசேன்

நாட்டிய மேடை!

இந்தியாவிலிருந்து வந்திருக்கிறேன் என்று நினைத்துக் கொண்டு விட்டார் போலும்!

இந்தியில் விசாரித்தார்.

என் பெயர் ஜாகிர் உசேன் என்றதும் கண்கள் லேசாய் விரிந்தன. நான் பரத நாட்டியம் கற்றுக் கொள்ளப் போகிறேன் என்றதும் சற்றே வியப்புடன், புன்னகைத்தார். ''முழுமையான ஈடுபாட்டுடன் கற்றுக் கொள்; அமோகமாய் வருவாய்'' என்று ஆசி வழங்கினார்.

அடுத்து சென்னையில் நான் சந்தித்தவர் நடனக் கலைஞர் சித்ரா விஸ்வேஸ்வரன். சேலத்தில், நான் பல்வேறு முன்னணி நடனக் கலைஞர்களின் நடன நிகழ்ச்சிகளையும் பார்த்திருந்தாலும், சித்ரா அக்காவின் நடனம்தான் என்னை மிகவும் கவர்ந்தது.

அவரைச் சந்தித்து, என்னைப் பற்றிச் சுருக்கமாக அறிமுகம் செய்து கொண்டு, நடனம் கற்க வேண்டும் என்றதும், வழக்கமாகப் பெண்களுக்கு மட்டுமே நடனம் சொல்லித் தரும் அவர் எனக்கும் நடனம் கற்றுக் கொடுக்கச் சம்மதித்தார்.

கோடம்பாக்கத்தில் ஒரு நண்பருடன், வாடகை ஏதும் தராமல் தங்கிக் கொண்டேன். சாப்பாட்டுக்கு? அதற்கும் ஒரு வழி கிடைத்தது. அண்ணா சாலையில் உள்ள ஒரு ஓட்டலில் பில் போடும் கவுண்டரில் உதவியாளர் வேலை. காலை ஆறு மணி முதல் மாலை நாலு மணிவரை ஓட்டல் வேலை. நாலு மணியிலிருந்து ஆறு மணி வரை நடன வகுப்பு. மறுபடி ராத்திரி பத்து வரை ஓட்டல் வேலை. இதில் என்ன ஒரு சௌகரியம் என்றால், மூன்று வேளை உணவு இலவசமாகக் கிடைத்தது. என் நிலைமையைக் கேட்டு, கட்டணமின்றியே எனக்கு நடனம் சொல்லிக் கொடுத்தார் சித்ரா அக்கா.

ஒரு நாள், பாரத் கலாசார் அரங்கில் பத்மா சுப்ரமணியத்தின் 'ராமாயதுப்யம்' நாட்டிய நாடகம் பார்க்கச் சென்றிருந்தேன். ஒரு சில காட்சிகளில் என்னையும் மீறி நாட்டியத்தில் இன்வால்வ் ஆகி, அழுதுவிட்டேன். என் பக்கத்து சீட்டில் அமர்ந்திருந்தவர் என் நடன ஈடுபாடு கண்டு ஆச்சரியப்



"தலைவருக்கு கிரிக்கெட் பைத்தியம் இன்னும் விடலை!"

"எப்படி?"

"தேர்தல் 'டை'யில் முடிந்தா என்ன பண்றதுன்னு கேட்கறாரு!"

– பா. ஜெயக்குமார்

பட்டு விசாரித்தார். சித்ரா அக்காவிடம் நடனம் பயில்வது, ஓட்டல் வேலை பற்றியெல்லாம் வெளிப்படையாகச் சொன்னேன்.

'நான் உனக்கு உதவ ஏற்பாடு செய்கிறேன்! கவலைப்படாதே!' என்று தட்டிக் கொடுத்தார். அவர் ஓய்.ஜி.பி.!

தம் மனைவியிடம் என்னைப் பற்றிச் சொல்லி உதவிகளுக்கு ஏற்பாடு செய்யச் சொன்னார். அவர் ஏற்பாட்டின்படி என்ஃபீல்டு விஸ்வநாதன், ரஜினிகாந்த் ஆகியோர் எனக்கு மாதா மாதம் உதவித் தொகை தர முன் வந்தனர்.

சித்ரா அக்காவும், "ஓட்டல் வேலையை விட்டுவிடு. என் நடனப் பள்ளி சம்பந்தப்பட்ட வேலைகள், பொது ஜனத் தொடர்புப் பணிகளை கவனித்துக் கொள். உன் நடன வகுப்பு நேரம் தவிர, மற்ற நேரங்களில் மற்றவர்கள் ஆடுவதை கவனி" என்றார். மாதா மாதம் அவரும் பணம் கொடுத்து உதவினார்.

பயிற்சி, பயிற்சி... கடுமையான பயிற்சி! பள்ளிக் கூடத்துப் பிள்ளைகள் ஹோம் ஒர்க் செய்வது போல, ஒவ்வொரு நாளும் பரத நாட்டிய வகுப்பில் சொல்லித் தந்தவைகளை, வீட்டுக்குப் போய் மறுபடி மறுபடி நடனமாடிப் பார்ப்பேன்.

'93ம் வருடம், மைலாப்பூர் பைன் ஆர்ட்ஸ் அரங்கில் என் அரங்கேற்றம். வீட்டை விட்டு வெளியேறிய பின், நான் சந்திக்காமல் இருந்த பெற்றோர்களைச் சந்தித்து, என் அரங்கேற்ற அழைப்பிதழைக் கொடுத்துவிட்டு வந்தேன். அரங்கேற்ற நாளன்று எப்படியும் அவர்கள் வருவார்கள் என்று நம்பிக்கையோடு இருந்தேன். ஆனால், யாருமே வரவில்லை. எனக்கு சோகம் கொப்பளித்தது. சித்ரா அக்காவுக்கு டெலிபோன் செய்து, அழுது விட்டேன்.

ஒரு சின்னக் குழந்தை போல அழுத என்னை, "யாரும் வராவிட்டால் என்ன? நான் உனக்குத் தாய், தந்தை, குரு எல்லாமாக இருக்கிறேன். நீ எதற்கும் கவலைப்படாதே" என்றார்! அந்த வார்த்தைகள் எனக்குள்ளே டானிக்காய் வேலை செய்தன.

ஆனால் அன்று பிற்பகல் மூன்று மணிக்கு என் அம்மாவும் தம்பியும் வந்து சேர்ந்துவிட்டனர். எனக்கு ஒரே சந்தோஷம்! நல்ல விதமாக அரங்கேற்றம் நடந்தேறியது.


வெறுமனே நடனமாடுவதுடன் நின்று விடவில்லை. மேக் அப் பற்றிக் கற்றுக் கொண்டேன். மேடையில் லைட்டிங் அமைப்பது எப்படி என்று கற்றுக் கொண்டேன். மேடை நிர்வாகம், மக்கள் தொடர்பு என்று ஒவ்வொன்றாகக் கற்றுக் கொண்டேன். இதற்கெல்லாம் பின்னணியில் உந்துதலாக இருந்தது ஒரே விஷயம்தான். 'நமக்கு ஓகோ என்று வசதி கிடையாது. நமக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தால், இவற்றையெல்லாம் கவனிக்க, தனித்தனியே ஆள் வைத்துக் கொண்டால் கட்டுப்படியாகாது; எனவே நாமே எல்லா விஷயங்களையும் கற்று வைத்துக் கொள்வது நல்லது' என்கிற என் எண்ணம்தான்!

என் சுய முயற்சியால் சுதர்சனம் என்ற நாட்டிய நாடகம் அரங்கேற்றினேன். அதில் அதிகம் மேடையேறிடாத துலுக்க நாச்சியார், சக்கரத்தாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார், ராமானுஜர் ஆகியோரை மேடையில் கொண்டு வந்தேன். இந்த முயற்சியைப் பாராட்டாதவரில்லை. அதற்கு வர்ணம் கம்போஸ் செய்து கொடுத்தவர் பத்மா சுப்ரமணியம்! இந்த நிகழ்ச்சியைப் பார்த்துவிட்டு எம்.எஸ். அம்மா, "உன்னோட பக்தியோட கலந்த அபிநயம் ரொம்ப நன்னா இருந்தது" என்று நெகிழ்ச்சியுடன் கூறியது எனக்கு ஆயுசுக்கும் மறக்காது!"

அரங்கேற்றம் முதல், இன்று வரை கடந்த ஆறு வருடங்களில், நிறைய நடன நிகழ்ச்சிகள் வழங்கி விட்டேன். முதன் முதலில் பார்த்தபோது, ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஆசீர்வதித்ததைப் போலவே, முழுமையான ஈடுபாட்டுடன் நான் கற்றுக் கொண்ட பரதம், இன்று என்னை சௌகரியமாகவே வாழ வைத்துக் கொண்டிருக்கிறது.

அண்மையில் ஒரு பரத நாட்டியப் பள்ளி ஆரம்பித்திருக்கிறேன். அதற்குப் பெயர் சூட்டியவர் ஜெயேந்திரர். பெயர் : 'ஸ்ரீ பாதம்'.

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**



1999 ஆகஸ்ட் 22
பிரமாதி ஆவணி 5
மலர் : 58
இதழ் : 4

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

கார்கிலைக் காட்டிலும் பெரிய வெற்றி!

இந்திய எல்லைக்குள் ஊடுருவிய போர் விமானம் வீழ்த்தப்பட, அதிலிருந்த பதினாறு பாகிஸ்தானியர் உயிரிழந்திருக்கிறார்கள். மிகவும் வேதனைக்குரிய உயிர்ச்சேதம் தான். ஆனால், தரையிறங்கும்படிப் பலமுறை கேட்டுக்கொண்ட பிறகும் அந்த பாக் விமானம் அசைந்து கொடுக்கவில்லை. அதனால் வேறு வழியின்றி அதனைச் சுட்டு வீழ்த்தியிருக்கிறார்கள் நமது விமானப்படை வீரர்கள்.

குஜராத் பகுதியில், இந்திய எல்லைக்குள் பாக் ராணுவ விமானம் ஏன் பிரவேசிக்க வேண்டும்? தங்கள் வீரர்களைக் கொன்றதற்காகக் கொதித்தெழுந்து, இந்தியாவை எச்சரித்து, ஐ.நா சபையிடமும் முறையிட்டுள்ள பாகிஸ்தான் அரசிடம் இக்கேள்விக்குப் பதிலில்லை.

பாகிஸ்தான் அயலுறவுத்துறை அமைச்சர் சர்தஜ் அஸீஸ், வீழ்த்தப்பட்ட தங்கள் விமானத்தில் போர்க் கருவிகளே இல்லை என்றும், பயிற்சிக்காகப் பறந்து கொண்டிருந்த விமானம் தங்கள் எல்லைக்குள்ளேயேதான் சுட்டு வீழ்த்தப்பட்டிருக்கிறது என்றும் சாதிக்கிறார்.

ஆனால் நமது தரப்புச் செய்திகள் தெரிவிப்பது வேறு. நீர்மூழ்கிக் கப்பல்களைக் கண்டுபிடித்து அழிக்கக்கூடிய விமானம் அட்லான்டிக் – 1. அவ்வாறு அழிப்பதற்கான பிரத்யேக ஆயுதங்களும் குண்டுகளும் வீழ்த்தப்பட்ட அந்த விமானத்தில் நிறையவே இருந்தன.



இந்தியாவைச் சீண்டிப் பார்க்கும் பாக் மனோபாவம் இந்த ஒரு சம்பவத்தில் மட்டுமின்றி வேறு பல சம்பவங்களிலும் வெளிப்பட்டிருக்கிறது. எல்லைப் பகுதியில் கடந்த சில நாட்களாக ராணுவ முகாம்களிலும் குடியிருப்புகளிலும் தீவிரவாதிகள் நுழைந்து திடீர்த் தாக்குதலும் அபகரிப்பும் நடத்தி வருகிறார்கள். ரயில்பாதையில் குண்டு வெடித்துச் சேதம் விளைந்துள்ளது.

கார்கில் முடிந்த பிறகும் 'தூவானமாக'த் தாக்குதல்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.


காரணங்களை யூகிப்பது கஷ்டமில்லை. கார்கிலில் தோற்ற அவமானம் இன்னும் காயாத ஈரத்துடன் பாகிஸ்தானை ஹிம்சிக்கிறது. மீண்டும் தாக்குதலோ முழு யுத்தமோ நடத்தி இந்தியாவை ஆக்கிரமித்துக் கொள்வதென்பது நடக்காத காரியம் என்றும் தெரிந்திருக்கிறது. பார்த்தது பாகிஸ்தான். குறுக்கு வழியைத் தேர்ந்தெடுத்தது. கூலிப்படையினரைத் தீவிர வாதத்தில் ஈடுபடத் தூண்டிவிட்டு அனுப்பி வைத்தது. இதன் விளைவுதான் நாடெங்கிலும் – குறிப்பாக எல்லை மாநிலங்களில் வெடித்து வரும் தீவிரவாதத் தாக்குதல்கள்.

தேர்தல் நெருங்க நெருங்க இத்தகைய தாக்குதல்களின் தீவிரமும் எண்ணிக்கையும் அதிகரித்து வருவதையும் கவனிக்க வேண்டும்.

இந்தியாவில் அமைதியாகத் தேர்தல் நடந்து முடிந்து ஸ்திரமான ஆட்சி அமைந்து விடக் கூடாது என்பதில் பாகிஸ்தான் மிகவும் தீவிரமாக இருப்பதை நம்மால் உணர முடிகிறது. உளவுத்துறைச் செய்திகளும் இதையே உணர்த்துகின்றன.

ஒரு பெரும்பான்மை அரசு அமைந்து விட்டால் அண்டை நாடான பாகிஸ்தானை இந்தியா முறையாகக் கண்காணிக்கும் என்பதுடன் தீவிரவாத சக்திகளை ஒடுக்கி நாட்டில் அமைதி நிலவுவதற்கும் வழி செய்யும். ஒடுங்கியிருக்க வேண்டிய நிலைக்கு நிர்ப்பந்திக்கப்படும் பாகிஸ்தான் அரசு, தனது மக்களிடம் எந்த வெற்றியையும் பறைசாற்றி அரசியல் பண்ண முடியாது!

வளர்த்த கடாக்களாக அச்சுறுத்தும் தீவிரவாதிகள் ஒருபுறம். அதிகார மையமாகச் செயல்படும் ராணுவம் இன்னொருபுறம் – என்று பாகிஸ்தானில் ஜனநாயகத்துக்கு சதா சர்வகாலமும்



அச்சுறுத்தல்தான். அதன் எதிரொலியாக, இந்திய ஜனநாயகத்தையும் அச்சுறுத்துவது என்று பாகிஸ்தான் முடிவுக்கு வந்திருக்கிறது.

வரவிருக்கும் தேர்தல் அமைதியாக நடந்து முடிந்து நல்லாட்சி மலர அனுமதிக்காமல் பாகிஸ்தான் பல முட்டுக்கட்டைகள் போடத்தான் போகிறது.

பாகிஸ்தானைத் தீவிரவாத நாடாக அறிவிக்க வேண்டும் – அதுவும் அமெரிக்கா முதலில் அறிவிக்க வேண்டும் – என்று பிரதமர் கோரியிருப்பது மிகவும் நியாயமானது. உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்தியாவின் அரசியல் பண்பை பாகிஸ்தான் அச்சுறுத்துகிறது என்பதை உலகம் முழுமைக்கும் தெரிவிக்க இது உதவும்.

ஆனால், பிரதமர் இந்தக் கோரிக்கையுடன் நிறுத்திவிடாமல் உடனடியாக ஓர் உள்நாட்டு நடவடிக்கையும் எடுத்தாக வேண்டும்.

அரசைச் சேர்ந்த பொறுப்பான நபர் ஒருவரைத் தேர்தல் முடியும் வரை பாகிஸ்தான் கண் காணிப்புப் பொறுப்பை ஏற்கச் செய்ய வேண்டும்.

தேர்தலுக்கு இன்னும் ஒரு மாதம் கூட இல்லாத நிலையில் அனைவர் மனமும் கூட்டணி, தொகுதிப் பகிர்வு, பிரசாரம் என்ற விஷயங்களையே சுற்றி வரும். இந்த ஈடுபாட்டினால் எல்லைக்கப்பாலிருந்து எழுகிற அச்சுறுத்தலை மறந்து போகிற வாய்ப்புக் கூட இருக்கிறது.

தேர்தல் பணிகளிலிருந்து விலக்களித்து, அனுபவஸ்தர் ஒருவரை, 'பாகிஸ்தான் கண் காணிப்பு இலாகா'வுக்குப் பிரதமர் பொறுப்பாக்க வேண்டும்.

இந்த நபர், உளவுத்துறை உதவியுடன் தேர்தல்கள் அமைதியாக நடைபெறுவதற்கு வழி செய்யலாம்.

வருகிற தேர்தல்களை வெற்றிகரமாக நடத்தி ஸ்திரமான அரசு நிறுவ முடிந்தால், கார்கிலைக் காட்டிலும் பெரிய வெற்றியாக அது கருதப்படும் என்பதைப் பிரதமருக்கு நினைவூட்டுகிறோம். ○

கருத்துக் கணிப்புகள் காலத்தின் கட்டாயமா?

தேர்தல் வரும் பின்னே; கருத்துக் கணிப்பு வரும் முன்னே என்பது போல – கடந்த 20 ஆண்டுக் காலத்தில் தேர்தலுக்குத் தேர்தல் கருத்துக் கணிப்புகளின் மதிப்பு அதிகரித்து வருகிறது.

கருத்துக் கணிப்புகளை நம்ப முடியுமா? கருத்துக் கணிப்பின் முடிவுகள் எப்போதும் தேர்தல் முடிவுகளோடு ஒத்து இருக்கின்றனவா? சில சமயங்களில் கருத்துக் கணிப்புகளுக்கு நேர்மாறாக தேர்தல் முடிவுகள் அமைந்து விடுகின்றனவே! – என்றெல்லாம் சில கருத்துக் கணிப்புகள் சந்தேகத்துக்கு ஆளாகி விடுவதுண்டு.

இங்கே கருத்துக் கணிப்புகள் பற்றிக் கருத்துச் சொல்கிறார்கள் இருவர்:

சின்னக்குத்தூசி: (பத்திரிகையாளர்)

1998 தேர்தலின் போது – கருத்துக் கணிப்பு வெளியிட்ட எல்லா நிறுவனங்களும் தி.மு.க. கூட்டணி 36 இடங்களில் வெற்றி பெறும்; அ.தி.மு.க கூட்டணிக்கு நான்கு இடங்கள் மட்டுமே கிடைக்கும் என்று ஒரே குரலில் கூறின. வாக்குச்சீட்டைப் பதிவு செய்து விட்டு வெளியே வந்த வாக்காளர்களிடம் 'Exit Poll' என்பதாகக் கருத்துக் கணிப்பு நடத்தியது அரசாங்கத் தொலைக்காட்சி நிறுவனம். அதுவும் பா.ஜ.க. – அ.தி.மு.க கூட்டணிக்கு நாலே நாலு இடங்கள்தான் கிடைக்கும் என்றது.

ஆனால் தேர்தல் முடிவுகள் இந்தக் கருத்துக் கணிப்புகளுக்கு நேர்மாறாக அமைந்திருந்தன. அ.தி.மு.க. கூட்டணி 30 இடங்களில் அமோக வெற்றி பெற்றிருந்தது!

இப்படிச் சில சமயங்களில் கருத்துக் கணிப்புகள் பொய்த்துப் போவது உண்டு. இத்தகைய விதிவிலக்குகளை வைத்து கருத்துக் கணிப்பே பொய் – பலிக்காது என்ற முடிவுக்கு வருவது சரியாக இருக்காது.

கருத்துக் கணிப்பு எடுக்கப்பட்டபோது மக்கள் மனத்தில் இருந்த ஆதரவு நிலை தேர்தலுக்கு சில நாட்களுக்கு முன்பு யாரும் எதிர்பாராத வகையில் நடைபெறும் சம்பவங்களால் முற்றிலும் மாறி விட சாத்தியங்கள் உண்டு.

1991 தேர்தலில் நாடு முழுவதும் இரண்டு கட்டங்களில் தேர்தல் நடந்தது. இரண்டாவது கட்ட வாக்குப்பதிவுக்குச் சில நாட்களுக்கு முன்பு திருப்பெரும்புதூரில் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டார். அதன் விளைவு – இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலும் இரண்டாவது கட்ட வாக்குப் பதிவில் காங்கிரஸ் கட்சி அனுதாப அலை காரணமாக அமோக வெற்றி பெற்று விட்டது. அதே தேர்தலில் முதல் கட்டமாக வாக்குப்பதிவு நடத்தப்பட்ட பல தொகுதிகளில் அது தோல்வியடைந்திருந்தது. தமிழ்நாட்டில் தி.மு.க. ஒரே

• பகவன்தாஸ்



ஒரு இடத்தில் மட்டும்தான் சட்டமன்றத் தேர்தலில் ஜெயிக்க முடிந்தது.

இப்படி எதிர்பாராத சம்பவங்கள் நடந்தால், சம்பவம் நடைபெறுவதற்கு முன்பு எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்புகள் அடிபட்டுப் போய்விடுகின்றன. மக்களின் மனநிலையில் ஏற்பட்ட திடீர் மாற்றம் ஏற்கெனவே அவர்கள் கொண்டிருந்த ஆதரவு நிலையை அடியோடு புரட்டிப் போட்டு விடுகிறது. அதனால் கருத்துக் கணிப்பும் அடியோடு தகர்ந்து போய் விடுகிறது.

இப்படிப்பட்ட எதிர்பாராத சம்பவங்கள் நடைபெறாத காலத்திலும் சில சமயங்களில் கருத்துக்கணிப்புகள் பொய்த்துப் போய் விடுவதுண்டு!

எது எப்படி இருப்பினும், இதுவரை நடத்தப்பட்ட கருத்துக்கணிப்புகள் பெரும்பாலும் சரியாகவே இருந்திருக்கின்றன. ஓரிரு சமயங்களில் மட்டுமே பொய்த்துப் போயிருக்கின்றன!

இன்று அரசியல் கட்சிகளேகூட தங்களது சொந்த செலவில் கருத்துக்கணிப்பு நடத்தி எந்தெந்தத் தொகுதிகளில் தங்களது பலம் அல்லது பலவீனம் எப்படி இருக்கின்றன; அதற்கான காரணங்கள் என்ன என்பதைத் துல்லியமாக அறிந்துகொண்டு, அதன் அடிப்படையில் வேட்பாளர்களை, தொகுதிகளைத் தேர்வு செய்கின்றன! அந்த அளவுக்குக் கருத்துக் கணிப்புகள் மீது நம்பிக்கை வளர்ந்து வருகிறது!



• சின்னக் குத்தூசி
(படம்: சௌந்தர்ராஜன்)

"இவர்களுக்கு வாக்களித்தால் நிலையான ஆட்சி தருவார்கள்; இவர்களுக்கு வாக்களித்தால் அந்த நிலையான ஆட்சிக்கு ஒத்துழைப்புத் தருவார்கள்; இவர்களுக்கு வாக்களித்தால் நல்லாட்சி தருவார்கள்" என்று பெரும்பான்மையான மக்கள் கணித்துத்தான் வெற்றி தேடித் தருகிறார்கள்; பல சந்தர்ப்பங்களில் அவர்களது கணிப்பு பொய்யாகத் தானே போகிறது? ஒரு சில ஆயிரம் மக்களிடம் சாம்பிள் சர்வே என்பது போல எடுக்கப்படுகிற கருத்துக்கணிப்புகள் சில சமயங்களில் பொய்த்துப் போவதில் ஆச்சரியப்பட - அவநம்பிக்கை கொள்ள என்ன இருக்கிறது?

டாக்டர் பகவன்தாஸ்: (புள்ளியியல் துறைத் தலைவர், கிறித்துவக் கல்லூரி)

எங்கள் கல்லூரியின் புள்ளியியல் துறை 1971 முதலே தேர்தலையொட்டி கருத்துக் கணிப்புகளை நடத்தி வருகிறது. இது தவிர, குறிப்பிட்ட கால இடைவெளிகளில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சிக்கு உள்ள செல்வாக்கு பற்றியும் கணிப்பு எடுக்கிறோம். எங்கள் புள்ளியியல் மாணவர்களுக்கு, பாடத் திட்டத்துடன் இணைந்த ஒரு பயிற்சியாக இது போன்ற கருத்துக் கணிப்புகளை நடத்தி வருகிறோமே தவிர, ஒரு அரசியல் கட்சியோ அல்லது வேறு ஏதோ அமைப்போ சொல்லி நாங்கள் இந்தச் செயலில் ஈடுபடுவதில்லை. நாங்கள் எடுத்த கணிப்புகள் பெரும்பாலும் சரியாகவே அமைந்தன.

எங்கள் கருத்துக் கணிப்பு விஞ்ஞானபூர்வமானது. 150 மாணவ, மாணவிகள் இதில் ஈடுபடுவார்கள். எந்தெந்த இடங்களுக்குப் போக வேண்டும் என்று



''நம்ம பாங்க்கை நாறடிக்கிறதுக்காகவே எவனோ ஒருத்தன் திட்டம் போட்டுத்தான் இந்தக் காரியத்தை செஞ்சிருக்கணும்...''

''அப்படி என்ன செஞ்சுட்டாங்க?''

''சேப்டி லாக்கர்ல மீனை வாங்கிக்கொண்டு வந்து வச்சுட்டுப் போயிருக்காங்க!''

— என். ஆனந்தலட்சுமி

சென்னையிலேயே தீர்மானித்து விடுவோம். நகரம், கிராமம், இரண்டுக்கும் இடைப்பட்ட பேரூராட்சிப் பகுதிகளை, மக்கள் தொகை அடிப்படையில் தமிழ்நாட்டைப் பரந்த அளவில் சர்வேக்கு உட்படுத்தி, தகுந்த இடங்களைத் தேர்ந்தெடுப்போம். எங்கள் மாணவர்கள் சர்வே எடுக்கும் முறையே வித்தியாசமானது. கையில் பேனாவையும் கேள்வித் தாளையும் வைத்துக்கொண்டு நேரடியாக 'அப்ப நீங்க எந்தக் கட்சிக்கு வோட்டு போடுவீங்க?' என்று கேட்க மாட்டார்கள். ஏனென்றால் இப்படிக் கேட்டால் நம்மவர்கள் பதில் சொல்ல மாட்டார்கள். சர்வே எடுக்க இரண்டு பேராகச் செல்லுவோம். ஒருவர் அந்த வீட்டிலுள்ள உறுப்பினர்கள் எண்ணிக்கை மற்றும் அவர்களின் உடல்நிலை பற்றிக் கேட்டறிவார். அரசின் பல்வேறு சுகாதார நலத் திட்டங்கள் பற்றியும் சொல்லுவோம். அந்த சமயத்தில் மற்றொரு மாணவர் வீட்டை 'observe' செய்வார். ஏதாவது அரசியல் தலைவர் அல்லது இயக்கம் சம்பந்தப்பட்ட புகைப்படங்களோ அல்லது வேறு ஏதாவது குறிப்புகளோ கண்டிப்பாக இருக்கும். அதைக் குறிப்பிட்டு.. மிகவும் காஷுவலாகப் பேச்சைத் துவக்குவோம். பத்து இருபது நிமிடப் பேச்சுக்குப் பிறகு அந்தக் குடும்பத்தின் அரசியல் சார்பு தெரிந்து விடும். அதிலும், மாமனார் ஒரு கட்சி, மருமகன் ஒரு கட்சி என்பதும்கூடப் புரிந்து விடும். உடனே அவர்களுக்கெதிரில் குறித்துக் கொள்ள மாட்டோம். அன்று இரவு உட்கார்ந்து, பார்த்த நபர்களைப் பற்றி ஞாபகத்தில் கொண்டு வந்து கேள்வித் தாளை நிரப்புவோம். எந்த ஒரு கிராமத்தில் சர்வே எடுத்தாலும் அந்த ஊர் பஞ்சாயத்திலோ அல்லது போஸ்ட் ஆபீஸிலோ நாங்கள் சர்வே எடுத்ததற்கான அத்தாட்சியை வாங்கி வருவோம். குடும்பங்களைத் தேர்ந்தெடுக்க வாக்காளர் பட்டியல்தான் அடிப்படை. எல்லா இடங்களிலிருந்தும் எடுத்து வந்த விவரங்களைச் செலுத்தி கம்ப்யூட்டரில் ஆராய்ந்து முடிவுகளைச் சொல்லுவோம். எங்கள் கல்லூரியைப் பொறுத்தவரை இந்தப் பணி ஒரு கல்யாணம் போல! கிட்டத்தட்ட 5000 வாக்காளர்களை பேட்டி காணுவோம்.

எந்த அரசியல் கட்சியும் எங்களுக்கு சாதகமாக முடிவை வெளியிடுங்கள் என்று எங்களை நிர்பந்தித்தது கிடையாது. ஆனால் நியாயமான எங்கள் கருத்துக் கணிப்பு சாதகமாக இல்லாமல் போய் விட்டால் தொலைபேசியில் கூப்பிட்டுக் கண்டிப்பதுண்டு. உதாரணமாக ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் அவரது பாப்புலாரிட்டி சரிவதை நாங்கள் கருத்துக் கணிப்பில் சொன்னபோது அப்போதைய தலைமைச் செயலாளர் ஒருவர் கல்லூரி முதல்வரிடம் கடுப்பைக் காண்பித்தார். இன்றுள்ள பல ஸீனியர் தலைவர்கள், ஆதரவாகக் கணிப்பு சொன்னபோது ஏற்றுப் பேசியும், கொஞ்சம் வேறு மாதிரி இருந்தால் வெறுப்பைக் காண்பித்தும் இருக்கிறார்கள்! நாங்கள் நேர்மையுடன் செயல்படுவதால் இதற்கெல்லாம் கவலைப்படுவதில்லை.

சென்ற பாராளுமன்றத் தேர்தலின் போது கலைஞரின் செல்வாக்கு நன்றாகவே இருப்பதாகத்தான் எங்கள் கணிப்பு சொன்னது. ஆனால் கோவை குண்டு வெடிப்பு நிலைமையை மாற்றி விட்டது.

'Exit poll' பொய்த்துப் போவதற்கு காரணம் நமது மக்கள் உண்மையை மறைப்பதுதான். வோட்டுப் போட்ட பின் ரகசியமாகச் சொல்லுங்கள் என்றாலும் பொய் சொல்லுகிறார்கள். அதற்குக் காரணம் சர்வே எடுப்பவர்கள் மீது மக்களுக்கு முழுமையான நம்பிக்கை இல்லாமல் இருப்பதுதான்.

Pre poll சர்வேக்கள் அரசியல் கட்சிகளுக்கு நன்றாகவே உதவுகின்றன. ஒரு கட்சி, ஒரு தொகுதியில் கொஞ்சம் பலவீனமாக இருப்பதாக சர்வே தெரிவித்தால் உடனே அந்தக் கட்சி களத்தில் குதித்து நிலையை சரி செய்ய முயற்சி எடுக்கிறது. கருத்துக் கணிப்பு காலத்தின் கட்டாயம்; ஆனால் அவை மிகவும் வர்த்தகத்தனமாக மாறி வருகின்றன என்பதுதான் கசப்பான ஒன்று. வர்த்தகமாக மாறி வரும் எந்த விஷயத்திலும் நம்பகத்தன்மை இருக்காது. எனவே கருத்துக் கணிப்பின் மதிப்பு என்பது அதை நடத்தும் நிறுவனத்தின் மீதுள்ள நம்பகத்தன்மையுடன் சேர்த்து வைத்தே பார்க்கப்படும்.

சந்திப்பு: ப்ரியன்

போட்டி முடிவு

1.8.99 இதழின் அட்டைப் படப் பூவின் புன்னகைக்குக் கவிதை கேட்டிருந்தோமா! எழுதிக் குவித்து விட்டார்கள் வாசகக் கவிஞர்கள். அத்தனை வாசகர்களுக்கும் நன்றி.

முதல் பரிசு ரூ. 200 பெறுபவர் :

செ. சல்மான் பாரீஸ்,
4/12 முதல் வாசல் தெரு,
பாம்பன் – 623521.
இராமநாதபுரம் மாவட்டம்.

இரண்டாம் பரிசு ரூ. 100 பெறுபவர் :

குமரி அமுதன்,
III/A 1, 'சிவாஷ்'
தெற்குத் தெரு, வடக்கூர்,
ஆரல்வாய்மொழி – 629 301

மூன்றாம் பரிசு ரூ. 50 பெறுபவர் :

'வானவில்' நூர்தீன்,
தெற்கு தெரு,
அலங்கியம் (அஞ்சல்)
தாராபுரம் (தாலுகா)
ஈரோடு – 638 651

சுங்கிராட்ஸ்!



இரண்டாம் பரிசுக் கவிதை

புன்னகை–
இதழ்களிலிருந்து விழிகளுக்கு
இடம் பெயர்ந்தது எப்படி?
– குமரி அமுதன்

முதல் பரிசுக் கவிதை

யாருக்கு ஓட்டு என்றேன்
இன்னும் அந்த வயது
வரவில்லை என்றாய்.
நாங்களல்லவா சிரிக்க வேண்டும்
நீயேன் சிரிக்கிறாய்...?
ஜனநாயகம் சிரிப்பாய்
சிரிக்கிறது என்பதாலா?!
– செ. சல்மான் பாரீஸ்

மூன்றாம் பரிசுக் கவிதை

கண்ணுக்குள் நீர் முட்டி
வாயடைச்சுப் போயாச்சு.
காதலனின் கடுதாசி
கன்னியிடம் சேர்ந்தாச்சு.
போர்க் களத்தில் வென்றுவிட்டு
திரும்பி வரும் நாளாச்சு,
மாலை சூடும் நாளை எண்ணி
மங்கை இதழ் பூத்தாச்சு.
– 'வானவில்' நூர்தீன்

பழங்கணக்கு—குமரி அனந்தன்

1998– திருச்செந்தூர் பாராளுமன்றத் தொகுதியில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டுத் தோல்வி.

1996– நாகர்கோவில் பாராளுமன்றத் தொகுதி; காங்கிரஸ்; தோல்வி.

1991– சாத்தான் குளம் தொகுதி எம்.எல்.ஏ(காங்)

1989– சாத்தான் குளம் எம்.எல்.ஏ(காங்)

1984–ராதாபுரம் எம்.எல்.ஏ (காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ்)

1980–திருவொற்றியூர் தொகுதி எம்.எல்.ஏ. (கா.கா.தே.கா)

1979– கா.கா.தே.கா.சார்பில் திருச்செந்தூரில் எம்.பி.க்குப் போட்டியிட்டுத் தோல்வி.

1977– பழைய காங்கிரஸ் சார்பில் நாகர்கோவில் எம்.பி.

1971–ராயபுரம் தொகுதி–சட்டமன்றத் தேர்தலில் தோல்வி.



• சோனியா

அட, அப்படியா?

"அரசியல் ஒரு புனிதமான தொழில்" என்று சொல்லியிருக்கிறார் ஒரு பெண் அரசியல்வாதி.

ஜெயலலிதா?
மாயாவதி?
மம்தா பானர்ஜி?
இவர்கள் யாருமில்லை; சோனியா!

புதுக் கவிதை

சாதிமத பேதமில்லா
சமுதாயம் மலர குளுரைத்த
அரசியல்வாதிக்கு
வெற்றி நிச்சயம்!
தொகுதியில் மெஜாரிடி
அவர் ஜாதியாச்சே!

தொகுதி ஸ்கான்:

நீலகிரி பாராளுமன்றத் தொகுதி 1957ல் உருவாக்கப்பட்டது. காங்கிரஸ் கட்சி

ஒரே ஜோட்டி

அந்தத் தேர்தலிலும், அடுத்தத் தேர்தலிலும் வென்றது. 67ல் சுதந்திரா கட்சி வெற்றி பெற்றது.

அதற்கு அடுத்தத் தேர்தலில் தி.மு.க. அப்புறம் அ.தி.மு.க. அதன் பின் நாலு தடவைகளாய் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு வென்றவர் பிரபு.


96ம் வருடத்தில் நடந்த தேர்



• குமரி அனந்தன்



• ஜெயப்ரதா



• எஸ்.ஆர்.பி

தலில் மாஸ்டர் மாதன் (பா.ஜ.க.) வெறும் முப்பத்து இரண்டாயிரம் வோட்டுகள்தான் பெற்றார். பிரபுக்குக் கிடைத்தது ஒரு லட்சத்துத் தொண்ணூற்று நாலாயிரம். த.மா.கா. சார்பில் போட்டியிட்டு, நாலே முக்கால் லட்சம் வோட்டு வாங்கி ஜெயித்தவர் எஸ்.ஆர். பாலசுப்ரமணியம். போன தேர்தலில் மாஸ்டர் மாதனுக்கு மூணேகால் லட்சம் வோட்டுகள் கிடைத்தன. எஸ்.ஆர்.பிக்கு இரண்டு

'ஜெல்ல முடியுமா?

லட்சத்து அறுபத்தி இரண்டாயிரம். பிரபு: ஒரு லட்சம்.

இந்த முறையும் மும்முனைப் போட்டிதான் நீலகிரியில்!

பெட்டி சமாசாரம்:

1962ம் வருட பொதுத் தேர்தலில்தான் முதன் முதலாக வாக்குச் சீட்டில், வாக்கைப் பதிவு செய்து, ஒரே வாக்குப் பெட்டியில் போடுகிற முறை அறிமுகமானது. அதற்கு முந்தைய இரண்டு பொதுத் தேர்தல்களிலும், வேட்பாளர்களுக்குத் தனித்தனியே வாக்குப் பெட்டிகள் வைக்கப்பட்டிருக்கும். வாக்காளர்கள் தங்கள் வாக்குக்குரிய வேட்பாளரின் வாக்குப் பெட்டியில் வாக்கைச் சேர்க்கும் முறைதான் கடைபிடிக்கப்பட்டது.

ஒற்றை வோட்டில் ஜெயித்தவர்

ஒற்றை வோட்டில் தோற்று, ஆட்சியை இழந்தவர் யார் என்று நாம் அறிவோம். ஒரே ஓட்டில் ஜெயித்த வேட்பாளர் ஒருவர் உண்டு! 1989 பாராளுமன்றத் தேர்தலின்போது, ஆந்திராவில் அனகாபள்ளி தொகுதியில் போட்டியிட்ட கே.ராமகிருஷ்ணா என்பவர் ஒரே ஒரு வோட்டில் ஜெயித்து எம்.பி. ஆகியிருக்கிறார்.

புதிர்

இங்குள்ள சினிமா நட்சத்திரங்கள் சார்ந்த கட்சிகளை சரியாய் சொல்ல முடிகிறதா பாருங்கள்.

1) ஜெயப்பிரதா 2) சுமன் 3) சாரதா 4) ஜெய சுதா 5) சௌகார் ஜானகி 6) அம்பரீஷ்

விடை: முதல் நாலுபேரும் தெலுங்கு தேசம்.
சௌகார்: பி.ஜே.பி.
அம்பரிஷ்: காங்கிரஸ்

ஐடியா!

சில வருடங்களுக்கு முன்பு ஒரு தேர்தல் சமயத்தில், முரசொலி பத்திரிகை ஆபீசுக்கு டெலிபோன் செய்துவிட்டு, யாருடனாவது பேசுவதற்காகக் காத்திருக்கும் நேரத்தில் வழக்கமான ஒலிப்பதிவு செய்யப்பட்ட இசைக்கு பதிலாக, தி.மு.க.வுக்கு வாக்களிக்கக் கோரும் தேர்தல் பிரசார வாசகங்கள் ஒலிக்கச் செய்தார்கள். நூதனமான இந்தப் பிரசார உத்தி ஏனோ பிறகு யாராலும் கடைபிடிக்கப்படவில்லை.

நடிகர் ராஜேஷை மறந்திருக்க மாட்டீர்கள். 'கன்னிப் பருவத்திலே', 'அச்சமில்லை அச்சமில்லை', 'சிறை', 'அந்த ஏழு நாட்கள்', 'வானமே எல்லை' உள்ளிட்ட பல படங்களில் நினைவில் நிற்கிற பாத்திரங்களைச் செய்தவர். தற்போது சினிமாவிலிருந்து ஒதுங்கி ரியல் எஸ்டேட் பிசினஸ் நடத்திக் கொண்டிருக்கிறார். தினமும் தம் அலுவலகத்துக்கு காலையிலேயே வந்து விடுகிறார். விடுமுறை நாட்களில் கூட சற்றுநேரம் வந்து உட்கார்ந்துவிட்டுத்தான் போகிறார். அவர் வாழ்வின் இந்த இரண்டாவது அத்தியாயம் தோன்றிய கதை என்ன?

இரண்டாவது இன்னிங்ஸில் இனிய வெற்றி!

''**1979** செப்டெம்பர்ல தான் நான் நடிச்ச 'கன்னிப் பருவத்திலே' வெளியானது. 1985 வரைக்கும் பிஸியாகவே இருந்தேன். 1985 ஜூனிலிருந்து படங்களின் எண்ணிக்கை குறைய ஆரம்பித்தது. நான் ஹீரோவாக நடித்து வெளியான 'தாலிதானம்' 1987ல் வெளியானது. அவ்வளவாக வெற்றி பெறவில்லை.

அப்பொழுதெல்லாம் பத்து நாள் படப்பிடிப்பு இருந்தால், இருபது நாட்கள் வீட்டில் சும்மா இருக்க வேண்டிய சூழ்நிலை. என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தேன். சொந்தமாக ஒரு படம் டைரக்ட் பண்ணலாம் என்று திட்டமிட்டிருந்தேன்.

அப்போதுதான் ஒரு கல்லூரி விழாவில் ஜேப்பியாரைச் சந்தித்தேன். அவர் சொன்னார்: "நீங்கள் சொந்தப்படம் எடுப்பதாகக் கேள்விப்பட்டேன். சினிமா நல்ல விஷயம்தான். இருந்தாலும் நிரந்தர வருமானத்துக்கு ஒரு வழி செய்து கொள்வது நல்லது. ஸ்ரீபெரும்புதூர், இருங்காட்டுக்கோட்டை, தண்டலம் போன்ற இடங்களில் ரியல் எஸ்டேட் வியாபாரம் நன்றாக நடக்கிறது. மக்களிடமிருந்து தவணை முறையில் பணம் வசூலித்து ஒரு ப்ராஜக்ட் செய்யுங்கள். நல்ல லாபம் கிடைக்கும்'' என்று யோசனை கூறினார்.

எனக்கு அவ்வளவாக நம்பிக்கை இல்லை. முதலில் மக்கள் என்னை நம்புவார்களா என்று தெரியவில்லை. அதுவும் தவணை முறையில் வசூலிப்பது என்பது லேசான காரியமாகப்படவில்லை. இருந்தாலும் ஒரு பெரிய மனிதரின் யோசனையை ஏற்றுத் தொழில் துவங்க முடிவு செய்தேன்.

யாரை வைத்துத் துவங்குவது என்று நான் யோசித்தபோது என் மனதில் பட்டவர் கமலஹாசன். அவரிடம் போய்க் கேட்டேன். பொதுவாக அவர் இது மாதிரி காரியத்திற்கு வர ஒப்புக் கொள்ள மாட்டார். எனக்காக ஒப்புக் கொண்டார். காமராஜர் அரங்கில் 1993 ஆகஸ்டில் கமலஹாசன் குத்து விளக்கேற்ற, என் முதல் படத் தயாரிப்பாளர் ராஜ்கண்ணு மற்றும் ஜேப்பியார் முன்னிலையில் தொழில் துவங்கியது.

சென்னை இருங்காட்டுக்கோட்டையில், ஹூண்டாய் கார் கம்பெனிக்கு முன்பாக 'ராஜேஸ்வரி நகர்' என்ற என் முதல் ப்ராஜக்டை ஆரம்பித்தேன். நான் திட்டமிட்டது 3000 பிளாட்டுகள். ஆனால், விற்பனையானதோ 3300 பிளாட்டுகள்! தொழில் வெற்றிகரமாகவும், ஓரளவு லாபகரமாகவும் நடக்கிறது.

இந்தத் தொழில் போட்டி நிறைந்தது. எனக்கும் மற்ற ரியல் எஸ்டேட்காரர்களுக்கும் பெரிய வித்தியாசம் இருக்கிறது. இருபது வருடமாவது ஒருவர் இந்தத்



தொழிலில் ஈடுபட்டிருந்தால்தான், வெற்றிகரமாக இந்த மாதிரி திட்டங்களைத் (தவணைமுறை) துவங்க முடியும். நானோ, மூன்றே வருடங்களில் ஓரளவு வெற்றியடைய முடிந்து விட்டது. அதற்குக் காரணம் என் இருபது வருட சினிமா வாழ்க்கை. கடந்த ஆண்டு இதுபோல் ப்ராஜக்ட் போட்டவர்களும், நிதி நிறுவனங்களும் பல சிக்கல்களில் மாட்டினார்கள். எனக்கு அந்த மாதிரி எந்த சிக்கலும் ஏற்படவில்லை. அதற்குக் காரணம் இத்தனை வருடங்களில் என்னைப் பற்றித் தவறாக எந்த செய்தியையும் வெளியிடாத பத்திரிகைகள்தான்!

ஒரு நடிகனுக்கு நடிக்கத்தான் தெரியும். வேறு எதுவும் தெரியாது என்பதையும் நான் மாற்றியிருக்கிறேன். தொழிலில் தொடர்ந்து நீடிப்பது மக்களுக்கு என்மீது நம்பிக்கையைக் கொடுத்தது. தற்போது இருபது, முப்பது நாடுகளில் வாழும் தமிழர்களுக்கு என்னை நன்றாகத் தெரியும்!

தொழிலில் பொதுவாக இரண்டு வழிமுறைகள் இருக்கின்றன. ஒன்று அமெரிக்கன் சிஸ்டம். மற்றது இங்கிலாந்து சிஸ்டம். அமெரிக்கன் சிஸ்டத்தில் வேலை பார்ப்பவர்கள் தவறு செய்தால் வேலையை விட்டு எடுத்து விடுவார்கள். பயம் இருந்தால்தான் தவறில்லாமல் வேலை பார்ப்பார்கள் என்கிறது அந்த முறை. இங்கிலாந்து சிஸ்டத்தில் வேலைக்காரார்களின் வாழ்க்கைக்கு உத்தரவாதம் தந்துவிட்டால் போதும். அவன் சின்சியராக இருப்பான் என்ற கருத்து உண்டு. நான் என்னிடம் வேலைபார்க்கும் பியூன், டிரைவர், குமாஸ்தாக்கள் போன்றவர்களை அமெரிக்கன் வழிமுறைப்படியும், மற்றவர்களை இங்கிலாந்து முறைப்படியும் நடத்துகிறேன். அது கூடத் தொழிலில் நான் முன்னுக்கு வர ஒரு காரணம்.

எந்த வெற்றிக்கும் யாராவது ஒருவர் பக்கபலமாக இருப்பார்கள். இன்றைக்கு ஓரளவு வசதியாகவும், எதிர்காலம் குறித்த கவலை இல்லாமலும் நான் இருப்பதற்குக் காரணம் ஜேப்பியார்தான். அவர் சொன்னதை நான் அப்படியே பிடித்துக் கொண்டு பின்பற்றினேன்; அவ்வளவுதான்.''

சந்திப்பு: **பாலு**

''பத்தாம் வகுப்பு பரீட்சை கேள்வித்தாள்ல வித்தியாசமா கேள்வி கேட்டிருக்காங்க.''

''எப்படி?''

''காங்கிரஸ் எத்தனை வகைப்படும்? அவையாவை என்று கேட்டிருக்காங்க!''

— பா. ஜெயக்குமார்



● **ச. தங்கமணி, சத்திரப்பட்டி.**

? *'என் மீது வழக்குப் போட்டு என்னைச் சிறைக்கு அனுப்பி, கொடுமைப்படுத்தியதைத் தவிர கருணாநிதி மக்களுக்கு எந்த நன்மையும் செய்யவில்லை' என்று ஜெயலலிதா பேசியிருப்பது பற்றி...?*

! கொடுமையாவது ஒன்னாவது? சிறைக்கு அனுப்பியும் சொகுசாகத்தான் வாழ்ந்தார் என்பது ஒருபுறமிருக்க, கருணாநிதி ஆட்சியின் பல நன்மைகளுள் தலையாய நன்மை 'ஜெ'யின் ஊழலுக்கு எதிரான துணிச்சலான நடவடிக்கை என்பது மக்களுக்குத் தெரியும்.

தமிழகத்தின் தீயசக்தி யார்?

● **கே.வி. ராமன், சென்னை – 73.**

? *'எந்த மதவாத அமைப்பும் குற்றத்தில் சம்பந்தப்படவில்லை; தாராசிங் என்ற பஜ்ரங் தள் உறுப்பினர் மட்டுமே கொலையுடன் சம்பந்தப்பட்டவர்' என்று ஸ்டெயின்ஸ் கொலை குறித்து விசாரித்த வாத்வா கமிஷன் அறிக்கை அளித்துள்ளது. தங்கள் கருத்து...?*

! பஜ்ரங்தளைச் சேர்ந்தவர் என்று கூறிவிட்டு, மதவாத அமைப்பு சம்பந்தப்படவில்லை என்று கூறுவது முரணாகத் தோன்றவில்லையா? நம்புதற்கே கஷ்டமான அறிக்கை. தாராசிங் ஒரு தொழில்ரீதியான வன்முறைவாதி (Mercenery extremist). எதற்காக இப்படிச் செய்ய வேண்டும்? தனிநபர் விரோதம் எதுவும் ஆதாரத்துடன் நிரூபிக்கப்படவில்லை.

● **கே. சண்முகம், ஆதமங்கலம் புதூர்.**

? *மூப்பனாரின் இன்றைய நிலைமையைப் பார்த்துப் பரிதாபப்படுகிறீர்களா? 'அனுபவிக்கட்டும்' என்று திருப்திப்படுகிறீர்களா?*

! கவலைப்படுகிறேன். தமிழ்நாட்டின் எதிர்காலம் கருதி.

● **வி.பி.எம். வள்ளி, மதுரை – 16.**

? *'ஜெயலலிதாவின் கோட்டைக்குள் புகுந்து சேட்டை செய்தால் வேட்டையாடுவோம்' என்கிறாரே மலைச்சாமி?*

! ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருந்தவரைக்கூட வன்முறை எண்ணம் விட்டு வைக்கவில்லை பாருங்கள்... ஆக இன்றைய கல்வி மனிதனைச் செம்மைப்படுத்தாது என்பதற்கு இதுவே சிறந்த உதாரணம்.

● **புளியரை கணேசன், சென்னை – 30.**

? *காபந்து சர்க்கார் அமைச்சரவையிலிருந்து ராஜினாமா செய்வதால் நிதிஷ் குமாருக்குப் பெருமையா?*

! பெருமையில்லை; கௌரவம். மனச்சாட்சி என்று ஒன்று இருக்குமானால் (?) ரயில்வே நிர்வாகத்தில் அனைவரிடமும் இது ஒரு ஆத்ம பரிசோதனையைத் தூண்ட வேண்டும்.

● **கே. ஆர். ரவீந்திரன், சென்னை – 1.**

? *இந்திய கிரிக்கெட் அணிக்கு சச்சினை விட ஜடேஜாவே சிறந்த கேப்டன் என்று இம்ரான் கான் கூறியுள்ளது குறித்து?*

! அனுபவஸ்தரான இம்ரான் சொல்வது ஏற்கும்படிதான் இருக்கிறது. ஏற்கெனவே நடந்துள்ள டெஸ்ட்களின் போக்கும் முடிவுகளும் இதையே உறுதி செய்கின்றன.

● **எம். குணசேகரன், வேலாயுதம்பாளையம்.**

? *தமிழகத்தின் இன்றைய தீய சக்தி யார்?*

! ஜாதி அரசியல். அதுவும் இந்தத் தேர்தலில் தொகுதிகள் பிரித்து ஒதுக்கப்பட்டுள்ள அடிப்படையைப் பார்க்கிறபோது எல்லோருமே அந்தத் தீய சக்திக்கு பலியாகிவிட்டது தெரிகிறது.

● **செ. சல்மான், பாம்பன்.**

? *சிவகங்கை தொகுதியில் தி.மு.க. நிற்காமல் பா.ஜ.கவுக்கு ஒதுக்கியது. தொகுதிப் பங்கீட்டில் ம.தி.மு.க. முரண்டு பிடித்ததும் அந்தத் தொகுதியைத் தருவதாக பா.ஜ.க. கூறியது. இதைக் கேட்டதும், 'வேண்டாம்; ஐந்து தொகுதிகளே போதும்' என்று ம.தி.மு.க. ஒத்துக் கொண்டதே...*


• பிரசாத கொடுமை!


• எதிர்காலக் கவலை!



சிவகங்கை என்றால் ஏன் இவ்வளவு பயம்?

! உண்மையிலேயே சிவகங்கை சிதம்பரத்தின் கோட்டைதான். பிறர் அதைக் கைப்பற்றுவது எளிதில் நடக்கக்கூடியதல்ல. அதனால்தான் பிற கட்சிக்காரர்கள் பயப்படுகின்றனர்.

● **ஆர். சுப்பராவ், திருக்கோவிலூர்.**

? ''ஜெயலலிதாவின் 'சிகாகோ ரகசியம்' வெளிவரும்'' என்று சு. சாமி அறிவிக்கிறாரே... தீபாவளி ரிலீஸ் படமா?

! தேர்தல் சமயத்தில் ஒரு டிரெய்லராவது காட்டுவாரா பார்க்கலாம்!

● **ஆர். சரோஜா ராம்தாஸ், பவித்ரமாணிக்கம்.**

? நீங்கள் ஒரு ஆணாதிக்கக்காரர் என்று நினைக்கிறேன். இந்தியாவில் முகந்தெரிந்த தலைவிகள் பத்து பேர் கூடத் தேற மாட்டார்கள். ஐந்து தலைவிகளால் இந்தியா போண்டியாகிவிடும் என்கிறீர்களே... ஆண் தலைவர்கள் மட்டும் சத்தியசந்தர்களா?

! அப்படிச் சொல்லவில்லையே! இந்தியாவையே நாசமாக்கும் 'ஆற்றல்' இந்த 5 பெண்களுக்கு இருப்பதைத்தான் சுட்டிக்காட்டினேன். பாராட்டத்தக்க தலைவிகள் அரசியலுக்கோ பொது வாழ்வுக்கோ வந்தால் தராசுதான் முதலாக வாழ்த்துவார். போன வாரம் மேதா பட்கர், அருந்ததி ராய் இவர்களை மெச்சிக் கொள்ளவில்லையா?

● **ஆர். ராஜதுரை, சீர்காழி.**

? மயிலாடுதுறையில் ஜெயலலிதா பாட்டுப் பாடி வோட்டுக் கேட்டபோது, மேடையில் இருந்த வேட்பாளர் மணிசங்கர் அய்யர் நடனம் ஆடியது பற்றி...?

! தப்பித் தவறி ஜெயித்தால் நடக்கக்கூடிய நாடகங்களுக்கு ஒத்திகை.

● **ஆ. தமிழ்துரைசாமி, பாலசமுத்திரம்.** ❑

? ஜெயலலிதாவோடு சென்ற தேர்தலில் ம.தி.மு.க., பா.ம.க. கூட்டணி அமைத்த போது கொடுத்த சீட்டைப் பேசாமல் பெற்றுக் கொண்டார்களே? தற்போது கலைஞருடன் மட்டும் ஏன் இந்தக் குழப்பம்?

! அந்தத் தேர்தலில் ஜெயித்து அமைச்சரவையிலும் இடம்பெற்று விட்டதால் தங்கள் விலை உயர்ந்து விட்டதாக இத் தலைவர்கள் கருதுகிறார்கள்.

● **கே. ஆர். உபேந்திரன், தஞ்சாவூர்.**

? 'விசுவாசம் என்றால் சேடப்பட்டி முத்தையா என்று அகராதியில் எழுதுங்கள்' என ஜெ முன்பு கூறினாரே. அப்பேர்ப்பட்ட விசுவாசிகளுக்குக் கூட இந்தத் தடவை சீட் தரப்படவில்லையே?

! விசுவாசிகளை மாற்றிக் கொண்டேயிருப்பதுதான் சர்வாதிகாரிகள் கையாளும் தந்திரம்.

● **டி.வி. சிவகுமார், சென்னை – 33.**

? இதயத்தில் 'முகத்திரை' ரசிக்கிறீர்களா?

! கீழ்த்தரமான தனிநபர் தாக்குதல்கள். ரசிப்பதில்லை; வெறுக்கிறேன். தாக்குதலுக்கு உட்பட்டவர்கள் பிரஸ் கவுன்ஸிலின் கவனத்துக்குக் கொண்டு போகலாம்.

● **அரு. சொர்ணலட்சுமி, ஈரோடு – 3.**

? திரைப்படநகர் தலைவர் பதவியை முக்தா சீனிவாசன் ராஜினாமா செய்தது சரியா?

! நல்ல மரபு.

● **குரு நாகராஜன், குருசாமிபாளையம்.**

? ரயில்வே அமைச்சர் ராஜினாமா செய்ய வேண்டுமெனக் கோரிய ஜெயலலிதா, கும்பகோணம் மகாமக விழாவில் பலர் உயிரிழந்த போது ராஜினாமா செய்யாதது ஏன்?

! சபாஷ்! எதிர்க்கட்சியினரின் தேர்தல் பிரசாரத்துக்கு ஒரு பாயின்ட் பிடித்துக் கொடுத்திருக்கிறீர்கள்!

❑ ரூ. 50 பரிசு பெறுபவர் : ஆ. தமிழ்துரைசாமி, பாலசமுத்திரம்.
(முழு விலாசம் தேவை.)

ஸ்போர்ட்ஸுக்கே முதல் சாய்ஸ்!



• அஷ்டமூர்த்தி

• அதுல்குமார்





• ப்ரிஜேஷ் படேல்

"எங்களைப் பொறுத்த வரை அரசியல், தேர்தல்... ஏன் அழகிப் போட்டியெல்லாம் கூட இரண்டாம் பட்சம் தான். ஸ்போர்ட்ஸுக்கே எங்கள் முதல் சாய்ஸ்" என்றார்கள் விவேகானந்தா கல்லூரியைச் சேர்ந்த அந்த மூவரும். தொனியின் தீவிரத்திலேயே அவர்கள் விளையாட்டுக்கு இதைச் சொல்லவில்லை என்று தெரிந்தது!

"இதிலே என்ன இல்லை? குணம் இல்லையா? மணம் இல்லையா?" என்று விளம்பர பாணியில் தங்கள் சாய்ஸுக்கு வலு சேர்க்கத் தொடங்கினார்கள்.

"நமக்குள்ளே என்னதான் மொழி, மாநிலம்னு வேறுபாடு இருந்தாலும் ஸ்போர்ட்ஸிலே அதையெல்லாம் பார்ப்பதில்லையே. சச்சின்னா அது எல்லாருக்குமே 'நம்ம சச்சின்தான்' என்றார் அதுல்குமார்.

"இன்னொண்ணை கவனிச்சியா? மத்த எல்லா விஷயங்களிலும் எதிரெதிர் துருவங்களா இருக்கிற அரசியல் தலைவர்கள் ஸ்போர்ட்ஸைப் பொறுத்தவரை எதிரெதிர்க் கருத்துக்களைச் சொல்றதில்லை. அப்படி ஒரு சிறப்பு, விளையாட்டுக்கு உண்டு" என்று சிலிர்த்தார் அஷ்டமூர்த்தி.

"சொல்லப்போனா விளையாட்டு மட்டுமில்லேன்னா பல நாடுகளைப் பற்றி இங்கே பலபேருக்குத் தெரியவே தெரிஞ்சிருக்காது. ஜிம்பாப்வே, கென்யா, உருகுவே, கொலம்பியான்னெல்லாம் அடுக்கினால், இதென்ன ஏதாவது புதுவகை 'டிஷைன்'னு கேட்டிருப்பாங்க" என்றார் ப்ரிஜேஷ்.

'உங்களுக்குப் பிடித்த விளையாட்டு எது?' என்றதும் எதிர்பார்த்த பதிலையே கூறினார்கள். கிரிக்கெட்டுக்கு ரொம்ப முக்கியத்துவம் கொடுத்து மீதி விளையாட்டுகளைக் கண்டுக்காமல் இருக்கிறோமே என்றதும், "ஏன் பிற விளையாட்டு வீரர்களோ, அந்த விளையாட்டு சங்கங்களோ இதற்கான முயற்சிகள் எடுத்து அந்த விளையாட்டை பிரபலமாக்கட்டுமே" என்றனர் கோரஸாக. அவர்கள் கல்லூரியில் மிகச் சிறந்த கிரிக்கெட் வீரர்கள் உருவாகிக் கொண்டு வருவதைப் பற்றிப் பெருமைப்பட்டனர்.

''விளையாட்டிலும் கூடத்தான் அரசியல் நுழைந்து விட்டது. கோஷ்டிப் பூசல், போதை மருந்து, காதுக் கடி, பெட்டிங் ஊழல் – இப்படிப் பல அநியாயங்கள் தினமும் பேப்பரில் படிக்கிறோமே'' என்றோம்.

''இருக்கட்டுமே. இந்தச் செய்திகளின் சுவாரசியத்தால் மட்டுமே ஈர்க்கப்பட்டு ஸ்போர்ட்ஸ் பக்கங்களைப் படிக்கிறவங்க கூட நாளடைவில் விளையாட்டு ரசிகர்களாக மாறிவிடும் வாய்ப்பு இருக்கே'' என்றார்கள் விட்டுக் கொடுக்காமல்.

''ஓகே, ஓகே, உங்க கேள்விகள் விளையாட்டு சம்பந்தமாகவே இருப்பதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை'' என்று சமாதானப்படுத்தினோம்.

கேள்விகளை அவர்கள் தந்தார்கள். எல்லா கேள்விகளுக்கும் சரியான விடைகளை டிக் செய்து அனுப்பும் வாசகர்களுக்கு ரூ. 200 பரிசைக் கல்கி தரும்! பலர் சரியாக எழுதிவிட்டால் குலுக்கல் தான்!

அருகிலுள்ள கூப்பனில் மட்டுமே டிக் செய்து அனுப்ப வேண்டும். தனித்தாளோ, ஜெராக்ஸ் பிரதியோ செல்லாது. கடைசித் தேதி 30.8.99.

ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

தொகுப்பு : **ஜி.எஸ்.எஸ்.**

படங்கள் : **ஸ்ரீஹரி**

க்விஸ் கூப்பன் – 3

ஒவ்வொரு கேள்வியிலும் வருணிக்கப்பட்டிருக்கும் விளையாட்டு வீரர் அல்லது விளையாட்டு வீராங்கனை யார்?

1. ஒரே ஓவரில் ஆறு சிக்ஸர்களை அடித்த இவர் இப்போது பார்படோஸின் விளையாட்டு மற்றும் சுற்றுலா அமைச்சராக விளங்குகிறார்.

☐ விவியன் ரிச்சர்ட்ஸ், ☐ காரி சோபர்ஸ், ☐ டான் பிராட்மென்.

2. 1988ல் அத்தனை கிராண்ட்ஸ்லாம் பட்டங்களையும் வென்றதோடு ஒலிம்பிக்ஸில் தங்கத்தையும் பெற்ற இவர், சமீபத்திய விம்பிள்டன் மிக்ஸட் டபுல்ஸ் போட்டிகளில் ஜான் மெக்கன்ரோவோடு இணைந்து ஆடினார்.

☐ மோனிகா ஸெலஸ், ☐ ஸ்டெஃபி கிராப், ☐ வீனஸ் வில்லியம்ஸ்.

3. முப்பதுக்கும் மேற்பட்ட விளம்பரங்களில் தோன்றியுள்ள இவர் 1998ல் ''ஹால் ஆஃப் ஃபேம்'' என்ற பெருமைமிகு புகழ் வெளிச்சத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

☐ மைக்கேல் ஜோர்டான், ☐ இவாண்டர் ஹோலிபீல்ட், ☐ கார்ல் லூயி.

4. சிறு வயதில் குள்ளக் கத்திரிக்காய் என்று அழைக்கப்பட்ட இவர் மீது போதை மருந்து உட்கொண்டதாகக் குற்றச்சாட்டு உண்டு. எனினும் 1986ல் உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் தன் நாடு வெற்றிபெற இவர் காரணமாக இருந்ததை மறுக்க முடியாது.

☐ ரொனால்டோ, ☐ பாஜியோ, ☐ மாரடோனா.

5. மிக இளம் வயதிலேயே உலக செஸ் சாம்பியன் ஆனவர் என்ற சாதனை படைத்திருந்தாலும் ''டீப் ப்ளூ'' என்ற கணிப்பொறியோடு இவர் போட்டியிட்ட விளையாட்டுத் தொடரில் தோற்றுவிட்டார்.

☐ ஆனந்த், ☐ காஸ்பரோவ், ☐ கடாம்ஸ்கி.

6. ஒன்பது முறை விம்பிள்டன் கோப்பையை வென்ற இவரது நகைப் பெட்டியில் இப்போதும் விம்பிள்டன் மைதானத்திலிருந்து எடுத்து வரப்பட்ட கொஞ்சம் புற்களைக் காணலாம்.

☐ கிரிஸ் எவர்ட், ☐ மார்டினா நவ்ராத்திலோவா, ☐ பில்லிஜீன் கிங்.

7. எக்கச்சக்கமான செஞ்சுரிகளை அடித்துக் குவித்த இவரது சகோதரி மணந்திருப்பது ஒரு முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரரை.

☐ சுனில் காவஸ்கர், ☐ டைகர் பட்டௌடி, ☐ மொஹிந்தர் அமர்நாத்.

8. டென்னிஸில் ஒலிம்பிக்ஸ் மெடலைப் பெற்ற இந்தியரான இவரது தந்தையும் ஹாக்கியில் ஒலிம்பிக்ஸில் வெண்கல மெடல் வாங்கியவரே.

☐ மகேஷ் பூபதி, ☐ லியாண்டர் பயஸ், ☐ ரமேஷ் கிருஷ்ணன்.

பெயர் : ....

முகவரி : ....

....

....

"5 வருட இடுப்பு வலியிலிருந்து ஆப்ரேஷன் இன்றி குணமடைந்தேன்!!!"



Lakshmi Iyer

ஸ்ரீமதி. லக்ஷ்மிஐயர், மேட்டூர்டேம் R.S., சேலம் மாவட்டம், தமிழ்நாடு.

கடந்த ஐந்து வருடங்களாக இடுப்பில் வலி இருந்து வந்தது. இதனால் குனிந்து நிமிரும் பொழுதும், சிறிது தூரம் நடக்கும் பொழுதும், உட்கார்ந்து எழுந்திருக்கும் பொழுதும், மாடிப்படி ஏறி இறங்கும்பொழுதும் , பிடிப்புடன் கூடிய வலி இருந்தது. ஆங்கில மருத்துவரிடம் சென்று **C.T. Scan** எடுத்துப் பார்த்த போது, இடுப்பில் கடைசி இரண்டு எலும்புகள் விலகி இருப்பதாக கூறினார்கள் **(L4, L5, DISC PROLAPSE)**இதற்கு சில மருந்துகளையும், இடுப்பில் போட்டு கொள்வதற்கு **Belt**-ம் எழுதிக் கொடுத்தார்கள். இருப்பினும் வலி நிற்கவில்லை. பின்பு ஆப்ரேஷன் **(Operation)** செய்தால் குணமடையும் என்று கூறினார்கள் அப்பொழுது **"MARC HERBAL CARE(P)LTD."** நிறுவனத்தின் விளம்பரத்தை செய்தித்தாள்களில் கண்டு நானும் எனது கணவரும் அங்கு சென்றோம். டாக்டரின் ஆலோசனைபடி அவர்கள் கொடுத்த மூலிகை பவுல்டீசை (Poultice) வெளிப்பிரயோகமாக தினமும் தவறாமல் தடவி வந்தேன். 9 வார தொடர்ச்சியான சிகிச்சைக்குப் பிறகு தற்பொழுது எனது வலிகள் அனைத்தும் நீங்கி பரிபூரண நிவாரணம் அடைந்தேன். நன்றி.

★ காலம் காலமாக வேதமகரிஷிகள் சித்தர்கள் கண்டுபிடித்து பரிசோதித்து அனுபவப்பட்டு வெற்றிகண்ட ஆயுர்வேத மூலிகை மருத்துவமுறைப்படி எங்களது நிறுவனம் ஒரு வெளிப்பிரயோக மூலிகை பவுல்டிசை (Poultice) கொண்டு ஆர்த்திரைட்டிஸ், ஸ்பாண்டிலைட்டிஸ், தோள்பட்டை வலி, முதுகுவலி, குதிக்கால்வலி, கைகால் மூட்டுவலி ஆகியவைகளுக்கு தகுதிவாய்ந்த அனுபவம் மிக்க ஆயுர்வேத, சித்தா மற்றும் அலோபதி மருத்துவர்களின் மேற்பார்வைகளின் கீழ் சிகிச்சை அளித்து வருகிறோம்.

★ ஒரு வரைப்போல் மற்றொருவரது உடல்வன்மை இருப்பது இல்லை என்பது யாவரும் அறிந்த உண்மை எனவே கால மாற்ற விளைவுகளால் மனிதனின் உடல்வன்மையில் ஏற்படும் மாறுதல்களுக்கு ஏற்ப சிகிச்சையும் பலன்களும் வேறுபடலாம் என்பதை **MARC HERBAL CARE (P) LTD** நன்கு உணர்ந்துள்ளன.

கலந்து ஆலோசிக்க இப்போதே தொடர்பு கொள்க. தொலைபேசி

0413-346683

காலை 9 மணி முதல், இரவு 7 மணி வரை
வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்.

MARC ஹெர்பல் கேர் (பி) லிமிடெட்
32, செயின்ட் தெரெஸ் வீதி, பாண்டிச்சேரி – 1
(ராமன் தியேட்டர் எதிர் வீதி, ஃபார்ச்சூன் பேக்கரி எதிரில்)
Fax : 91 - 0413 - 346683



ESTD:1955 உ **Ph:0431-704312 706823**

புரட்டாசி – ஐப்பசி மாத வடதேச காசி யாத்திரை

27-9-99 ம் தேதி தமிழ் புரட்டாசி மாதம் 10ம்தேதி ஒரு தனி 3 டயர் கேரேஜ் சென்னையிலிருந்து மாலை **5.30** மணிக்கு புறப்பட்டு, அலகாபாத், அயோத்யா, காசி, கயா - அரித்வார் -ரிஷிகேஷ் டில்லி, ஆக்ரா, மதுரா டில்லி வழியாக சென்னைக்கு அதே கேரேஜ் திரும்பிவருகிறது. நபருக்கு டிபன் காபி 2 வேளை போஜனம் நகர் சுற்றிபார்த்துவரும் பஸ்கட்டணம் முழுபர்த்துடன் கூடிய ரயில் கட்டணம் உள்பட ரூ. **6,675.** நபருக்கு ரூ.**2,500** வீதம் அட்வான்ஸ் அனுப்பி ரிசர்வ் செய்து கொள்ள வேண்டும். கடைசி நேரத்தில் எனக்கு கீழ்பர்த் - அல்லது நடுபர்த் வேண்டும் என்றால் கிடைப்பது சிரமம். **இது ஒரு 15 நாட்கள் கொண்ட யாத்திரை!**

15 நாட்கள் கொண்ட தீபாவளி கங்கா ஸ்நானமும் தங்க அன்னபூரணி தரிசனமும் கூடிய (வாரணாசி) காசி யாத்திரை

28-10-99 ம் தேதி ஐப்பசி 11ம் தேதி காலை **5.30** மணிக்கு ஒரு தனி 3 டயர் கேரேஜ் புறப்பட்டு ஆக்ரா-மதுரா-டில்லி-அரித்வார், ரிஷிகேஷ்,அலகாபாத் அயோத்யா காசி, கயாகாசி, சென்னை வந்து சேர்கிறது. நபருக்கு காபி,டிபன் போஜன வசதி உள்பட கட்டணம் ரூ.**6,675** ஆகும்.


16 டிக்கெட்டிற்கு ஒரு டிக்கட் தொகை சலுகை உண்டு/முழுமையான விபரம் வேண்டின் **4** ரூ ஸ்டாம்ப் அனுப்புதல் வேண்டும்

ஸ்ரீநாமகிரி டிராவெல்ஸ் சர்வீஸ், (Regd.)



34,A/2 அக்ரஹாரம், மேலசிந்தாமணி, திருச்சி- 2.

உரிமையாளர்: K.E. நம்பிள்ளை, அர்கனைசர்கள்: N.K.சேகர், D.சேகர், N.கங்கா


ஊரெல்லாம் உற்சாகம்!
போனா வராது! இப்பவே புக் பண்ணிடு. சொல்லிட்டேன்!
படு கிராண்டா தயாரிக்கறாங்களாம்! ஆர்டிகிள்ஸெல்லாம் ஏ கிளாஸா வந்திருக்காம்!
கேஸட் பரிசாமே! எப்ப வரும்னு தவிக்கறது மனசு.
ஸாரி! கதை சொல்ற மூட் இல்லை! எப்ப அது வரும், சூப்பர் கதைகளெல்லாம் எப்ப படிப்போம்னுதான் காத்திருக்கேன்.
கல்கி நூற்றாண்டு மலரைத் தபால்ல அனுப்பறதுக்கில்லைன்னு சொல்லிட்டாங்க... என்பாடு பேஜார்பா!
அமரர் கல்கி நூற்றாண்டு மலர். விலை ரூ. 60/- இங்கே முன் பதிவு செய்யவும்...

இங்கேயும் ஒரு

பத்து வயதுச் சிறுமி தாவி ஓடி வந்து நம்மை ஒரு கையால் கிள்ளிவிட்டு இன்னொரு கையால் 'சல்யூட்' அடித்து நிற்கிறாள். திகைத்துப் போய் விடுகிறோம். உள்ளே நுழையும் போது நமக்குக் கிடைத்த வரவேற்பு இப்படித்தான்.

அலுவலக அறையில் நாம் சென்று அமர்ந்தவுடன் பலவித முகங்கள் சன்னல் வழியே தங்களை அடையாளம் காட்டிக் கொள்கின்றன. "ஹே... ஹே... ஹே..." என்று குதூகலமாய் சிரித்து வைக்கின்றன. அதட்டல் எதுவும் செய்யாமல் அனைவரையும் பணிப் பெண்கள் அழைத்துப் போகிறார்கள்.

திருச்சி சத்திரம் பேருந்து நிலையத்துக்கு அருகில் கரூர் செல்லும் சாலையில் அமைந்துள்ளது 'விடிவெள்ளி' புனித அன்னாள் உள ஊனமுற்றோர் மறுவாழ்வு மையம்.



• ஆசிரியர்களுடன் சுதா

மனவளர்ச்சி குன்றிய நிலையிலிருப்போரை ஐந்து வயதிலிருந்து சேர்த்துக் கொள்கிறார்கள். சேர்க்கையின் முதல் கட்டமாக உளவியல் நிபுணரைக் கொண்டு அவர்களின் நுண்ணறிவுத் திறனை சோதித்துத் தெரிந்து கொள்கிறார்கள்.

எந்தெந்தப் பழக்கங்களில் அந்தக் குழந்தையால் தனித்து இயங்க முடிகின்றது, அல்லது முடியவில்லை என்பதனைத் தெரிந்து கொள்கிறார்கள். மனசு மட்டுமே முழுத் தூய்மையாக இருக்கும் இவர்களுக்கு உடலின் வெளிப்புறத் தூய்மைக்காக மற்றவர்கள் சுத்தம் செய்துவிட நேர்வதிலிருந்து ஆரம்பமாகிறது இந்த மகத்தான பணி.

பாத்ரூம் செல்லுதல், பல்துலக்குதல், குளித்தல், உடை உடுத்துதல், தலை வாரிக் கொள்ளுதல் முதலான அடிப்படைகளிலிருந்து அவர்களுக்குக் கொஞ்சம் கொஞ்சமாகப் பயிற்சி தந்து நாளடைவில் அவரவர் அங்க சுத்திகளை அவரவரே செய்து கொள்ளும் நிலைக்குக் கொண்டு வந்து விடுகின்றனர்.

அடுத்த கட்டமாய் அ, ஆ, இ, ஈக்கும் அம்மா, அப்பா, இலை, ஈக்களுக்கும் வருகிறார்கள். முயன்று முயன்று பார்க்கிறார்கள். முடியவில்லையா? இயலாதவர்களைத் தொழிற்கல்விக்குக் கொண்டு போய் விடுகின்றார்கள்.

சாக்பீஸ், சோப்புக் கரைசல் நீர், பினாயில் போன்றவை தயாரித்தல், ஒயர்க் கூடை பின்னுதல், துணிகளில் எம்பிராய்டரி வேலைகள் செய்தலென நீண்டு செல்கிறது இவர்களது தொழிற்கல்வி.

எழுத்தும் படிப்பும் சரியாக வருகின்றதா?: அவரவர் மூளை வளர்ச்சித் திறனுக்கேற்ப கல்வி அறிவைப் படிப்படியாக மேல் நோக்கிக் கொண்டு போகிறார்கள்.

பதினோரு வயதில் வந்து சேர்ந்துள்ளாள் குளித்தலை மேட்டுப்பட்டியிலிருந்து வாகலி என்னும் சிறுமி. நான்கு வருடங்கள் ஓடி விட்டன. அந்தச் சிறுமியின் நோட்டில் வரி வரியாய் எழுதியிருப்பதைப் பார்க்க பிரமிப்பு தட்டிவிடும். முத்து முத்தாய் எழுத்துக்கள். அவை கடவுளின் கையெழுத்தல்லவோ என்று எண்ணத் தோன்றுகிறது.

இரவு நேரங்களில் பார்த்து வைத்த தொலைக் காட்சி உணர்வுகளின் பலனாக 'ரஜினி ஸ்டைல்' செய்து காட்டுகிறார்கள் சில சிறுவர்கள். திருவானைக்காவல் சுந்தரராமனின் பதினேழு வயது மகன் ராம்குமார், சுப்ரபாதத்தை ஒரு வரி மாறாமல் அப்படியே இழுத்த மாதிரி பேசிக்காட்டுகிறான் நம்மிடம்.

பதினான்கு வயது கே. ராஜசேகர் 'மிமிக்ரி' செய்வதில் குட்டிகையாய் இருக்கிறான். அவன் 'உதயகீதம் பாடுதே..' பாடலைச் சற்றே ராகத்துடன் பாடிக் காட்டும் போது நம் இதயமும் அந்த கனத்தில் கசிந்து விடுகிறது.

சிறுவர்கள் நூற்றிஐந்து பேர், சிறுமிகள் நாற்பத்தி ஐந்து பேர். இதில் நூறு பேர் விடுதியில் தங்கிக் கொள்-



தங்க மங்கை!

கிறார்கள். மீதம் பேர் திருச்சி நகரைச் சுற்றி லும் இருந்து வருபவர்கள். விடி வெள்ளி பேருந்தில் தினசரி மையத்துக்கு வந்து போகிறார்கள்.

இதில் சுதா என்கிற சுந்தராம்பாள்தான் அமெரிக்காவில் வடக்கு கரோலினா நகரில் நடைபெற்ற சிறப்பு ஒலிம்பிக் போட்டியில் சைக்கிள் பந்தயத்தில் தங்கப் பதக்கத்தை தட்டிப் பறித்து வந்த பதினேழு வயதுக் குழந்தை.

அலுமினியப் பாத்திரக் கடையில் வேலை பார்ப்பவர் ராதாகிருஷ்ணன். சரஸ்வதி - ராதாகிருஷ்ணன் தம்பதிக்கு மூத்த பெண் சுதா. அதன் பிறகு பிறந்த இரண்டு பையன்கள் நல்ல நிலையில் வளர்ந்து வர, சுதா மட்டும் அனைத்திலும் 'பேந்தப் பேந்த' விழித்துக் கொண் டிருக்க, நல்ல மருத்துவரிடம் காட்டிய பிறகு மனவளர்ச்சி இல்லாமை தெரிய வந்தது.

மூன்றாண்டுகளுக்கு முன் கொண்டு வந்து திருச்சி 'விடி வெள்ளி'யில் சுதாவைச் சேர்த்து விட்டனர். வந்ததிலிருந்து அந்தச் சிறுமியை வெகு நாட்களாய்க் கவனித்துப் பார்த்ததில் அவளிடம் அபூர்வத் திறமைகள் மறைந்திருப்பதைக் கண்டு கொண்டார் சகோதரி யூஜின். எழுதப்படிக்கத் தெரியாத வளிடம் விளையாட்டில் ஆர்வம் நிறைய மண்டிக்கிடந்துள் ளது. தான் கலந்து கொள்ளும் போட்டியில் முதலிடத்தைப் பெற வேண்டும் என்கிற உணர்வா அல்லது வெறியா அதை எப்படிச் சொல்வதெனத் தெரியவில்லை என்கிறார் பள்ளி முதல்வர் சகோதரி ஸ்டார்லெட்.

நூறு மீட்டர் ஓட்டப்பந்தயம் தொடங்கி 200, 300, 500 மீட்டர் பந்தயம் என விரிவடைந்து தடகள ஓட்டத்திலிருந்து மாறி சைக்கிள் சவாரிக்கு என நுழைந்த போது சைக்கிள் ரேஸ் அவளுக்கு மிகவும் பிடித்துப் போயிற்று.

தகுந்த அளவில் பயிற்சியளித்ததில் மன வளர்ச்சி குன்றி யோர்க்கான விளையாட்டுப் போட்டிகளில் சைக்கிள் ஓட்டு வதில் மாநில அளவில் முதலிடம் பெற்றாள் சுதா. பின்னர் நடந்த தேசிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு பல பதக்கங்கள் பெற்று வந்தாள்.

மனவளர்ச்சி குன்றியோர்க்காக உலக அளவில் நடத்தப்படும் சிறப்பு ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ள வேண்டி 'ஒலிம்பிக் தேர்வு நிலைப்' போட்டியிலும் வெற்றி பெற்று, தேர்ந்தெடுக்கப் பட்டாள் சுதா!

அமெரிக்காவில் வடக்கு கரோலினா நகரில் சிறப்பு ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றன.

திருச்சி விடிவெள்ளியிலிருந்து போட்டியில் கலந்து கொள்ள சுதாவும், ஆசிரியை சகோதரி யூஜினும் அமெரிக்கா சென்று வர வேண்டும். பயணச் செலவுக்கு இருவர்க்கு மட்டும் ரூபாய் ஒரு லட்சத்திற்கும் மேல் ஆகும் போலிருந்தது. மாவட்ட ஆட்சியரும் வேறுபலரும் உதவினார்கள்.

சிறப்பு ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்ள இந்தியா விலிருந்து சென்று வந்த மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் தொண்ணூற்றி நான்கு. இதில் தமிழ்நாட்டிலிருந்து மட்டும் சென்று வந்தோர் ஏழு பேர். இந்தியக் குழந்தைகள் வாகை சூடிப் பெற்று வந்தது இருபத்தைந்து தங்கப்பதக்கங்கள். இருபத் தைந்தில் தமிழ்நாட்டுக்கு மட்டும் கிட்டியது ஒரே ஒரு தங்கப் பதக்கம். சுதா தட்டிப் பறித்து வந்த தங்கப் பதக்கம் அது.

சைக்கிள் பந்தயத்தில் 500 மீட்டரை 1 நிமிடம் 12 வினாடி களில் பறந்து வந்து சேர்ந்திருக்கிறாள். நியாயமான பெருமை யில் பூரித்திருக்கிறது 'விடிவெள்ளி'.

— ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி – மூன்றாம் பரிசுக் கதை

தினம் தினம் புதுப் புது ஏழைகளைப் பிரசவிக்கும் மும்பைப் பெருநகரின் பிரதான குடிசைப் பகுதியில் அமைந்திருந்தது ஸ்ரீமதி காந்திபென் ஜம்னாலால் கனையலால் ட்ரஸ்ட்.

ஓர் அறக்கட்டளையின் செக்ரட்டரியாக இருப்பதில்தான் எத்தனை தலைவலி? அதுவும் இந்த மெடிகல் டிபார்ட்மெண்ட் இருக்கிறதே, சரியான 'மைக்ரெய்ன்' ரகம்! ஒண்ணரையணா உதவித் தொகைக்கு ஓராயிரம் விண்ணப்பங்கள் வந்திருக்கும்!

காரியதரிசிக்கு அத்தனையையும் படித்து, ஃபைல் செய்து, அவற்றின் நிறை குறைகளை அலசி, உதவி பெறுவதற்கு மிகவும் தகுதியானவர்கள் யார் எனக் குறிப்பெழுதி, அறங்காவலர்களின் முன் சமர்ப்பிக்கும் வேலை!

இப்படி ஒருத்தி, முதுகொடிய உட்கார்ந்து கொண்டு, கண்ணில் விளக்கெண்ணெய் விட்டுக் கொள்ளாத குறையாக ஆராய்ச்சி செய்திருக்கிறாளே, அதை அப்படியே ஒப்புக் கொள்வோம் என்று மற்றவர்கள் நினைப்பார்களா? அதுதானில்லை!

ஜெயஸ்ரீ ராஜ்

என்னவோ நாம் சிபாரிசு செய்திருப்பவர்கள் நமக்கு ஒன்றுவிட்ட, இரண்டுவிட்ட உறவுக்காரர்களைப் போல் நினைத்துக் கொண்டு, ட்ரஸ்டிகள் துருவித் துருவி எடுப்பார்கள் – அதாவது, அவ்வளவு நடுநிலையாளர்களாயிருக்கிறார்களாம்! சிலசமயம், சிபாரிசு செய்யப்பட்டிருப்பவர்களை நேர்காணலுக்கு ஆட்படுத்தி, "இது அவ்வளவு ஸீரியஸில்லை" என ஒதுக்கிவிட்டு, வேறு வியாதியஸ்தர்களைத் தேடச் சொல்வார்கள்!

இத்தனை நொந்து கொண்டு, இந்த கௌரவச் செயலாளர் வேலையைச் செய்ய வில்லை என்று யார் அழுதார்கள் என்கிறீர்களா? உதவித் தொகை பெறுபவர்கள், ட்ரீட்மெண்ட் முடிந்து நலமாக வீடு திரும்பும் போது, நம்மிடம் வந்து முகமெல்லாம் மலர்ச்சியாக ஒரு சிரிப்பைச் சிந்துவார்களே! அதற்குத்தான்! ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண எங்களுக்கு மட்டும் தெரியதாக்கும்? அத்துடன் நமக்குத் தெரிந்த ஏழை பாழைகளுக்கும் உதவலாமே என்பது போனஸ் மகிழ்ச்சி!

இதோ, இந்த அரையாண்டுக்கு ஒதுக்கப்பட்டிருப்பது இருபதினாயிரம் ரூபாய்! டாக்டர் சான்றிதழ்களுடன் தனி நபர்களிடமிருந்து வந்திருக்கும் கடிதங்கள், ஆஸ்பத்திரிகளிலிருந்து வந்துள்ள கோரிக்கைகள் எல்லாவற்றையும் சலித்ததில், தேறியது இரண்டு!


பாண்டுரங் நந்தகாவ்கர் என்ற 45 வயது லிவர் பேஷண்ட். நரேந்திர பாமல் என்ற 68 வயது ஹார்ட் பேஷண்ட்.

லிவர் பேஷண்டுக்கு மூன்று பெண் குழந்தைகள். கார்ப்பொரேஷனில் ஸ்வீப்பர் வேலை. அவன் மனைவி அஞ்சலியும் ஏற்கெனவே பரிச்சயமானவள். எதிர் பில்டிங்கில் 'கிரஷ்' நடத்தும் மாமி வீட்டு வேலைக்காரி. 'அவ வீட்டுக்காரன் ரொம்ப சீக்காளி. சாப்பாட்டுக்கே ரொம்ப கஷ்டப்படறா பாவம்!' என மாமி சொல்லும் கண்ணீர்க் கதைகளின் அடிப்படையில் வருடா வருடம் அஞ்சலியின் குழந்தைகளுக்கு யூனிஃபார்ம், புக்ஸ், ட்ரஸ்டிகளின் வீட்டிலிருந்து வரும் பழைய துணிமணிகள் போன்றவற்றை உதவி வருகிறோம்.

இரண்டு வருடம் முன்பு கூட என்னவோ 'இண்டஸ்டினல் டிஸ்ஃபங்ஷனு'க்காக, அஞ்சலியின் கணவனுக்கு மெடிகல் எய்ட் அளித்த நினைவு! பாவம், மறுபடியும் என்ன கோளாறோ?

ஹார்ட் பேஷண்ட், மில் தொழிலாளியாயிருந்து ரிடையரானவன். காய்கறி வியா

செய்யாமல்


செய்த உதவி

பாரம், திருமணமான இரண்டு பெண்கள், ஒரே பிள்ளை கோபித்துக் கொண்டு வெளி யேறிவிட்டான். ஆபரேஷனுக்குத் தேவை யான எழுபதாயிரத்தில், ஐம்பதினாயிரத்தை ஏனைய இடங்களிலிருந்து ஆஸ்பத்திரியே ஏற்பாடு செய்திருந்தது. இந்த இருபதினா யிரம் கிடைத்தால் இன்னும் நாலு படி ஏறி இறங்க வேண்டாம் எனக் கண்ணீரோடு வேண்டிச் சென்றிருந்தாள் அவன் மனைவி.

ஆளுக்குப் பத்தாயிரம் எனக் குறிப் பெழுதுவது உசிதமாகப்பட்டது.

என்னவோ ராஜீவ் காந்தி கொலை வழக் கில் தீர்ப்பு எழுதப் போவது போல், பேனா வைக் கையிலெடுக்கவும், ஆபீஸ் வாயிலில் நிழலாடவும் சரியாயிருந்தது.

"உள்ளே வரலாமா?"

நுழைந்தவளின் கந்தல் ஆடையையும், எண்ணெய் காணாத தலையையும் மீறி, கண் களில் ஒளி. அழகிய முகத்தை சோகம் களை யிழக்கச் செய்திருந்தது. இளமையான உடலில் கவலை, முதுமையை ஏற்றியிருந்தது.

"நான்தான் அஞ்சலி. பாண்டுரங் நந்த காவ்கரின் மனைவி. உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்!"

அனாவசிய கண்ணீர் நாடகங்கள் அரங் கேறுமுன், "இதோ பாரும்மா... உன் வீட்டுக் காரருக்கு இருபதாயிரம் கேட்டிருக்கே. மொத்த உதவித் தொகையே அவ்வளவுதான். அத்தனையும் உன் ஒருத்திக்கே கொடுக்க முடியாது. ஒரு பத்தாயிரம் கிடைக்கலாம். மத்ததுக்கு நீ வேறு எங்கியானா முயற்சி பண்ணு..." என முடித்தேன்.

அவள் முகம் விழுந்துவிட்டது. பாவமாக இருந்தது.

"என்னம்மா செய்யறது? இன்னொரு ஹார்ட்கேஸ";அதுவும் பரிதாபமாத்தான் இருக்கு" தேறுதல் வார்த்தைகள்தாம் - முடிக்க விடவில்லை.

"யாரு... பாடீல் மாமாவுக்கா? அவுங்களும் எங்க குப்பத்துலதான் இருக்காங்க. தெரிஞ்ச வங்கதான்" என பரபரத்தாள்.

"தெரிஞ்சவங்கன்னா அவுங்களுக்கு வேறு எங்கிருந்தாவது உதவி கிடைக்குதான்னு கேட்டுப் பாரேன்! அப்போ உன் தேவை கன்ஸிடர் பண்ணலாம்..."

"வந்து... அதுக்கில்லைங்க. ம்... எல்லாப் பணத்தையும் நீங்க அவுங்களுக்கே கொடுத் துட முடியுங்களா....?"

ஆயிரம் வாட் மின்சாரத்தை பாய்ச்சி

"அந்த ஆபீஸ் மானேஜர் ஏன் உலக உருண்டையை மேஜை மேலே வைச்சு அதை சுத்தி விட்டுக்கிட்டே இருக்கார்?"

"உலகம் முழுக்க லஞ்சம் இருக்குன்னு சிம்பாலிக்கா தெரிவிக்கத்தான்!" – சீர்காழி ரேவதி

யிருந்தால் கூட அவ்வளவு 'ஷாக்' அடித் திருக்காது! என்ன பெண் இவள்?

"ஏன்... நீ வேற ஏற்பாடு பண்ணிட்டியா?"

அவள் தலை ஆட்டியதை வைத்து எதுவும் அனுமானிக்க முடியவில்லை. இவள் தியாகியா? அல்லது போகியா? (கள்ளக் காதலன் இருப்பானோ...?) மூன்று பெண் குழந்தைகள் வேறு... அவற்றின் கதி... ஐயையோ... கலக்கியது! கூடாது... சும்மா விடக் கூடாது...

"ஏன் பொய் சொல்கிறாய்?"

ஒரே அதட்டலில் அவள் துவண்டு விட் டாள். அவள் என்ன செய்கிறாள் என்பது புரிபடும் முன்னே, அவசர அவசரமாக முதுகு, இடுப்புப் பகுதி, கால்கள் என புடை வையை நீக்கிவிட்டுக் காட்டினாள். தோல் வழண்டு, ஒரே கொப்புளங்களாய்... ஐயையோ இதென்ன பயங்கரம்?

"என் வீட்டுக்காரர் குடிச்சுட்டு வந்து அடிச்ச அடிச்சுதான் இந்த நிலைமை. வர்ர சம்பளத்தை அப்பிடியே எங்கிட்ட குடுத் தார்னா நான் ராணி மாதிரி இருந்திருக் கணும். ஆனா அத்தனையும் குடிச்சே ஒழிச் சுட்டான் பாவி! இருக்கற மூணு பொண் ணுங்களுக்குக் கஞ்சி ஊத்தவே வழியில்லை. இன்னும் பிள்ளை வேணும், பிள்ளை வேணும்னு உயிரெடுக்கறான்!"

"அடக் கஷ்டமே..."

"இதுக்கு முன்னாடியும் ரெண்டு வாட்டி ஸீரியஸாகி, பெரிய பெரிய ஆஸ்பத்திரியில வைத்தியம் பாத்திருக்குங்க. முதவாட்டி ஆபீஸ்காரங்களே உதவினாங்க. அடுத்த வாட்டி இதே மாதிரி அங்க இங்கன்னு கை யேந்தி பிச்சை எடுத்துப் பிழைக்க வைச் சேன். ஆனா அவுரு மாறலீங்க! அதே குடி, அதே அடி, பிள்ளை வேணும்னு பிடுங்கல்! வேற கல்யாணம் பண்ணிப்பேன்னு பய முறுத்தல்... போதுங்க நான் பட்ட பாடு! பேசாம விட்டுடுங்க. பாடீல் மாமா ரொம்ப நல்லவரு. பொண்டாட்டி பிள்ளைகளை ரொம்ப நல்லா கவனிச்சுக்கிட்டாரு. பொண் ணுங்களுக்கு கல்யாணம் செய்து, பிள்ளை யும் நல்ல வேலையில உக்காத்தினாரு! இந்த வயசுலயும் காய்கறி வியாபாரம் செஞ்சு பொண்டாட்டியைக் காப்பாத்தறாரு. அவுரு வாழ வேண்டியவருங்க; அவருக்கே பணத்



தைக் குடுத்துடுங்க, எங்களுக்குக் குடுக்காதிங்க. வேண்டாங்க..." காலைப் பிடித்துக் கொண்டு அஞ்சலி கதறிய கதறல் மனசை உலுக்கியது. இத்தனை வருடத்தில் இப்படி ஒரு கேஸைப் பார்த்ததேயில்லை!

"ஏம்மா, நீயோ சின்னவளாயிருக்கியே... இவனும் போயிட்டா உன்னையும், குழந்தைங்களையும் யார் காப்பாத்துவாங்க?"

"என் குழந்தைங்களை நான் காப்பாத்துவேங்க! என்னை என்னோட வேலை காப்பாத்தும்...." அவள் தீர்க்கமாக சிந்தித்துதான் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறாள் என்பது தெரிந்தது.

'சரி.. நீ போ' என்று அவளை அனுப்பி விட்டு, கொஞ்சம் 'சி.ஐ.டி.' வேலை பார்த்ததில் அவள் சொன்னது அத்தனையும் உண்மை என்று தெரிய வந்தது. பேசாமல் அவள் விண்ணப்பத்தை ஒதுக்கிவிட்டு பாமுலுக்கே சிபாரிசு செய்ததில், ட்ரஸ்டிகள் எல்லோரும் இதயபூர்வமாக அதை ஏற்றுக் கொண்டதில், நரேந்திர பாமுல் ஆபரேஷன் முடிந்து, நலமாக வீடு சென்ற செய்தி எட்டியது.

பாண்டுரங் நந்தகாவ்கர் பற்றித்தான் நியூஸேயில்லை! அஞ்சலி குடும்பத்துடன் கிராமத்துக்குச்சென்று விட்டதாக மாமி சொன்னாள்.

இரண்டு வருடம் ஓடிவிட்டது. இப்போது ட்ரஸ்டின் 'எஜுகேஷன் டிபார்ட்மெண்டில்' குப்பை கொட்ட வேண்டிய வேலை! பக்கத்திலிருந்த முனிசிபல் ஸ்கூலிலிருந்து, யூனிஃபாரம், புக்ஸ் தேவைப்படும் ஏழைப் பெண் குழந்தைகளின் லிஸ்ட் வந்திருந்தது. அது சம்பந்தமாகத் துணிக்கடை போக வேண்டிய நிர்பந்தம்!

வழியில், "நமஸ்தே ஜி! என்னை நினைவிருக்கிறதா?" என எதிர்ப்பட்டாள் ஒரு பெண்மணி. பளிச்சென்ற காட்டன் புடைவை. தூக்கிப் போட்ட கொண்டை, ஒரு கையில் வாட்ச்! மறுகையில் கறிகாய்க் கூடை, பளபளப்பான அந்தக் கண்கள்.... எங்கோ பார்த்தது போல்..... அஞ்சலி! பாண்டுரங் நந்தகாவ்கரின் மனைவி! பட்டென்று நினைவுக்கு வந்து விட்டது!

"வாங்களேன்; எதிர்த்தாற்போல்தான் வீடு, தயவு செய்து ஒரு டீயாவது என் வீட்டில் சாப்பிட்டால்தான் எனக்கு சந்தோஷமாயிருக்கும்..."

தரதரவென்று கையைப் பிடித்து அந்த எதிர் கட்டடத்திற்கு அழைத்துச் சென்றாள். 'சால்'தான்! (ஒரே ரூம் கொண்ட வரிசையான வீடுகள்). பி.எம்.ஸி குவார்டர்ஸ்! (அட! பிழைத்துக் கொண்டு ஒழுங்காகக் குடும்பம் நடத்துகிறானா?)

உள்ளே துப்புறவாயிருந்தது. ஒரு சோபா சின்ன ப்ளாக் அண்ட் ஒயிட் டீ.வி. ஒரு இரும்புக் கட்டில், ப்ளாஸ்டிக் மலர்கள், தோரணங்கள். அலமாரியில் ஜரிகை மாலை போட்ட ஃபோட்டோவில் பாண்டுரங் நந்தகாவ்கரா?!

திரை மறைத்த கையளவு கிச்சனில், ஒரு பெண் பாத்திரங்களை கவிழ்த்துக் கொண்டிருந்தது. மற்ற இரண்டும் கட்டிலில் அமர்ந்து எழுதிக் கொண்டிருந்தன.

"அஞ்சு சாய் கொண்டு வாம்மா..." உள்ளே நோக்கிக் குரல் கொடுத்துவிட்டு, அவளும் அமர்ந்து கொண்டாள்.

"குழந்தைங்கள்ளாம் பக்கத்து முனிசிபல் ஸ்கூல்லதான் படிக்கிறாங்க. பெரியவ அஞ்சனா ஒன்பதாவது; அடுத்தவ சஞ்சனா ஏழாவது, சின்னவ ரஞ்சனா அஞ்சாவது. இவங்கப்பா ஸர்வீஸ்ல இருக்கும் போதே போயிட்டதால, எனக்கு பி.எம்.ஸியில் ஸ்வீப்பர் வேலை குடுத்துட்டாங்க. ஐயாயிரம் வரை கிடைக்குது. இப்போ நல்லா இருக்கோம்."

கடைசி வார்த்தைகள் முகத்தில் அறைந்தன. அதே வேலை! அதே சம்பளம்! அவன் கையிலிருந்தபோது, 'குடி'க்குப் பயன்பட்டது. அவள் கையிலிருக்கும் போது குடித்தனத்திற்கு பயன்படுகிறது! விடைபெறும் போது கை கூப்பினாள் –

"நீங்க ரொம்ப உதவியிருக்கீங்க."

எதைச் சொல்கிறாள்? அவன் இருந்த போது, வருடா வருடம் யூனிஃபார்ம், புக்ஸ் என்று உதவியதையா? அல்லது, பட்டென்று கையிலிருந்த முனிசிபல் ஸ்கூலின் 'தேவை' லிஸ்டை சரிபார்த்ததில்... அஞ்சனா, ரஞ்சனா என்ற பெயர்கள் இல்லை! இல்லவே இல்லை! புரிந்து விட்டது... நாம் உதவி செய்யாமல் விட்டதைத் தான் உதவி என்றிருக்கிறாள்!

இரக்கத்தை மறுக்கத் தெரிந்த பெண்களின் வாழ்க்கையில் இறக்கமே இல்லை!



முப்பத்து இரண்டாம் அத்தியாயம்

பிரம்மாவின் தலை

வந்தியத்தேவன் குடந்தை ஜோதிடரின் வீட்டுக்குள் இரண்டாம் முறையாகப் பிரவேசித்தபோது அவனுடைய உள்ளத்தில் ஓர் அதிசயமான இன்ப உணர்ச்சி உண்டாயிற்று. அந்தச் சிறிய வீட்டுக்குள்ளேதான் முதன்முதலாக அவன் இளையபிராட்டி குந்தவையைப் பார்த்தான். அவளுடைய செந்தாமரை வதனத்தையும், வியப்பினால் விரிந்த கரிய பெரிய கண்களையும் பார்த்துத் திகைத்து நின்றான். அவளுடைய தேனினுமினிய திங்குரல் அவன் செவியில் விழுந்ததும் அங்கேதான். இந்த நினைவுகள் எல்லாம் அலை மோதிக்கொண்டு அவன் உள்ளத்தில் பொங்கி வந்தன. அவற்றினால் அவன் செவிகள் இனித்தன; உள்ளம் இனித்தது; உடல் முழுதுமே இனித்துச் சிலிர்த்தது!

சோதிடர் அப்போதுதான் மாலை வேளைப் பூஜைக்கு ஆயத்தம் செய்துகொண்டிருந்தார். இவனைப் பார்த்ததும் 'வா, அப்பனே, வா! வாணர் குலத்து வல்லத்தரையன்தானே?'' என்றார்.

''ஆம், சோதிடரே! உம் ஜோசியம் முன் பின்



அமரர் கல்கி

கல்கி கலெக்ஷன்

னாக இருந்தாலும், உம்முடைய ஞாபக சக்தி பிரமாதம்!" என்றான் வந்தியத் தேவன்.

"தம்பி! சோதிட சாஸ்திரம் பயில்வதற்கு ஞாபக சக்தி மிக அவசியம். கிரகங்கள், நட்சத்திரங்கள், தசைகள், புக்திகள், யோகங்கள், - இவை லட்சம் விதமான சேர்க்கை உள்ளவை. அவ்வளவையும் மனத்தில் வைத்துக்கொண்டு, வருஷம், மாதம், நாள், நாழிகை, வினாடி, ஒரு வினாடி யில் நூற்றில் ஒரு பங்கு நேரம், - இவ்வளவையும் கணக்கிட்டுப் பார்த்தல்லவா சொல்ல வேண்டும்! போகட்டும்; என் ஜோசியம் முன் பின்னாக இருந்தாலும் என்றாயே? அதன் பொருள் என்ன? நான் உனக்குச் சொன்னது ஒன்றும் பலிக்கவில்லையா?"

"அதையும் உங்கள் ஜோசியத்திலேயே கண்டுபிடித்துக் கொள்ள வழி இல்லையா?"

"உண்டு, உண்டு! ஜோசியத்தினாலும் கண்டுபிடிக்கலாம்; ஊகத்தினாலும் கண்டுபிடிக்கலாம். உனக்கு நான் கூறியவை பலித்துத்தான் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் நீ திரும்பவும் இந்தக் குடிசைக்குள் வருவாயா?"

"ஆமாம்; ஆமாம். உம்முடைய சோதிடம் பலிக்கத்தான் செய்தது."

"அப்படிச் சொல்லு! எந்தவிதத்தில் பலித்தது, அப்பனே?"

"நீர் எனக்குச் சொன்னது அப்படியே பலித்தது. 'நீ போகிற காரியம் நடந்தால் நடக்கும்; நடக்காவிட்டால் நடக்காது' என்றீர். அந்தப்படியே நடந்தது. 'நடந்தது' என்று நான் சொல்வதுகூடப் பிசகு. என்னைக் கண்டவுடனேயே ஓட்டம் பிடித்து ஓடிற்று!"

"தம்பி! நீ பெரிய வேடிக்கைக்காரனாயிருக்கிறாய்!"

"உண்மையான வார்த்தை. நான் வேடிக்கைக்காரன்தான். அத்துடன் கொஞ்சம் கோபக்காரன்."

"இந்தக் குடிசைக்குள் வரும்போது கோபத்தை வெளியில் மூட்டை கட்டி வைத்து விட்டு வர வேண்டும்."

"அப்படிச் செய்யலாம் என்றுதான் பார்த்தேன். ஆனால் உம்முடைய சீடனை வீட்டு வாசலில் காணவில்லை. கோப மூட்டையைத் திண்ணையில் வைத்தால் யாராவது அடித்துக் கொண்டு போய் விட்டால் என்ன செய்கிறது என்று உள்ளே கொண்டு வந்துவிட்டேன். உம்முடைய சீடன் எங்கே, சோதிடரே! போனதடவை அவன் என்னை வாசலில் தடுத்து நிறுத்தப் பார்த்தது அப்படியே என் நினைவில் இருக்கிறது!"

"இன்றைக்கு ஐப்பசி அமாவாசை அல்லவா? அதற்காக அவன் கொள்ளிடக் கரைக்குப் போயிருப்பான்."

"அமாவாசைக்கும் கொள்ளிடக் கரைக்கும் என்ன சம்பந்தம்?"

"கொள்ளிடக் கரையில் காளாமுகர்களின் மகா சங்கம் இன்று நடைபெறுகிறது. என் சீடன் காளாமுகத்தைச் சேர்ந்தவன்."

"சோதிடரே! நான் சைவ மதத்தையே விட்டு விடலாம் என்று யோசித்துக்கொண்டிருக்கிறேன்."

"விட்டு விட்டு...?"

"உமது சிநேகிதர் ஆழ்வார்க்கடியார் நம்பி இருக்கிறாரே..."

"திருமலையைச் சொல்கிறாயாக்கும்!"

"ஆம்; அவரிடம் தீட்சை பெற்று உடம்பெல்லாம் நாமத்தைப் போட்டுக் கொண்டு வீர வைஷ்ணவனாகி விடலாம் என்று உத்தேசிக்கிறேன்."

"அது ஏன் அப்படி?"

"காளாமுக சைவர்கள் சிலரைப் பார்த்தேன். இங்கே வருகிற வழியிலே கூடப் பார்த்தேன். அவர்களையும் அவர்கள் வைத்திருக்கும் மண்டை ஓடுகளையும் பார்த்த பிறகு சைவத்தை விட்டு விடலாம் என்று தோன்றுகிறது."

"தம்பி! எத்தனையோ போர்க்களங்களைப் பார்த்திருக்கும் உனக்கு மண்டை ஓடுகளைக் கண்டு என்ன

பயம்?''

''பயம் ஒன்றுமில்லை; அருவருப்புத்தான். போர்க்களத்தில் பகைவர்களைக் கொல்வதற்கும் மண்டை ஓடுகளை மாலையாகப் போட்டுக் கொள்வதற்கும் என்ன சம்பந்தம்?''

''உன்னுடைய எஜமானர் ஆதித்த கரிகாலர் வீரபாண்டியனுடைய தலையை வெட்டி எடுத்துக்கொண்டு வந்து ஊர்வலம் விடவில்லையா?''

''அவர் ஏதோ சபதம் செய்திருந்தபடியால் அவ்விதம் செய்தார். அதற்காகப் பிறகு எவ்வளவோ வருத்தப்பட்டார். அவர்கூட மண்டை ஓட்டை மாலையாகப் போட்டுக் கொள்ளவில்லை; கையிலும் எடுத்துக் கொண்டு திரியவில்லையே? காளாமுகர்கள் எதற்காக அப்படிச் செய்கிறார்கள்?''

''வாழ்க்கை அநித்தியம் என்பதை மறந்து விடாமலிருப்பதற்காக அவர்கள் அவ்வாறு செய்கிறார்கள். நீயும் நானும் திருநீறு பூசிக் கொள்கிறோமே, அது மட்டும் என்ன? இந்த மனித உடம்பு நிலையானது அல்ல. ஒருநாள் சாம்பராகப் போகிறதென்பதை மறந்து விடாமலிருப்பதற்குத்தானே திருநீறு பூசிக் கொள்கிறோம்?''

''மனித தேகந்தான் அநித்தியம் என்பது சரிதான். இது எரிந்து சாம்பராகும்; அல்லது மண்ணோடு மண்ணாகும். சிவபெருமானுடைய திருமேனி அப்படியல்லவே! பரமசிவன் ஏன் கையில் மண்டை ஓட்டை வைத்திருக்கிறார்?''

"தம்பி! சிவபெருமானுடைய கையில் உள்ள மண்டை ஓடு ஆணவத்தைக் குறிக்கிறது. ஆணவத்தை வென்றால் ஆனந்த நிலை ஏற்படும் என்பதைக் காட்டுகிறது. சிவபெருமான் கையில் மண்டை ஓட்டுடன் ஆனந்த நடனம் செய்கிறார் அல்லவா?''

''மண்டை ஓடு எப்படி ஆணவத்தைக் குறிக்கும், எனக்குத் தெரியவில்லையே?''

''உனக்குத் தெரியாதது இன்னும் எவ்வளவோ இருக்கிறது, தம்பி! மண்டை ஓடு ஆணவத்தைக் குறிப்பது எப்படி என்பதை மட்டும் இப்போது தெரிந்து கொள். பிரம்ம தேவனும் திருமாலும் ஒருசமயம் கர்வம் கொண்டார்கள். 'நான் பெரியவன்; நான்தான் பெரியவன்' என்று சண்டையிட்டார்கள். சிவன் அவர்களுக்கு நடுவில் வந்தார். என்னுடைய சிரசை ஒருவரும் என்னுடைய பாதத்தை ஒருவரும் கண்டுபிடித்துக்கொண்டு வாருங்கள். யார் பார்த்து விட்டு முதலில் வருகிறாரோ, அவர்தான் உங்களில் பெரியவர்' என்றார். மகாவிஷ்ணு வராக உருவங்கொண்டு சிவனுடைய பாதங்களைப் பார்ப்பதற்குப் பூமியைக் குடைந்துகொண்டு சென்றார். பிரம்மா அன்னப் பறவையின் உருக்கொண்டு வானத்தில் பறந்து சென்றார். திருமால் திரும்பி வந்து சிவனுடைய அடியைக் காண முடியவில்லை என்று உண்மையை ஒப்புக்கொண்டார். பிரம்மா திரும்பி வந்து சிவனுடைய முடியைப் பார்த்து விட்டதாகப் பொய் சொன்னார்! அப்போது சிவன் பிரம்மாவுக்கிருந்த ஐந்து தலைகளில் ஒன்றைக் கிள்ளி எடுத்து அவரைத் தண்டித்தார். ஆணவம் காரணமாகப் பிரம்மா சண்டையிட்டுப் பொய் சொன்னபடியால் அவருடைய தலை ஆணவத்துக்குச் சின்னமாயிற்று...''

வந்தியத்தேவன் எதையோ நினைத்துக்கொண்டவன் போல் இடி இடி என்று சிரித்தான்.

''என்னத்தைக் கண்டு இப்படிச் சிரிக்கிறாய், தம்பி!''

"ஒன்றையும் கண்டு சிரிக்கவில்லை. ஒரு விஷயம் நினைவுக்கு வந்தது. அதனால் சிரித்தேன்."

"அது என்ன விஷயம்? இரகசியம் ஒன்றுமில்லையே?''

"இரகசியம் என்ன? பிரம்மாவைத் தண்டிப்பது போல் என்னையும் தண்டிப்பதாயிருந்தால், குறைந்த பட்சம், பதினாயிரம் தலையாவது எனக்கு

இருந்தால்தான் சரிக்கட்டி வரும்! அதை எண்ணித்தான் சிரித்தேன்."

"அத்தனை பொய்கள் சொல்லியிருக்கிறாயாக்கும்!"

"ஆம், சோதிடரே! அது என் ஜாதக விசேஷம் போலிருக்கிறது. பொன்னியின் செல்வரைச் சந்தித்த பிறகு உண்மையே சொல்வதென்று தீர்மானித்திருந்தேன். ஒருதடவை ஒரு முக்கியமான உண்மையையும் சொன்னேன். அதைக் கேட்டவர்கள் நகைத்தார்கள்; ஒருவரும் நம்பவில்லை!"

"ஆம்; தம்பி! காலம் அப்படிக் கெட்டுப் போய்விட்டது. இந்த நாளில் பொய்யையே ஜனங்கள் நம்புவதில்லை; உண்மையை எப்படி நம்பப் போகிறார்கள்?"

"உம்முடைய ஜோதிடத்தின் கதியும் அப்படித்தானாக்கும்! சோதிடரே! இளவரசர் அருள்மொழிவர்மரைப் பற்றி நீர் கூறியது நினைவிருக்கிறதா? வானத்திலே வடதிசை அடிவாரத்தில், நிலைத்து நின்று ஒளிரும் துருவ நட்சத்திரம் போன்றவர் பொன்னியின் செல்வர் என்று நீர் சொல்லவில்லையா?"

"சொன்னேன்; அதனால் என்ன?"

"அவரைப் பற்றிய செய்தியை நீர் கேள்விப்படவில்லையா?"

"கேள்விப்படாமல் எப்படி இருக்க முடியும்? நாடு நகரமெல்லாம் அதே பேச்சாகத்தானே இருக்கிறது?"

"துருவ நட்சத்திரம் கடலில் மூழ்கி விட்டதென்று நீர் கேள்விப்பட்டதுண்டா?"

"துருவ நட்சத்திரம் கடலில் மூழ்காது. ஆனால் அந்த நிலைகுலையா நட்சத்திரத்தையும் மேகங்கள் சில சமயம் மறைக்கலாம் அல்லவா? இன்றைக்குக் கூட வடதிசையில் மேகங்கள் குமுறுகின்றன. இன்று இரவு நீர் எவ்வளவு முயன்றாலும் துருவ நட்சத்திரத்தைக் காண முடியாது. அதனால் அந்த நட்சத்திரம் இல்லாமற் போய் விடுமா?"

"அப்படியா சொல்கிறீர்? பொன்னியின் செல்வரைப் பற்றிய உண்மையான செய்தி ஏதாவது உமக்குத் தெரியுமா?"

"எனக்கு எப்படித் தெரியும்? நீதான் அவருடன் கடைசியாகக் கடலில் குதித்தாய் என்று பேச்சாயிருக்கிறது. தெரிந்திருந்தால், உனக்கு அல்லவா தெரிந்திருக்க வேண்டும்? உன்னைக் கேட்கலாம் என்று எண்ணியிருந்தேன்."

வந்தியத்தேவன் பேச்சை மாற்ற விரும்பி, "சோதிடரே! வால் நட்சத்திரம் இப்போது எப்படி இருக்கிறது?" என்று வினவினான்.

"மிக மிக நீளமாகப் பின்னிரவு நேரங்களில் தெரிகிறது. இனிமேல் நீளம் குறைய வேண்டியதுதான். தூமகேதுவினால் விபத்து ஏதேனும் ஏற்படுவதாயிருந்தால், அதி சீக்கிரத்தில் அது ஏற்பட்டாக வேண்டும். கடவுளே! இராஜ குலத்தில் யாருக்கு என்ன நேரிடுமோ என்னமோ!" என்றார் சோதிடர்.

வந்தியத்தேவனுடைய உள்ளம் அதிவேகமாக அங்குமிங்கும் பாய்ந்தது. தஞ்சையில் பாரிச வாயு பீடித்துப் படுக்கையாயிருக்கும் சுந்தர சோழரும், நாகைப்பட்டினத்தில் நடுக்கு சுரம் வந்து கிடக்கும் பொன்னியின் செல்வரும், கடம்பூர் மாளிகையில் நந்தினியைச் சந்திக்கப் போகும் ஆதித்த கரிகாலரும், இராஜ்யத்துக்கு ஆசைப்பட்டு மக்களின் கோபத்துக்குப் பாத்திரமாகியிருக்கும் மதுராந்தகரும், கையில் கொலை வாளை வைத்துக்கொண்டு கொஞ்சும் நந்தினியும் அவனுடைய உள்ளத்தில் வரிசையாகப் பவனி வந்தார்கள்.

"அதெல்லாம் போகட்டும், சோதிடரே! இராஜ குலத்தாரின் விஷயம் நமக்கு என்னத்திற்கு? நான் இப்போது மேற்கொண்டு போகும் காரியம் எப்படி முடியும், சொல்லுங்கள்!"

"முன்னே உனக்குச் சொன்னதைத்தான் இப்போதும் சொல்ல வேண்டியிருக்கிறது. அப்பனே!



எத்தனையோ விபத்துகள் உனக்கு வரும்; அவற்றையெல்லாம் வெற்றி கொள்வதற்கு எதிர்பாராத உதவிகளும் உனக்குக் கிடைக்கும்!'' என்றார் சோதிடர்.

இப்போது வாசலில் வந்து கொண்டிருப்பது விபத்தா, உதவியா என்று வந்தியத்தேவன் எண்ணமிட்டான். ஏனெனில், அச்சமயம் வாசலில் ஆடவர்களின் குரல்களுடன் பெண்களின் குரல்களும் கேட்டன. இருவரும் வாசற் புறத்தை நோக்கினார்கள்.

மறு நிமிடம் வானதி தேவியும் அவளுடைய பாங்கியும் உள்ளே வந்தார்கள்.

வந்தியத்தேவன் எழுந்து நின்று மரியாதையுடன் ''தேவி! மன்னிக்க வேண்டும்! தாங்கள் இங்கே வரப் போகிறீர்கள் என்று தெரிந்திருந்தால், நான் வந்திருக்க மாட்டேன்...!'' என்றான்.

முப்பத்து மூன்றாம் அத்தியாயம்

வானதி கேட்ட உதவி

''ஐயா! என்னிடம் ஏன் அவ்வளவு கோபம்? தங்களுக்கு நான் என்ன தீங்கு செய்தேன்?'' என்ற கொடும்பாளூர் இளவரசியின் தீனமான குரல் வந்தியத்தேவனை உருக்கிவிட்டது. இந்தப் பெண்ணிடம் தான் உண்மையில் எதற்காகக் கோபங் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. பூங்குழலி ஒரு கணம் அவன் மனக்கண் முன் வந்து மறைந்தாள். அவளுக்காக இந்தப் பெண்ணிடம் கோபங் கொள்ளுவது என்ன நியாயம்?

''அம்மணி! மன்னிக்க வேண்டும். அந்த மாதிரி ஒன்றும் நான் சொல்லவில்லை. தாங்கள் சோதிடரைப் பார்த்துவிட்டுப் போகும் வரையில் நான் வெளியில் காத்திருப்பேன் என்று தான் சொன்னேன். எனக்கு ஒன்றும் அவசரமில்லை. இப்போதுகூட...''


''தாங்கள் வெளியேற வேண்டிய அவசியம் ஒன்றுமில்லை. தங்களுக்கு அவசரமில்லை என்று அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். உண்மையில் நான் இங்கே சோதிடரைப் பார்க்க வரவில்லை. இவருடைய சோதிடத்தில் எனக்குக் கொஞ்சங்கூட நம்பிக்கை இல்லாமற் போய்விட்டது...!''

''தேவி! தங்கள் சித்தம் என் பாக்கியம்! ஒரு காலத்தில் என் சோதிடம் பொய்யாகவில்லை என்பதைத் தாங்களே உணர்வீர்கள். உணர்ந்து, இந்த ஏழையைப் பாராட்டுவீர்கள்!'' என்றார் சோதிடர்.

''அப்போது பார்த்துக் கொள்ளலாம்!'' என்று வானதி கூறிவிட்டு வந்தியத்தேவனைப் பார்த்து, ''ஐயா! நான் தங்களைப் பார்க்கத்தான் இங்கே வந்தேன். வழியில் தாங்கள் குதிரை மீது சென்றதைப் பார்த்தேன். நின்று விசாரிப்பீர்கள் என்று நினைத்தேன். பராமுகமாகப் போய் விட்டீர்கள்! அதைப் பற்றி நான் அதிகமாக ஆச்சரியப்படவில்லை. இந்த அநாதைப் பெண்ணிடம் அவ்வளவு அக்கறை எதற்காக இருக்க வேண்டும்?'' என்றாள்.

வந்தியத்தேவனுடைய கண்ணில் கண்ணீர் வந்து விடும் போலிருந்தது.

''தேவி! இது என்ன வார்த்தை? கொடும்பாளூர் பராந்தக சிறிய வேளாரின் செல்வப் புதல்வி, தென் திசைச் சேநாதிபதி பூதிவிக்கிரம கேசரியின் வளர்ப்புக் குமாரி, பழையாறை இளையபிராட்டியின் அந்தரங்கத்துக்கு உகந்த தோழி, இத்தகைய தங்களை



அநாதைப் பெண் என்று யார் ஒப்புக் கொள்வார்கள்? - பாதையில் நின்று விசாரிப்பது மரியாதைக் குறைவாயிருக்குமென்று வந்துவிட்டேன். வேறொன்றுமில்லை. என்னால் ஏதாவது ஆக வேண்டிய காரியம் இருந்தால்..."

"ஆம், ஐயா! தங்களால் ஆக வேண்டிய காரியம் அவசியம் இருக்கிறது. தங்களிடம் ஒரு முக்கியமான உதவி கோருவதற்காகத்தான் இந்த வீட்டுக்குள் நான் வந்தேன்..."

"சொல்லுங்கள்; என்னால் முடியக் கூடிய காரியமாயிருந்தால்..."

"தங்களால் முடியாத காரியம்கூட ஒன்று இருக்க முடியுமா, என்ன? இலங்கைப் பிரயாணத்தின்போது தங்களுக்கு நேர்ந்தவற்றையெல்லாம் ஓரளவு நானும் கேட்டறிந்திருக்கிறேன். நான் கோரும் உதவியை அளிப்பதாக முதலில் வாக்குத் தர முடியுமா?"

வந்தியத்தேவன் தயக்கத்துடன்

''தேவி! உதவி எத்தகையது என்று சொன்னால் நல்லது!'' என்றான்.

''ஆம்; தங்களை ஏமாற்றி நான் வாக்குறுதி பெறக் கூடாதுதான். ஆகையால் காரியத்தைச் சொல்லி விடுகிறேன். சோதிடருக்கும் தெரியலாம்; அதனால் பாதகம் இல்லை. நான் புத்த தர்மத்தை மேற்கொண்டு பிக்ஷுணி ஆகி விடுவது என்று தீர்மானித்திருக்கிறேன்...''

''என்ன? என்ன?''


''இது என்ன வார்த்தை?''

''கூடவே கூடாது!''

''உலகம் பொறுக்காது!''

''நடவாத காரியம்!''

இவ்வாறெல்லாம் சோதிடரும் வந்தியத்தேவனும் மாற்றி மாற்றிச் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்து விட்டு, வானதி, ''ஆம்; புத்த சந்நியாசினி ஆவதென்று முடிவு செய்துவிட்டேன். அதில் ஏன் உங்களுக்கு அவ்வளவு ஆட்சேபம்? தவறு என்ன? பழந் தமிழ்நாட்டில் எத்தனையோ பெண்கள் துறவறம் மேற்கொண்டதில்லையா? மாதவியின் புதல்வி மணிமேகலை துறவறம் நடத்தித் தெய்வத்தன்மை பெறவில்லையா? 'மணிமேகலா தெய்வம்' என்று அவளை நாம் இன்று



போற்றவில்லையா? அவ்வளவு பெரிய ஆசையெல்லாம் எனக்குக் கிடையாது. இந்தப் பயனற்ற வாழ்க்கையை முடித்துக் கொள்ள முயன்றேன்.' அதில் தவறி விட்டேன். கடவுளுடைய விருப்பம் நான் உயிரோடு இன்னும் சில காலம் இருக்க வேண்டும் என்பது போலும். அப்படி இருக்கக் கூடிய



காலத்தைப் புத்த மடம் ஒன்றில் சேர்ந்து ஜீவகாருண்யத் தொண்டு புரிந்து கழிக்க விரும்புகிறேன். இதற்குத் தாங்கள் எனக்கு உதவி செய்யத் தயங்க மாட்டீர்கள் அல்லவா?'' என்றாள்.

வந்தியத்தேவன் மனத்தில் ஒரு சிறிய சந்தேகம் உதித்தது. அது அவனைத் திடுக்கிடச் செய்தது.

''தேவி! தங்கள் தீர்மானம் நியாய மன்று. எனினும் அதைச் சொல்லும் உரிமை எனக்குக் கிடையாது. தங்கள் குடும்பத்தைச் சேர்ந்த பெரியவர்கள் தங்களுக்கு அதைப் பற்றி யோசனை சொல்ல வேண்டும். தங்கள் பெரிய தந்தை சேநாதிபதி பூதி விக்கிரம கேசரி கூடிய சீக்கிரம் திரும்பி வரப் போகிறார் என்று தெரிகிறது...''

''ஐயா! நான் யாருக்காகவும் காத்திருக்கப் போவதில்லை; யாருடைய யோசனையையும் கேட்கப் போவதுமில்லை. தீர்மானமாக முடிவு செய்து விட்டேன். தங்களுடைய உதவியைக் கோருகிறேன்...''

''இது விஷயத்தில் நான் என்ன உதவி செய்யக்கூடும், தேவி!''

''சொல்லுகிறேன். நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரத்துக்குப் போவதற்காக நான் புறப்பட்டேன். அங்கே சென்று புத்த குருமார்களை அடுத்துத் தீட்சை பெற்றுக் கொள்ள எண்ணிக் கிளம்பினேன். வழித் துணைக்குத் தாங்கள் என்னுடன் நாகைப்பட்டினம் வரையில் வர வேண்டும். அதுவே நான் கோரும் உதவி!''

வந்தியத்தேவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. கொடும்பாளூர் இளவரசி இலேசுப்பட்டவள் அல்ல. நாமும் இளையபிராட்டியும் பேசிக்கொண்டது அரைகுறையாக இவள் காதில் விழுந்திருக்க வேண்டும். தன்னிடம் முழு விவரங்களையும் தெரிந்து கொள்ளப் பார்க்கிறாள். நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரத்துக்குப் போகப் புறப்பட்டது இளவரசரை அங்கே சந்திக்கும் நோக்கத்துடனேதான்! அதற்கு ஒரு நாளும் தான் உடந்தையாயிருக்க முடியாது.

''அம்மணி! ரொம்பவும் மன்னிக்க வேண்டும். தாங்கள் கோரும் உதவி என்னுடைய சக்திக்கு அப்பாற்பட்டது.''

''இது என்ன விந்தை? ஈழ நாட்டுக்குச் சென்று எத்தனை எத்தனையோ அற்புதங்களைச் சாதித்து வந்தவருக்கு இந்த அநாதைப் பெண்ணை நாகைப்பட்டினத்தில் கொண்டு போய்ச் சேர்ப்பது முடியாத காரியமாகுமா?''

''தேவி! முடியாத காரியம் ஒன்றுமில்லை. ஆனால் நான் இச்சமயம் மேற்கொள்ள இயலாது. முதன்மந்திரியும் இளையபிராட்டியும் என்னை அவசரமாகக் காஞ்சிக்குப் போகும்படி கட்டளையிட்டிருக்கிறார்கள். அவர்கள் கொடுத்த ஓலையுடன் போகிறேன். மிக முக்கியமான இராஜாங்கக் காரியமாகப் போகிறேன். ஆகையினால்தான் முடியாது என்று சொன்னேன். வேறொரு சந்தர்ப்பமாயிருந்தால்...''

''ஆம், ஆம்! விருப்பமில்லாவிட்டால் எத்தனையோ காரணங்கள் சொல்லலாம். அதனால் பாதகம் இல்லை. தனியாகப் பிரயாணம் செய்வது என்ற எண்ணத்துடனே தான் கிளம்பினேன். வழியில் சிற்சில இடங்களில் காளாமுகர்களின் கூட்டங்களைப் பார்த்ததும் கொஞ்சம் பயம் உண்டாயிற்று. சகல ஜீவர்களையும் காப்பாற்றக் கடமைப்பட்ட கடவுள் இருக்கிறார். அவரிடம் பாரத்தைப் போட்டு விட்டுப் புறப்படுகிறேன். உலகத்தைத் துறந்து சந்நியாசினியாக முடிவு செய்த ஒரு பேதைப் பெண்ணை யார் என்ன செய்து விடுவார்கள்? போய் வருகிறேன், சோதிடரே!'' என்று கூறிவிட்டு வானதி புறப்பட்டாள். அவளைப் பின் தொடர்ந்து, போய்க்கொண்டே சோதிடர், ''தேவி! தேவி! இருட்டும் சமயமாகி விட்டதே! அமாவாசைக் கங்குல். அதோடு வடகிழக்கில் மேகங்கள் குமுறுகின்றன. இரவு இந்த ஏழையின் குடிசையில் தங்கி விட்டுக் காலையில் போகலாமே!'' என்றார்.

''இல்லை, சோதிடரே! மன்னிக்க வேண்டும். இரவு திருவாரூர் போய்த்

தங்குவதாக எண்ணம். இந்த மனிதர்தான் துணைக்கு வர மறுத்துவிட்டார். திருவாரூரில் யாராவது கிடைக்காமலா போகிறார்கள்? அப்படி நான் என் உயிரைப் பற்றிக் கவலைப்படவும் இல்லை. இதனால் யாருக்கு என்ன உபயோகம்...?''

சோதிடர் காதிலும் வந்தியத்தேவன் காதிலும் கடைசியாக விழுந்த வார்த்தைகள் இவைதான். வாசலில் காத்திருந்த பல்லக்கில் வானதி ஏறிக் கொண்டாள். பல்லக்கு மேலே சென்றது.

பல்லக்கு கண்ணுக்கு மறையும் வரையில் வந்தியத்தேவனும் சோதிடரும் அதைப் பார்த்த வண்ணம் நின்றார்கள்.

பிறகு வந்தியத்தேவன், "கொடும்பாளூர் இளவரசி சில காலத்துக்கு முன்பு வரையில் பெரும் பயங்கொள்ளியாயிருந்தாள். இளையபிராட்டியின் மற்றத் தோழிகள் இவளை அதற்காகப் பரிகசித்துக் கொண்டிருந்தார்கள். பொம்மை முதலையை நதியில் மிதக்க விட்டு இவளைப் பயமுறுத்திப் பார்த்தார்கள்; நான்கூட அதில் ஏமாந்து போனேன். இப்போது திடீரென்று இந்தப் பெண்ணுக்கு 'இவ்வளவு தைரியம் எப்படி வந்தது? இவள் தனியே பிரயாணம் செய்யக் கிளம்பியது என்ன விந்தை? இளையபிராட்டி இதற்குச் சம்மதித்ததுதான் எப்படி?'' என்றான்.

"எனக்கும் அது ஆச்சரியத்தையே அளிக்கிறது. சென்றமுறை இப்பெண் இந்தக் குடிசைக்கு வந்திருந்தபோது, திடீரென்று மயக்கம் போட்டு விழுந்து விட்டாள்; தயங்கித் தயங்கி ஈனஸ்வரத்தில் பேசினாள். அந்தக் கொடும்பாளூர் இளவரசிதானா இவள் என்றே சந்தேகமாயிருக்கிறது. இன்று எவ்வளவு படபடப்பாகவும் துணிச்சலாகவும் பேசினாள்?''

"இப்படிப்பட்ட திடீர் மன மாறுதலுக்கு என்ன காரணமாயிருக்கும் என்று நினைக்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

"ஏதோ முக்கியமான செய்தி இவளுடைய மனத்தில் ஒரு பெரும் அதிர்ச்சியை உண்டு பண்ணியிருக்க வேண்டும்.''

''அப்படி என்ன முக்கியமான செய்தி இருக்க முடியும்?''

''ஏன்? பொன்னியின் செல்வரைக் கடல் கொண்டு விட்ட செய்தியே போதாதா? இந்தப் பெண்ணுக்கும் இளவரசருக்கும் திருமணம் நடக்கக் கூடும் என்று பேச்சாயிருந்ததே!''

இவ்விதம் சோதிடர் கூறியபோது, வந்தியத்தேவன், 'பொன்னியின் செல்வரைக் கடல் கொண்டு விட்ட செய்தியா, அல்லது அவர் பிழைத்து நாகைப்பட்டினத்தில் இருக்கிறார் என்ற செய்தியா, அல்லது பூங்குழலியைப் பற்றி நான் கூறிய செய்தியா, எது இவளுக்கு இத்தகைய அதிர்ச்சியை அளித்திருக்கக் கூடும்?' என்று சிந்தனை செய்தான்.

"ஆம்; சோதிடரே! கொடும்பாளூர் வம்சத்தார் பரம்பரையான வீர சைவர்களாயிற்றே! இந்தப் பெண்ணுக்குத் திடீர் என்று புத்த மதத்தில் பற்று உண்டாவானேன்?'' என்றான்.

''பூர்வஜன்ம வாசனையாயிருக்கலாம்'' என்றார் சோதிடர்.

''நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரத்துக்குப் புறப்படுவானேன்?''

''அதுதான் எனக்கும் வியப்பை அளிக்கிறது!''

"உம்முடைய சோதிட சாஸ்திரத்தில் பார்த்துச் சொல்ல முடியாதா?''

''தம்பி! சோதிட சாஸ்திரத்தின் மூலம் இதை எப்படி அறியலாம்? இது ஒற்றாடல் சாஸ்திரத்தைச் சேர்ந்தது.''

"ஒற்றாடல் என்று ஒரு சாஸ்திரமா?''

"ஏன் இல்லை? பொய்யாமொழிப் புலவரின் திருக்குறளைப் பற்றி நீ கேட்டதில்லையா?''

"அப்படி ஒரு நூல் உண்டு என்று கேட்ட ஞாபகமாயிருக்கிறது.''

''அந்த நூலில் 'ஒற்றாடல்' என்று ஓர்

அதிகாரம் இருக்கிறது. அதில் பத்துப் பாடல்கள் இருக்கின்றன."

"அப்படியா? அவற்றில் இரண்டொரு நல்ல பாடல்கள் சொல்லுங்கள்!"

"எல்லாம் நல்ல பாடல்கள்தான். இதைக் கேள்:

'வினைசெய்வார் தஞ்சுற்றம் வேண்டாதார் என்றாங்கு
அனைவரையும் ஆராய்வது ஒற்று.

அரசன் தன் கீழ் ஊதியம் செய்வோரையும் தன்னுடைய சொந்த உறவினரையும் அவ்வாறே தன் பகைவர்களையும் ஒற்றர்கள் வைத்து ஆராய்ந்து கொள்ள வேண்டும் என்கிறார் வள்ளுவர். இன்னும் கேள்:

'துறந்தார் படிவத்தராகி இறந்தாராய்ந்து
என் செயினும் சோர்வில் தொற்று

துறவிகளைப் போல் வேடம் பூண்டும், செத்தவர்களைப் போலப் பாசாங்கு செய்தும், எதிரிகள் எவ்வளவு துன்புறுத்தினாலும் இரகசியத்தை வெளியிடாமலும் சோர்வில்லாமல் உழைப்பவன் ஒற்றன் என்று வள்ளுவர் கூறுகிறார். அரசர்கள் ஒரு ஒற்றனுடைய காரியத்தை இன்னொரு ஒற்றனைக் கொண்டு ஒற்றறிய வேண்டும் என்றும் அவர் சொல்லியிருக்கிறார்.

'ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல்.'

இந்தப் பாடல்களையெல்லாம் நீ கேட்டதில்லையென்றா சொல்கிறாய்?"

வந்தியத்தேவனுக்கு ஒரே வியப்பாய்ப் போய்விட்டது. இனி அவகாசம் கிடைத்ததும் திருக்குறளைப் படித்து விட்டுத்தான் வேறு காரியம் பார்ப்பது என்று தீர்மானித்துக்கொண்டான். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இப்படியெல்லாம் இராஜரீக முறைகளைப் பற்றி எழுதியவர் எத்தகைய அறிவாளியாயிருக்க வேண்டும்?

இன்னும் சற்றுப் பேசிக் கொண்டிருந்து விட்டு வந்தியத்தேவன் புறப்பட்டான். "இன்றிரவு இங்கே தாமதித்து விட்டுக் காலையில் போகலாமே?" என்று சோதிடர் கூறியதை அவன் கேட்கவில்லை.

"இன்னொரு சமயம் வருகிறேன்; அப்போது தங்கள் விருந்தாளியாயிருக்கிறேன்" என்றான்.

"இன்னொரு சமயம் நீ இங்கு வரும்போது என்னுடைய சோதிடங்கள் பலித்திருப்பதைக் காண்பாய்!" என்றார் சோதிடர்.

"ஐயா, சோதிடரே! நீர் சோதிடம் ஒன்றுமே சொல்லவில்லையே? சொல்லியிருந்தால் அல்லவா அவை பலிக்க முடியும்?" என்று கூறி நகைத்துக் கொண்டே வந்தியத்தேவன் குதிரை மீது ஏறிப் புறப்பட்டான்.

சோதிடர் வீட்டிலிருந்து சற்றுத் தூரம் வரையில் ஒரே பாதைதான் இருந்தது. பல்லக்குச் சென்ற பாதையிலேயே அவனும் போக வேண்டியிருந்தது. பின்னர், பாதைகள் இரண்டாகப் பிரிந்தன. ஒரு பாதை, வடக்கு நோக்கிக் கொள்ளிடக் கரைக்குச் சென்றது. இன்னொன்று, தென்கிழக்காகத் திருவாரூர் நோக்கிச் சென்றது. திருவாரூர்ச் சாலையில் வெகு தூரத்தில் பல்லக்குப் போய்க் கொண்டிருப்பதை வந்தியத்தேவன் பார்த்தான். ஒரு கணம் அவனுடைய உள்ளம் தத்தளித்தது. கொடும்பாளூர் இளவரசி கேட்ட உதவியை மறுக்க வேண்டி வந்துவிட்டதே! உண்மையிலேயே அவளுக்கு உதவி தேவையாயிருக்குமானால்... வழியில் அபாயம் ஏதேனும் ஏற்படுமானால்... பின்னால் அந்தச் செய்தி தெரியும்போது என்னை நானே மன்னித்துக் கொள்ள முடியுமா? வழித் துணை போக மறுத்தது பற்றி

நெடுங்காலம் வருந்த வேண்டியிராதா? ஆயினும் என்ன செய்வது? முதன் மந்திரியும் இளையபிராட்டியும் இட்ட கட்டளை மிகக் கண்டிப்பானது. வேறு காரியங்களில் நான் இப்போது தலையிட முடியாது. முன்னர் சிலமுறை அப்படிச் சம்பந்தமில்லாத காரியங்களில் தலையிட்டுத் தொல்லைப்பட்டதெல்லாம் போதும். ஆழ்வார்க்கடியான் வேறு எச்சரித்திருக்கிறான். அன்றியும், வானதி தேவியைத்தான் நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரத்துக்கு அழைத்துச் செல்வதென்பது கனவிலும் நினைக்க முடியாத காரியம்...

இவ்வாறு முடிவு செய்து வந்தியத்தேவன் குதிரையைக் கொள்ளிடக் கரைப் பாதையில் திருப்பினான். அதே சமயத்தில் 'வீல்' என்ற ஒரு அபயக் குரல், - மிக மிக இலேசான பெண் குரல் - ஒலித்ததாகத் தோன்றியது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். பல்லக்கைக் காணவில்லை. அங்கேயிருந்த சாலை முடுக்கில் திரும்பியிருக்கக் கூடும். ஆயினும் போய்ப் பார்த்து விட வேண்டும் என்ற முடிவுக்கு ஒரு கணத்தில் வந்து விட்டான் வந்தியத்தேவன். அதனால் அப்படியொன்றும் தாமதம் ஏற்பட்டு விடப் போவதில்லை. குதிரை பாய்ந்து சென்றது. வெகுசீக்கிரத்தில் சாலை முடுக்கின் அருகில் வந்து விட்டது. அங்கே அவன் கண்ட காட்சி வந்தியத்தேவனுடைய இதயமே நின்று விடும்படி செய்தது. பெண் ஒருத்தி சாலை ஓரத்து மரம் ஒன்றில் கட்டப்பட்டிருந்தாள். அவளுடைய வாயில் துணி அடைக்கப்பட்டிருந்தது. இருட்டும் நேரமாதலால் யார் என்று முதலில் தெரியவில்லை. அருகில் சென்று பார்த்தான். வானதியின் பல்லக்குடன் நடந்து சென்ற சேடிப் பெண் என்று தெரிந்தது. அவள் முனகிக்கொண்டே தன் கட்டுக்களை அவிழ்த்துக் கொள்ள முயன்று கொண்டிருந்தாள். வந்தியத்தேவன் குதிரையிலிருந்து பாய்ந்து இறங்கி, முதலில் வாயில் அடைத்திருந்த துணியை எடுத்து விட்டு, கட்டுக்களையும் அவிழ்த்துவிட்டான். அவ்வளவு பலமாகக் கட்டப்படவில்லை என்பது அவன் உள் மனத்தில் பதிந்தது.

''பெண்ணே! என்ன நடந்தது? சீக்கிரம் சொல்! பல்லக்கு எங்கே? உன் எஜமானி எங்கே?'' என்று பதறிக் கொண்டே கேட்டான்.

சேடிப் பெண் உளறி மறுமொழி கூறினாள். அந்தச் சாலை முடுக்கில் பல்லக்குத் திரும்பியபோது திடீரென்று ஏழெட்டு மனிதர்கள் பக்கத்து மரங்களின் மறைவிலிருந்து பாய்ந்து வந்தார்கள். அவர்கள் சிலருடைய கைகளில் மண்டை ஓடுகளும் சூலாயுதங்களும் காணப்பட்டன. அவர்களில் இரண்டு பேர் சேடிப் பெண்ணை மண்டையில் அடித்துக் கீழே தள்ளினார்கள். பிறகு இழுத்துக்கொண்டு போய் மரத்தில் கட்டினார்கள். இதற்குள் மற்றவர்கள் பல்லக்குச் சுமந்தவர்களிடம் ஏதோ பயங்கரமான குரலில் சொல்லவே, அவர்கள் பாதையை விட்டு விலகிக் குறுக்கு வழியில் பல்லக்குடன் ஓடினார்கள். மற்றவர்களும் தொடர்ந்து போனார்கள். 'வீல்' என்று சத்தம் போட்டது சேடிப் பெண்தான். வானதி தேவியின் குரலே கேட்கவில்லை. - இவ்விதம் கூறிவிட்டு, பல்லக்குச் சென்ற குறுக்குப் பாதையையும் அச்சேடிப் பெண் சுட்டிக்காட்டினாள்.

''பெண்ணே! நீ அந்தக் குடந்தை சோதிடர் வீட்டிற்குப் போயிரு! நான் உன் எஜமானியைக் கண்டுபிடிக்கப் பார்க்கிறேன்'' என்று சொல்லிக் கொண்டே வந்தியத்தேவன் குதிரை மீது பாய்ந்து ஏறினான். குதிரை இராஜபாட்டையிலிருந்து திரும்பிக் குறுக்கு வழியில் சென்றது. மேடு, பள்ளம், காடு, செடி என்று பாராமல் அதிவேகமாய்ச் சென்றது.

(தொடரும்)

நேற்று நள்ளிரவிலே வான வெளியிலே மலைகளில் குரல்களைக் கேட்க நேர்ந்தது.

"பொதிகையாரே! பொதிகையாரே! விழித்திருக்கிறீரா? நான்தான் விந்தியமலை பேசுகிறேன்."

இதற்குப் பதிலாகப் பொதிகை மலையின் குரல் மிகவும் கம்மிப் போய் வந்தது: 'விழித்துக்கொண்டு தானிருக்கிறேன். இங்கே சாரல் சக்கைப் போடு போடுகிறது. மழை, காற்று, அருவி எல்லாமாகச் சேர்ந்து ஒரே சத்தம். ஆகையால் கொஞ்சம் உரத்துப் பேசுங்கள்."

"முன்ஷி நடப்போகும் மரங்களை உன்னுடைய பக்கங்களிலேயும் வைக்கச் சொல்லு. மரங்கள் வளர்ந்து காடான பிறகு மழை பெய்யும்."

"சரிதான்; அதற்குள்ளே என்பாடு அரோகரா ஆகிவிடும். ஆமாம்; அண்ணாமலையாருக்கு என்ன நேர்ந்தது? மறுபடியும் ஏதாவது ஆபத்து உண்டா? பலதடவை அழைத்தேன்; ஏன் என்று கேட்கவில்லை?"

"பாவம்! அண்ணாமலையாருக்கு மறுபடியும் ஒரு பெரிய நஷ்டம் ஏற்பட்டு விட்டது. கொஞ்ச நாளைக்கு முன்னால் ரமண ரிஷிகள் புறப்பட்டுச் சென்றாரா? திருவண்ணாமலையைச் சேர்ந்த மற்றொரு பிரசித்தமான புருஷர் சென்ற வாரத்தில் விடை பெற்றுக்கொண்டார். அதனால் அண்ணாமலை சோக சாகரத்தில் மூழ்கிக் கிடக்கிறது!"

"அவர் யார் அப்படிப்பட்ட மனிதர்? திருவண்ணாமலைக்காரர்?"

"எஸ்.வி.வி. என்று கேட்டிருக்கிறயா? ஆனால் நீ எங்கே கேட்டிருக்கப் போகிறாய்? நீதான் நிரட்சர குட்சியாயிற்றே?"

"எனக்குத் தெரியாவிட்டால் போகட்டும். நீதான் சொல்லேன்?"

"எஸ்.வி.வி. என்பவரின் முழுப் பெயர் எஸ்.வி. விஜயராகவாச்சாரியார். பிரசித்தமான எழுத்தாளர். சிரிக்கச் சிரிக்க எழுதுவார். நகைச்சுவையே இன்னதென்று தெரியாத நீ கூட அவர் எழுதின விஷயங்களைக் கேட்டால் சிரித்து மகிழ்வாய். காஞ்சிபுரத்துக் கோயில் யானைக்கு வடகலை நாமம் போடுவதா, தென்கலை நாமம் போடுவதா என்பதைப் பற்றி நடந்த ஒரு கோர்ட்டு வழக்கைப் பற்றி எழுதியிருந்தார். அதைக் கேட்டுவிட்டு அந்தக் கோயில் யானைகூடச் சிரித்தது என்றால் நீ சிரிப்பதற்குக் கேட்பானேன்?"

"பொதிகையாரே! அந்த எஸ்.வி.வி. என்பவர் தமிழ்மொழியிலேதானே எழுதுகிறார்? அந்த மூன்று எழுத்து ஒரு மாதிரி தொனிக்கிறதே?"

"முதலில் இங்கிலீஷ் பாஷையிலேதான் அவர் எழுதிக்கொண்டிருந்தார். எனக்குக் கூடக் கொஞ்சம் வருத்தமாயிருந்தது. பிறகு தமிழ் ரஸிகர்கள்



சிலர் தூண்டியதன் பேரில் தமிழில் எழுத ஆரம்பித்தார். பிறகு இங்கிலீஷுக்கே அவர் போகவில்லை. தமிழ் எழுதினால் பெரிய பெரிய அறிஞர்கள் முதல், ஸ்திரீகள் குழந்தைகள் வரை படித்து

மகிழ்கிறார்கள் என்பதைக் கண்டபிறகு இங்கிலீஷில் ஏன் எழுதப் போகிறார்?''

''பெரிய பெரிய அறிஞர்கள் என்றால்... அப்படி யார் யார்?''

''ஏன், ராஜாஜி என்ன? ரஸிகமணி என்ன? மகாகனம் சீனிவாச சாஸ்திரி என்ன? இன்னும் எஸ். வரதாச்சாரியார், வி.வி.சீனிவாசய்யங்கார் என்ன...? இப்படி எத்தனையோபேர் அவர் எழுதியதைப் படித்து

வான வெளியிலே...

மகிழ்ந்திருக்கிறார்கள்...''

இந்தச் சமயத்தில் திருவண்ணாமலையாரின் குரல் தீனமாகக் கேட்டது.

''அண்ணா! விந்திய மலையே! இமய மலையாரிடம் கொஞ்சம் விசாரித்துப் பார்! அந்தப் பக்கமாக எங்கள் ஊர் எஸ்.வி.வி. வந்தாரா என்று?''

விந்தியமலை இமயமலையிடம் கேட்டது. இமயமலை பேசுகிறது என்று குப்பென்று வந்த குளிர்ந்த காற்றிலேயிருந்து தெரிந்தது.

''ஆமாம்; அந்த எஸ்.வி.வி. இந்தப் பக்கமாக வந்துதான் வானுலகத்துக்குப் போனார். எனது சிகரத்துக்கு மேலே கொஞ்ச தூரம் போனதும் அவரைப் பற்றி ஒரு வாக்குவாதம் ஏற்பட்டு விட்டது. யமதூதர்கள் அவரை யமனுலகத்துக்கு அழைத்துப் போவோம் என்றும், தேவ தூதர்கள் சொர்க்கத்துக்கு அழைத்துப் போக வேண்டும் என்றும் தர்க்கம் செய்தார்கள். மத்தியஸ்தம் செய்ய வந்த சித்திரகுப்தன் அவருடைய அபிப்பிராயத்தையே கேட்டு விடலாம் என்றான். 'உம்மை எங்கே அழைத்துப் போக வேண்டும்? யமலோகத்துக்கா, சொர்க்கத்துக்கா?' என்று எஸ்.வி.வி.யைக் கேட்டார்கள். அதற்கு அந்த மனிதர் 'இந்தக் கேள்விக்கு ஐயாவைக் கேட்டுத்தான் பதில் சொல்ல வேண்டும்?' என்றார். 'அது யார் ஐயா?' என்று கேட்டார்கள். எஸ்.வி.வி. இலேசாகச் சிரித்துவிட்டு 'பூலோகத்தைக் காட்டிலும் இங்கே படிப்பு அதிகம் போலிருக்கிறதே! உங்களையெல்லாம் எம்.எல்.ஏ.க்கள் ஆக்கி விடலாம் போலிருக்கிறதே!' என்றார். இதைக் கேட்டதும் எனக்குச் சிரிப்புத் தாங்கவில்லை. ஆனால் அந்த யமலோகத் தூதர்களும் சொர்க்கலோகத் தூதர்களும் ஒன்றும் தெரியாமல் விழித்தார்கள். சித்திரகுப்தன் கோபித்துக்கொண்டு 'இவர் இவ்வளவு பிடிவாதக்காரராயிருப்பதால் யமலோகத்துக்கே கொண்டு போங்கள்!'' என்று உத்தரவு போட்டு விட்டான்...''

இமயமலை இப்படிச் சொன்னதும் விந்தியமலை, திருவண்ணாமலை, பொதிகைமலை, நீலகிரிமலை இவ்வளவும் சேர்ந்து ''அடடா!'' என்று அனுதாபப்பட்டன.

''கேளுங்கள் பாக்கியையும்! அதற்குள் அழ வேண்டாம். சித்திரகுப்தன்

அமரர் கல்கி

உத்தரவுப்படி எஸ்.வி.வி.யை யமலோகத்துக்குக் கொண்டு போனார்கள். அங்கே அவர் போனதும் யமலோகத்தில் இருந்தவர்கள் அத்தனை பேரும் ஓயாமல் சிரிக்கத் தொடங்கினார்கள். அது யமலோகம் என்பதே எல்லாருக்கும் மறந்து போய்விட்டது. நரக வேதனையும் இல்லாமற் போய்விட்டது. உடனே யமன் இவரை இங்கே வைத்திருக்கக் கூடாது! என்று தீர்மானித்து எக்ஸ்பிரஸ் புஷ்பக விமானத்தில் சொர்க்கலோகத்துக்கு அனுப்பி வைத்தான். யமலோகம் எப்படித் திமிலோகப்பட்டது என்னும் விஷயம் ஏற்கெனவே சொர்க்கத்துக்கு எட்டியிருந்தது. ஆகையால் அங்கே என்ன செய்தார்கள் தெரியுமா?''

''என்ன செய்தார்கள்? சீக்கிரம் சொன்னால் தேவலை! சொர்க்கலோகத்துக்கும் ஆபத்து வந்துவிட்டதா?''

''இல்லை, இல்லை! யமலோகத்தைப் போல சொர்க்கமும் சிரிப்பாய்ச் சிரிக்கக் கூடாது என்று எண்ணி அங்கே எஸ்.வி.வி. வந்ததும், நாரதரின் கையிலிருந்த வீணையைப் பிடுங்கி, எஸ்.வி.வி.யின் கையில் கொடுத்து விட்டார்கள். அது முதல் எஸ்.வி.வி. வீணையை மீட்டிக்கொண்டு சங்கித ஆனந்தத்தில் ஈடுபட்டிருக்கிறார். இதனால் சொர்க்கம் சிரிப்பாய்ச் சிரிக்காமல் தப்பிப் பிழைத்தது!''

''இமயமலையாரே! இதையெல்லாம் எங்களுக்குத் தெரிவித்ததற்காக மிக்க நன்றி!'' என்றது பொதிகைமலை.

''நான் நெட்டைப் பனைமரம்போல் இருக்கிறேன் என்று நீங்கள் அடிக்கடி பரிகாசம் செய்கிறீர்களே? அப்படி உயரமாயிருப்பதனால்தான் யமலோகத்தையும் சொர்க்க லோகத்தையும் எட்டிப் பார்க்க முடிகிறது. விந்தியமலையாரே திருவண்ணாமலையாருக்கு என்னுடைய அநுதாபத்தைத் தெரிவித்துவிட்டு ஆறுதல் சொல்லும்!'' என்றது இமயமலை.

திருவண்ணாமலை தழுதழுத்த குரலில் ''வந்தனம்!'' என்று கூறியது.

இமயமலை, ''ஆமாம்; நடுவில் ஒரு தடவை நீலகிரியின் குரல் கேட்டாற் போலிருந்தது. அது உண்மையா?'' என்றது.

''ஆமாம்; என் குரல்தான்!'' என்று நீலகிரி கிச்சுக் குரலில் சொல்லியது.

''நீலகிரியே உன் குரலைக் கேட்கவே இனிமையாயிருக்கிறது. உன் பக்கங்களில் ஏதாவது விசேஷம் உண்டா? ஏதோ உன் பக்கத்தில் தமிழ் மகாநாடு நடந்தது என்று கேள்விப்பட்டேனே?'' என்றது விந்திய பர்வதம்.

''ஆம்; ஆம். கோயமுத்தூரில் தமிழ் வளர்ச்சி மகாநாடு நடந்தது. ஒரு வாரத்திற்குப் பிறகு அதற்குப் போட்டியாக இன்னொரு மகாநாடும் நடந்தது...'' என்றது நீலகிரி.

''இது என்ன! எஸ்.வி.வி.யின் ஹாஸ்யத்தைவிடப் பெரிய ஹாஸ்யமாக அல்லவா இருக்கிறது? தமிழையாவது, வளர்க்கவாவது? பொதிகையாரே! உம்முடைய அபிப்பிராயம் என்ன?'' என்று இமயமலை கேட்டது.

''எனக்கும் அது வேடிக்கையாகத் தானிருக்கிறது. தமிழ் பூரண வளர்ச்சி அடைந்து மூவாயிரம் வருஷம் ஆயிற்று. ஆனாலும் இப்போதெல்லாம் தமிழபிமானம் போட்டி போட்டுப் பொங்கிக் கொண்டிருப்பது சந்தோஷமான விஷயந்தான். இருந்தாலும் மக்கள் முதலில் தங்கள் இதயங்களை விசாலமாக வளர்த்துக் கொள்ள வேண்டும். ஒருவரையொருவர் தூஷிப்பது கூடாது. அதுதான் இப்போது வேண்டியது. தமிழுக்கு ஒரு குறைவும் இல்லை!'' என்றார் பொதிகைமலையார்.

(கல்கி, 11 ஜூன் 1950)





பறவைக் காதலர்கள்!

படத்தில், அமைதியான சூழலில் அமைந்துள்ளது ஏதோ ஒரு சாமியார் குடில் அல்ல! நம் நாட்டில் பறவைகள் ஆராய்ச்சிக்கென்றே ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஒரே இடம்.

கடந்த ஏழு வருடங்களாக கோவை ஆனைகட்டி மலைப் பகுதியில் செயல்பட்டு வருகிறது இந்த 'சலீம் அலி பறவையியல் ஆராய்ச்சி மையம்.' இது அப்பகுதி வாசிகளுக்கே தெரியாத அதிசயம்!

'காடாறு மாதம்; நாடாறு மாதம்' என்பதெல்லாம் நாம் விக்கிரமாதித்தன் கதைகளில்தான் படிக்க முடியும். ஆனால் உண்மையிலேயே இவ்வாராய்ச்சி மைய விஞ்ஞானிகளின் வாழ்க்கை அப்படித்தான்! 'Bengal florical' எனும் ஒரு பறவை ஆராய்ச்சிக்கு மட்டும் உத்திரப்பிரதேசம், மத்திய பிரதேசம் காடுகளில் தலா ஆறு மாதங்கள் அலைந்தாராம் விஞ்ஞானி ரவிசங்கரன். தாம் பறவை ஆராய்ச்சியில் ஈடுபட்ட இந்த ஏழு வருடங்களில் ஆறு வருடங்கள் அந்த





• ரவிசங்கரன்



• விஜயன்



மான் நிகோபார் தீவுகளிலேயே பெரும் பாலும் கழித்திருக்கிறார்.

"அந்தமானில்தான் அழிந்து வரக் கூடிய பறவை இனம் நிறைய இருக்கிறது. அங்கே 'மெகாபோட்' என ஒரு பறவை. பெரிய பெரிய கால்களை உடையது. அது முட்டை யிடுவது படு சுவாரஸ்யமாயிருக்கும். மணல் பரப்பை இரண்டு மீட்டர் உயரத்திற்குக் கால் களால் பறித்து, உயர்த்தி, அதற்குள் இலை தழைகளைப் போட்டு முட்டையிட்டு மூடி வைத்து விடும். இரண்டு மூன்று பறவை களை உதவிக்குக் கூட்டிக் கொண்டு இதைச் செய்யும். இலை, தழைகளின் உஷ்ணத்தில் தானே முட்டை பொறித்து குஞ்சு வெளி வந்து விடும். அதே போல் 'எடிபில் நெஸ்ட் ஸ்விப்ட்லெட்' என்ற பறவை தன் எச் சிலையே துப்பித் துப்பி வெண்சங்கு போல் உருவாக்கிக் கூடுகட்டி முட்டையிடும்! அவை தவிர்த்து 'அந்தமான் டீல்', 'மலபார் ஜெயிண்ட்' போன்ற அங்குள்ள பறவை களும் தனித்தன்மை வாய்ந்தவை. காணக் கிடைக்காத அற்புதங்கள். அவை பெரும் பாலும் அழிந்து வருவது வேதனையானது."

பறவைகள் அழிவுக்கு அப்படியென்ன காரணம்? இவர்கள் ஆராய்ச்சி சொல்வ தென்ன?

"பெரும்பாலான பறவைகள் தங்களுக்குப் புகலிடமாகத் தீவுகளையே தேர்ந்தெடுக் கின்றன. அதிலும் அபூர்வப் பறவைகள் தீவு களிலேயே தங்கி விட்டவை. அங்குதான் அவற்றால் சுதந்திரமாக உலா வர முடிந்திருக் கிறது. எப்போது மனிதன் தீவுகளிலும் தன் காலடியைப் பதித்தானோ அப்போதே அவற் றுக்கு ஆபத்தும் வந்து விட்டது. மனிதனிட மிருந்தும் மிருகங்களிடமிருந்தும் தப்பிக்கத் தெரியாமல் பல பறவையினங்கள் அழிந்தே இருக்கின்றன. ஒருமுறை அந்தமானில் இருக் கும் மரங்களை வெட்டிக் கொண்டு வர யானைகளைக் கொண்டு போன மனிதன், திட்டமிட்டபடி செயல்பட முடியாது தான் மட்டும் திரும்பி, யானைகளை அங்கேயே விட்டு விட்டு வந்து விட்டான். அங்கே யானைகள் புகுந்த கதையும் இதுதான். பறவைகள்அழிந்த விதமும் இதுதான்."

பறவைகள் அழிந்து வரும் அபாயம் கருதியே இவர்கள் தங்கள் ஆராய்ச்சி மையத் தில் ஒரு பறவையைக் கூடப் பிடித்து வைத் துக் கொள்வதில்லை. மருந்துக்குக் கூட இங்கே பறவைகள் இல்லை. எந்த ஆராய்ச்சி யானாலும் விஞ்ஞானிகள், நேரம் காலம் கரு தாமல் காட்டுக்குள் சென்று, அதற்கு இம்சை எதுவும் கொடுக்காமல் ஆராய்ந்து வந்து 'தீஸிஸ்' தயாரிக்கிறார்கள்.

மொத்தம் பதினோரு விஞ்ஞானிகளில் மூவர் மட்டுமே பறவை ஆராய்ச்சிக்கு. மீதி எட்டுப் பேர் பறவைகள் சார்ந்த பிற விஷ யங்களை ஆராய்ந்து வருபவர்கள். பறவை கள் சார்ந்த விஷயங்கள் என்றால்?

'பறவைகள் மூலம் காடுகள் எப்படிப் பெருகின? அதனால் வன விலங்குகளும், சிறு விலங்குகளும், ஊர்வனவும், சூழலும், மழை யளவும், ஆறுகளும் எப்படியெல்லாம் பரி மாணம் கொண்டன. அவற்றின் ஒன்றோ டொன்றான இயக்கங்களும், அழிவுகளும் எப்படியெல்லாம் நிகழ்கின்றன? அதைக் காப்பாற்றிட இச்சமூகம் - இந்த அரசு என்ன செய்ய வேண்டும்?' போன்றவை.

இவர்கள் ஆராய்ச்சியும், புள்ளி விவரங் களும் முழுக்க முழுக்க வனத்துறைக்கே அளிக்கப்படுகின்றன. ஒரு பகுதியில் வனங் கள் அடர்த்தி எவ்வளவு? எவ்வளவு குறைந் துள்ளது? காரணம்? தடுப்பதற்கான பரிந் துரை. யானைகள் மற்ற வன விலங்குகள் வரத்து எவ்வளவு? அழியக் கூடிய அபாயத் தில் உள்ளவை எவை? அவற்றைக் காப்பது எப்படி?' என்கிற அனைத்து விவரங்களை யும் வனத்துறை கேட்கும் போது ஆராய்ந்து தருவது இவர்களின் கடமை.

அத்தோடு, ஓர் ஆற்றுக்குக் குறுக்காக ஓர்



''நர்ஸ் எனக்கு எதுக்கு 'சலைன்' போடறீங்க?''

''டாக்டர் உங்களை வந்து பார்க்க இன்னும் ரெண்டு மணி நேரம் ஆகும்; அது வரைக்கும் உங்களை யாருமே கவனிக்கலைன்னு நீங்க புகார் பண்ணக் கூடாது பாருங்க!''

– சீர்காழி ரேவதி

அணைக்கட்டு போட அரசின் நீர் பாசனத் துறை அணுகுவதும் இவர்களைத்தான். குறிப்பிட்ட இடத்தில் அணைக்கட்டு எழுப்புவதன் மூலம் அழியும் வனங்கள், பல்லுயிர்கள் (மனிதர்கள் உட்பட) பாதிப்பு பற்றின விவர அட்டவணை கொடுத்து, 'வனங்களுக்கும், பல்லுயிர்களுக்கும் பாதகமில்லை' என இவர்கள் ஆய்வறிக்கை சமர்ப்பித்தாலே அங்கே ஓர் அணைக்கட்டு எழும்.

இத்தனை விஷயங்களுடன் பாரதியார் யுனிவர்சிட்டியின் மேற்பார்வையில் பறவையியல் மற்றும் வன, விலங்குகள் சம்பந்தமான ஆராய்ச்சியில் பி.எச்டி. செய்ய பன்னிரண்டு மாணவர்கள் இங்கே படித்து வருகின்றனர். இத்துடன் இன்னும் சில வருடங்களில் எம்.எஸ்ஸி., எம்.ஃபில்., யு.ஜி மாணவர்களும் சேர்ப்பிக்கப்பட்டு கல்லூரி அந்தஸ்தில் இயக்கும் திட்டமும் இம்மையத்தில் உண்டு என்று மேலும் அதிசயிக்கச் செய்கின்றனர் மைய விஞ்ஞானிகள்.

இவ்வளவு உன்னதமான விஷயம் இங்கே உருவானது எப்படி? இந்தியாவில் வேறு எங்கும் இல்லாத விதமாய் இதை இவ்வளவு தூரம் கொண்டு வந்து - அடர்ந்த காட்டுக்குள் மலைப் பிரதேசத்தில் வைக்க வேண்டிய அவசியம் என்ன?

இதன் இயக்குனர் டாக்டர் விஜயனை அணுகிக் கேட்டோம்.

"இது எங்கள் ஆசிரியர், மறைந்த சலீம் அலியின் நீண்ட காலக் கனவு. அவரே இதற்குப் பிதாமகர். ஏழு வயதிலேயே பறவைகள் ஆராய்ச்சிக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். தம் வாழ்நாளில் கிட்டத்தட்ட 12,100 பறவைகளைப் பற்றி - அவற்றின் நுணுக்கமான விஷயங்கள், அசைவுகள் பற்றி ஆராய்ந்து 'இந்திய - பாகிஸ்தான் பறவைகள்' என்றொரு புத்தகமே கொடுத்திருக்கிறார். பறவைகள் ஆராய்ச்சிக்கு நிரந்தர இடம் வேண்டும் என்கிற எங்களின் நீண்ட காலக் கோரிக்கையின் விளைவு இது. 1983-ல் மும்பையில் பி.என்.எச்.எஸ். (Bombay Natural History Society) நூற்றாண்டு விழா நடந்தபோது அதில் கலந்து கொண்ட இந்திரா காந்தி, இந்தப் பறவையியல் மையத்திற்கு ஒரு வடிவம் கொடுத்தார். முழுக்க முழுக்க அரசே நிதி உதவி செய்கிறது. அரசு அலுவலகங்களின் நேரம் கால அட்டவணை இதற்குப் பொருந்தாது என்பதனால் (காலையில் பறவை எழும் முன்னே நாங்கள்



"ஆபரேஷனுக்குப் பிறகு வயிற்றுல வலி எதுவும் இல்லையே?"

"இல்லை சிஸ்டர்... ஏன் கேக்கறீங்க?"

"தியேட்டர்ல இருந்த 'சிஸர்' ஒண்ணைக் காணும்னு சொல்லிட்டிருந்தாங்க... அதான்!"

– சீர்காழி ரேவதி

வெளியே செல்ல வேண்டும், அது கூடடையும் வரை இருந்து ஆராய்ந்து செயல்பட வேண்டும்) மையம் அரசின் கட்டுப்பாடுகளற்று சர்வ சுதந்திரமாய் இயங்குது என்றும் திட்டம் செய்யப்பட்டது. இதற்காக ஓர் இடம் தேடிய போது பல்லுயிர்ப் பெருக்கம் நிறைந்த, கேரளா, ஆந்திரா, கர்நாடகா, தமிழ்நாடு இணைகிற, பெரும்பான்மை சரணாலயங்களும் நெருக்கத்தில் உள்ள இந்த இடம் பொருத்தமானதாக அமைந்தது. இதன் வேலை துவங்கப்பட்டு ஏழு வருடங்களாகி விட்டன!" என்றார்.

"நம் வேடந்தாங்கலில் பறவைகள் வரத்து மிகக் குறைவாக இருப்பதற்கு என்ன காரணம்?"

"வேடந்தாங்கல் என்றில்லை. உலகம் முழுக்கவே பறவைகளின் நிலை இதுதான். நம் சரணாலயத்தைப் பொறுத்தவரை (வேடந்தாங்கல்) இரண்டு விதமான பறவைகளே அதிகம் வருகின்றன. ஒன்று கொக்கு வகை. மற்றொன்று வாத்து வகை. அங்கேயும் விவசாயப் பொருட்களில் இரசாயன - நச்சுக் கிருமிகள் கலப்பதால் அவை இடும் முட்டை ஓடு மிக மெலிதாக இருக்கிறது. இது பொறிக்கவே செய்வதில்லை. பிறகு எப்படி இன விருத்தி உண்டாகும்? வேடந்தாங்கலைத் தேடிப் பறவைகள் எப்படி வரும்?" என்று கேட்கிறார் இவர்.

கட்டுரை, படங்கள் :
கா.சு. வேலாயுதன்

சென்னையைப் பற்றி யாரோ அந்த நாற்பது வயது மதிக்கத்தக்க பெண்மணியிடம் விலாவாரியாகச் சொல்லியிருக்க வேண்டும். அவளது வலது கை தனது இடுப்பில் செருகியிருந்த சுருக்குப் பையை அடிக்கடி தொட்டுப் பார்க்க, இடது கை ஒரு வெளிறிப் போயிருந்த துணிப்பையை மிக கெட்டியாகப் பற்றிக் கொண்டிருந்தது. அருகில் நின்று கொண்டிருந்த தனது பதினைந்து வயது மகளைப் பார்க்கப் பார்க்க அவள் முகத்தில் வருத்தம் கூடியது. "என்ன மனோம்மணி, சோர்வா இருக்குதா?" என்று கேட்டாள்.

காய்ந்து போன உதடுகளை நாக்கால் தடவியவாறே ''இவுக எப்போ நமக்கு சாறு கொடுப்பாக?'' என்று கேட்டாள் அந்தச் சிறுமி.

அந்த அம்மாளுக்கு என்ன பதிலளிப்பதென்று புரியவில்லை. சுருக்குப் பையிலிருந்து நாலு ரூபாயை எடுத்து, ஒரு முறைக்கு மூன்றுமுறை எண்ணிப் பார்த்துவிட்டு, கடைக்காரரிடம் கொடுத்து சுமார் பத்து நிமிடங்கள் ஆகியிருந்தன. அங்கு வந்து கொண்டிருந்த மற்றவர்களுக்கு அவர் கரும்பு ஜூஸ் கொடுத்துக் கொண்டிருந்தாரே தவிர, இவர்கள் பக்கம் திரும்பாமலே இருந்தார்.

"ஐயா எங்களுக்கு இன்னும் சாறு தரல்லியே?'' என்று அவள் கேட்டதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் ஏற்கெனவே பல தம்ளர்கள் கழுவப்பட்டிருந்த அந்தக் கலங்கலான வாளித் தண்ணீரில் மேலும் எச்சில் கிளாஸ்களைக் கழுவினார்.

திடீரென்று அந்தப் பெண்மணிக்கு பயம் ஏற்பட்டது. ஒருவேளை தன்னிடம் பணம் வாங்கிக் கொண்டதை இவர் மறந்திருப்பாரோ? ஊரிலிருந்து கிளம்பி மாம்பலம் ஸ்டேஷனில் இறங்கி ரங்கநாதன் தெருவில், இந்த உஸ்மான் சாலை முனையை அடையும் வரை அவர்கள் சாப்பிட்டது ஆளுக்கு நான்கு இட்லிகள்தான். அவை எப்போதோ கரைந்து வியர்வையாகி வெளியேறி விட்டிருந்தன. கைகால் எல்லாம் வெடவெடத்துக் கொண்டிருந்தன. எப்படியோ எல்லாம் சரியாகி இன்னும் ஒரு வாரத்தில் ஊர்போய்ச் சேர முடிந்தால் அம்மனுக்கும் ஐயனாருக்கும் கூழ் ஊற்றுவ



அருண் சரண்யா



தாக வேண்டிக் கொண்டிருந்தான்.

''ஐயா எங்கிட்டயிருந்து ரெண்டு க்ளாஸ் சாறுக்காக நாலு ரூபா வாங்கிட்டீக'' என்றான் சற்றே குரலை உயர்த்தி. ''நானெங்கே வாங்கினேன்?'' என்று அவர் கேட்டு விடுவாரோ என்ற பயத்தில் குரல் பிசிறடித்தது.

''அதுக்கென்ன இப்போ? பெரிசா நாலு லட்சம் கொடுத்த மாதிரி அனத்திக்கிட்டு. கொஞ்சம் பொறுமையா இருந்து குடிச்சிட்டுப் போங்க'' என்றார்.

அவளுக்கு சந்தோஷமாக இருந்தது. அப்பா, மறக்கவில்லை! வாழ்க்கையிலே இப்படியெல்லாந்தான் சந்தோஷப்பட வேண்டியிருக்கு என்று தனக்குள் அலுத்துக் கொண்டாள்.

சிறிது நேரத்தில் கரும்புச்சாறைக் குடித்தவுடன் கொஞ்சம் ஆசுவாசம் ஏற்பட, ''வெரசா நடலே. சாலையத் தாண்டிப்புடலாம்'' என்றவாறு தன் மகளின் கையைப் பிடித்துக் கொண்டு சாலையைக் கடக்கத் தொடங்கினான்.



ஓரடி கூட முன்னால் நகர முடியாத அளவுக்கு வாகனங்கள் மாறி மாறிக் கடந்து கொண்டிருந்தன. போதாக்குறைக்கு பிரம்மாண்டமான கார் ஒன்று வேகமாக வந்ததைப் பார்த்து பயந்துபோய் அவர்கள் மேலும் இரண்டடி பின்னால் போக வேண்டியிருந்தது. அப்போது நடைபாதையின் மீது சென்று கொண்டிருந்த சில பெண்களின் மீது அவர்கள் மோதிவிட ''சுத்த நாட்டுப்புறம்'' என்றபடி முகம் சுளித்தபடி நகர்ந்தனர்.

தான் கிராமத்தில் இருந்த இத்தனை நாட்களில் இப்படி யார் மேலும் இடித்துக் கொள்ள வேண்டிய அவசியமே இல்லாமல் கைவீசிக் காலறதான் நடந்திருக்கிறான் என்பதையும், இந்தப் பெரிய டவுனுக்கு வந்த பிறகுதான் இந்த வேதனை என்றும் பட்டென்று சொல்லிவிட நினைத்தான். பிறகு எதுக்கு வீண் வம்பு? காரியம் பெரிசா, வீரியம் பெரிசா என்று மீண்டும் சாலையைக் கடக்கும் முயற்சியில் ஈடுபட்டான்.

சைக்கிள்காரன் ஒருவனை வேகமாக ஆட்டோ ஒன்று ஓவர்டேக் செய்ய, அதில் சற்றே பயந்து போன சைக்கிள்காரன் இடது பக்கமாகத் தனது வண்டியைத் திருப்ப, அவளது வலது பாதத்தின் மீது அந்த சைக்கிள் ஏறி இறங்கியது. சிராய்ப்பு, ரத்தம். இதெல்லாம் தெரிந்தும் இதெல்லாம் சகஜம் என்பது போல் சைக்கிள்காரன் தன்பாட்டுக்குச் சென்றுவிட, ''ஐயோ, அந்தக் கேனையன் உன்ற காலிலே சைக்கிளை ஏற்றிப்புட்டானே'' என்று மனோன்மணி பதற, ''சரி வுடு'' என்றான். அவன் முகத்தில்

வலியின் சுவடுகள் மட்டும் அழுத்தமாகவே தெரிந்தன.

மீன் பாடி வண்டிகள், மினிலாரிகள், ஆட்டோக்கள், பேருந்துகள், மோட்டார் சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள்... மீண்டும் மீண்டும் மாறி மாறி வேகத்தோடு பறந்து கொண்டிருந்தன. இவ்வளவு அவசரமாக இவர்கள் எங்கே போகிறார்கள் என்று ஆச்சரியமாக இருந்தது. யாராவது ஒரு வண்டியோட்டி டக்கென்று வண்டியை நிறுத்தி விட்டு, "நீங்க வாங்க பெரியம்மா, நான் உங்களை சாலையைக் கடந்து போய் விடுகிறேன்" என்று கூறி தங்களைக் கரையேற்று வானோ என்று ஆசையோடு அவள் ஒவ்வொரு வண்டி ஓட்டியையும் பார்க்க, வண்டிகள் நிற்காதது மட்டுமல்ல, இவளிடம் வரும்போது மேலும் வேகமெடுத்த மாதிரி தோன்றியது.

"போன வருசம் அண்ணாச்சியோட திருவிழா போனமே, அதும் போல இருக்குதே" என்ற மகளைப் பார்த்து "திருவிழாவிலே நடக்க நேரமாகுந்தேன். ஆனா இப்படி மரணபயமெல்லாம் கிடையாதே" என்று முணுமுணுத்தாள்.•

மேலும் சில நிமிடங்கள் கடக்க, அவளுக்குப் பொறுமை குறைந்தது. துணிச்சலாக முடிவெடுக்கத் தீர்மானித்தாள். வண்டிகளை நிறுத்தும்படி கைகாட்டியபடியே டக்கென்று மகளையும் இழுத்துக் கொண்டு வண்டிகளுக்கு நடுவே வளைந்து நெளிந்து நாலெட்டு வைத்து விட்டபோது கொஞ்சம் பெருமையாகக் கூட இருந்தது. இன்னும் இரண்டெட்டு வைத்தால் தெருவின் நடுப்பகுதியை அடைந்து விடலாம். அங்கேயிருக்கும் மேட்டுப் பகுதியின் மீது, சாலையைக் கடப்பதற்காக ஏற்கெனவே சிலர் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களோடு சேர்ந்து கடப்பது சுலபமாக இருக்கும்.

அவள் எண்ணத்தைப் பாழாக்குவது போல் ஆட்டோ ஒன்று அவளை உராய்ந்து சென்றது. கீழே விழுந்துவிடாது இருக்கும் முயற்சியில் அவள் தடுபடுகையில், அவள் கையிலிருந்த துணிப்பை கீழே விழ, அதிலிருந்த பெரும்பாலான பொருள்கள் நழுவின. களாக்காய்களும், வெள்ளைப் பணியாரமும், மன்னாக்கொட்டைகளும் வெகு தூரம் சிதறின. 'ஆக, ராத்திரிக்கு சாப்பிட எதுவும் கிடையாது. வெறும் வயிறுதானே. சரி, இது கிடக்கட்டும். போட்டோக்கள் வேற விழுந்துருச்சே'. அவற்றை எடுப்பதற்குள் ஏதாவது கார்க்காரன் வந்து தன்மேல் ஏற்றிச் சென்று விடுவானோ என்ற அச்சம் ஏற்பட்டாலும், 'அந்த போட்டோக்களை மீட்டுத்தான் ஆக வேண்டும்' என்ற வெறியோடு அவற்றை நோக்கி ஓடினாள்.

"அம்மா, அம்மா" என்று மனோ கத்துவது கேட்டது. இருந்தும் எதுபற்றியும் கவலைப்படாமல் அவற்றை எடுத்துக் கொண்டு நிமிர்ந்தாள். நல்லவேளை, அவள் மீது எந்த வண்டியும் ஏறிவிடவில்லை. சற்றே திரும்பி அவர்களுக்கு வலமும் இடமுமாக வண்டிகள் அதே வேகத்தில் போய்க் கொண்டிருந்தன. ஒரு ஆட்டோக்காரன் இவர்களைப் பார்த்து "ஏ பெர்சு, வீட்ல சொல்லிக்கிட்டு வந்தியா? சரியான சாவுகிராக்கிங்க" என்றான்.

தான் வீட்டில் இருப்பவர்களிடம் சொல்லிக் கொண்டு அல்லது சொல்லிக் கொள்ளாமல் வருவதில் இவனுக்கென்ன அக்கறை என்று பாமரத்தனமாக எண்ணினாள். கூடவே, அவனுக்கென்ன தெரியும் தன் கணவன் கூத்தியாவோடு சேர்ந்து கொண்டு வேறெங்கோ போனதும் தன் பெரியம்மா காலில் விழுந்து கெஞ்சி நானூறு ரூபாய் கடன் வாங்கிக் கொண்டு இந்த மெட்ராஸுக்கு வந்ததும். பெரியம்மா முதலில் மறுத்துப் பார்த்தாள். அவளும் பாவம் என்னதான் செய்வாள். ரவிக்கை தைத்தும் முறுக்கு விற்றும் கணவனுக்குத் தெரியாமல் சேமித்து வைத்த பணத்தை, ஈடாக ஒரு பித்தளைப் பாத்திரத்தைக் கூட வைக்க நாதியில்லாத தன் போன்ற ஒருத்திக்குக் கொடுக்க எப்படி மனசு வரும்? ஏதோ அவள் இந்த வரை இரங்கியதே பெரிய விஷயம்.

எப்படியோ சாலையின் நடுப்பகுதியை அடைந்து விட்டார்கள்.

சாலையைக் கடக்க இருந்த ஒரு இளம் பெண்ணிடம், "மகராசி, எங்களையும் அந்தப் பக்கம் அழைச்சுக் கொண்டு விடேன்" என்று கேட்டுக் கொண்டாள். அவளும் தலையசைத்துவிட்டு "நான் கடக்குபோது கூடவே வாங்க" என்றாள் நிபந்தனை போல.

அடுத்த மூன்று நிமிடங்களுக்கு அவர்கள் எவராலும் சாலையைக் கடக்க முடியவில்லை. பிறகு திடீரென்று கிடைத்த ஒரு மிகச்சிறிய இடைவெளியைப் பயன்படுத்திக் கொண்டு அந்த இளம்பெண் மனோன்மணியின் கையைப் பிடித்துக் கொண்டு பாய்ந்து சாலையின் மறுபக்கம் சென்றாள். "என்ன உங்கம்மா நம்ம கூடவே ரோடை க்ராஸ் செய்யலியா?" என்று அதிருப்தியுடன்

கேட்டபடி தன் வழியே நடக்கத் தொடங்கி னாள்.

"ஐயையோ, ஒரு கணம் தயங்கிட்டமே. இப்ப என்ன செய்ய?" என்று சாலையின் நடுப்பகுதியில் இருந்து கொண்டு அவள் துடிக்க, அவள் துடிப்பை அதிகரிப்பதுபோல் இன்னொரு கேள்வியும் எழுந்தது. இடுப்பில் வைத்திருந்த சுருக்குப்பை எங்கே? நானூறு ரூபாயும் அதிலல்லவா இருக்கிறது. ஐயோ, ராச்சாப்பாட்டுக்காக எதாவது பர்பியும், வாழைப்பழமும் வாங்க வேண்டுமென்றால் கூட அந்தப் பணம்தானே.

"அம்மாடி நான் என்ன செய்வேன்?" என்று கதறியபடியே தான் கடந்து வந்த



சாலைப் பகுதியை அவசரமாகத் திரும்பி, துழாவினாள். மேய்ந்தாள். சுருக்குப்பை கண் களில் தென்படவில்லை. ஏதோ சந்தேகத்தில் துணிப் பையை ஆராய, அதற்குள் ஒரு மூலையில் இருந்தது சுருக்குப்பை. போட் டோவை (அதுதான் எக்ஸ்ரே) எடுக்கும் போது இடுப்பிலிருந்து பைக்குள் விழுந் திருக்க வேண்டும். நிம்மதி ஏற்பட்டது. தொடர்ந்து படபடப்பு.

சாலையின் எதிர்முனையில் நின்று கொண்டு "அம்மா, நீ எப்போ இங்கே வருவே?" என்று மகள் குரலெழுப்பியது கேட்டது. கூடவே, மடித்துக்கட்டிய லுங்கி யுடன் வாயில் பீடியோடு காட்சியளித்த ஒருவன், "அம்மா இல்லேன்னா என்ன கண்ணு, நான் இருக்கேன்" என்று அசிங்க மாகச் சிரித்தபடி சொன்னதும் சேர்ந்தே காதில் விழுந்தது.

அவளுக்கு பயம் அதிகமானது. எதிர்ப் புறம் வந்து கொண்டிருந்த வண்டிகளைப் பார்த்துக் கதறத் தொடங்கினாள். "ஐயா தருமவான்களே, ஒரே ஒரு நிமிசம் வண்டி களை நிறுத்திக்குங்க. நான் சாலையைக் கடந் திடுவேன். நீங்க நல்லாயிருப்பீங்க. உங்க வம்சம் சீரோடு இருக்கும்" என்று உரத்துக் கெஞ்சினாள். அப்படிக் கெஞ்சியபோதே அழுகை பீறிட்டு வந்தது. இனி தன் மக ளோடு வாழ்க்கையில் ஒன்று சேரவே மாட் டோமோ என்ற பயம் கூட ஏற்பட்டது. தான் இல்லாவிட்டால் மகள் என்ன செய்வாள்? இந்த முகம் தெரியாத ஊரில், அதுவும் அந்த லுங்கிக்காரன் சுற்றிவந்து கொண்டிருக்கும் நிலையில்!

"தெய்வமே, நான் யாருக்கு என்ன தப்பு செஞ்சேன். இப்படி சோதிக்கிறியே" என்ற படி தன் தலையில் படார் படாரென்று அடித்துக் கொண்டாள்.

தொடர்ந்து சென்ற வண்டிகள் பார் வையை மறைத்தாலும் அவற்றுக்கு நடுவே அம்மாவின் செய்கையைப் பார்த்து மகள் "ஐயோ, தலையிலே அடிச்சுக்காதீங்க அம்மா" என்று இந்தப் பக்கத்திலிருந்து அலறத் தொடங்கினாள்.

ஒரு நிமிடம் - வானத்து தேவர்களெல் லாம் அவர்களது வேண்டுகோளுக்கு செவி சாய்த்தது போல் வண்டிகளுக்கு இடையே கொஞ்சம் இடைவெளி உண்டாக, பாய்ந் தோடி வந்து மகளைக் கட்டிக் கொண்டாள்.

"அம்மா, அந்த ஆளு எதுக்கு சாவுகிராக் கின்னு சொன்னான்? நான் செத்துடு வேனா?" என்று மனோ கேட்க, அவளை மேலும் இறுக்கி அணைத்துக் கொண்டாள். "தங்கமே நீ நூறு வருசம் கெட்டியா இருப்பே. கேன்ஸர் ஆஸ் பத்திரியிலே ஒன்ற நோயை சரி பண்ணிடு வாங்க. நீ வாம்மா பஸ்ஸை பிடிச்சுப் போக லாம். கவலைப்படாதே சுகமாயிடும்" என் றாள்.

இரண்டடி வைத்த பிறகுதான் கடந்து வந்த சாலையை மீண்டும் பார்த்தாள். பெரு மிதமாகவும், ஆனந்தமாகவும் இருந்தது. கடைக்காரன் மறக்காமல் கரும்பு ஜூஸ் கொடுத்தபோதும், தொலைந்து போன சுருக் குப்பை தன்னிடமே இருந்ததைக் கண்டு பிடித்தபோதும் ஏற்பட்டதைவிட அதிகப் படி ஆனந்தம். ●



ஃபெப்ஸி தலைவராகிறார் படைப்பாளி!

ஃபெப்சி-படைப்பாளிகள் பிரச்னை முழுமையாகத் தீர்ந்து இப்போது ஃபெப்சிக்கு ஒரு படைப்பாளியே தலைவராகி இருக்கிறார். இயக்குனர் கே. பாலசந்தர்!

பிரச்னைக்குப் பின்னை யார் குழிபோட்ட நிர்வாகிகளின் பதவி விலகலுக்குப் பின் கடந்த ஒன்றரை வருஷங்களாகத் தாற்காலிக நிர்வாகக் கமிட்டியால் நிர்வகிக்கப்பட்டு வந்த ஃபெப்சிக்கு முறைப்படி தேர்தல் நடந்து டைரக்டர் கே. பாலசந்தர் தலைமையில் புதிய நிர்வாகக் குழு பொறுப்பேற்றுள்ளது.

"டெலிவிஷன் சீரியல்களில் படு பிசியாக உள்ள நீங்கள் எப்படி இந்தப் புதுப்பொறுப்பை ஏற்றுக் கொள்ள முன்வந்தீர்கள்?"

''நடந்தவற்றைக் கெட்ட கனவாக நினைத்து மறந்து, இனி புது உத்வேகத்துடன் ஃபெப்சி செயல்பட வேண்டும் என்பது இதில் இணைந்துள்ள இருபத்து மூன்று சங்கங்களின் விருப்பம். டைரக்டர்கள் சங்கத்தைச் சேர்ந்தவர் தலைவராக இருந்தால் நல்லது என்று அனைவரும் நினைத்தார்கள். எங்கள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள், நானோ, பாரதிராஜாவோ தலைமைப் பொறுப்பு ஏற்க வேண்டும் என்றார்கள். ஆனால், பாரதிராஜா 'நான் எமோஷனல் டைப்! எனவே நான் வேண்டாம். நான் உங்களுக்குப் பக்கபலமாக இருக்கிறேன். நீங்கள் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுங்கள்' என்று கூறிவிட்டார். எனவே, தலைமைப் பொறுப்புக்கு போட்டியில்லாமல் என்னைத் தேர்ந்தெடுத்தனர். (ஏறத்தாழ எல்லா பொறுப்புகளுக்குமே அப்படித்தான்) அனுபவம் வாய்ந்த கேமராமேன் சுந்தரம் செயலாளர் ஆனதில் எனக்கு ரொம்ப சௌகரியம்.

''தலைவராக இருந்தாலும் எல்லா அதிகாரங்களையும் என் வசமே வைத்துக் கொள்ள வேண்டியதில்லை என்பது என் கருத்து. சம்பந்தப்பட்ட விஷயங்களை, அது பற்றி விஷயமறிந்தவர்கள் பொறுப்பில் விட்டுவிட்டு, கொள்கை அளவிலான முடிவை மட்டும் நான், மற்றவர்களைக் கலந்தாலோசித்து எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறேன்.

"இன்னொரு விஷயம் அறிந்தபோது என் மனது ரொம்ப வேதனைப்பட்டது. ஃபெப்சியுடன் இணைந்த இருபத்து மூன்று சங்கங்களும் சௌகரியமான நிதி நிலைமையுடன் பெரும்பாலும் சொந்த இடத்தில் இயங்குகின்றன. ஆனால் தாய் அமைப்பான ஃபெப்சிக்கு இன்னும் வாடகை இடம்தான்! நிதி நிலைமையும் ரொம்ப மோசம்.

''ஃபெப்சிக்கு என்று அரசாங்கம் வடபழனி நூறு அடி ரோடு பகுதியில் இரண்டு கிரவுண்ட் இடம் அளித்துள்ளது. அங்கே ஒரு சொந்தக் கட்டடம் கட்டிவிட வேண்டும் என்று விரும்புகிறேன். என் பதவிக் காலத்துக்குள் குறைந்த பட்சம் அஸ்திவாரம் போட்டு, கட்டடப் பணியையாவது ஆரம்பித்துவிட வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். அங்கே திட்டமிட்டு, ஒரு சௌகரியமான கட்டடம் கட்டிவிட்டால், ஃபெப்சிக்கு நிரந்தரமான வருமானத்துக்கும் வழி கிடைக்கும்.''


சந்திப்பு: **கௌதம்**

நடக்குமென்பார் நடக்கும்!




மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

சிலருக்கு இது சாதனை படைக்கிற வாரம்னே சொல்லலாம். வியாபாரிங்களுக்கு வளர்ச்சி தெரியும். பத்திரிகை, எழுத்து மற்றும் சிந்தனையாளர்களுக்கு முன்னேற்றப் பாதை உறுதி. கமிஷன் ஏஜெண்டுகள், சேல்ஸ் ரெப்களுக்கு நல்ல ஆதாயம் கிடைக்கும். உறவினர்கள் வருகையால உற்சாகம் பிறக்கும். கலைத் துறையினருக்குப் புது வாய்ப்புகள் வரும். பண விஷயம் சாதாரணமாத்தான் இருக்கும்னாலும் குடும்பத்தில் அமைதி நிலவும். கூடவே அலைச்சலும் இருக்கும். வாரக் கடைசில பயணம் வேண்டாம்.



ரிஷபம் : (கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)

விடா முயற்சியை நம்பறவங்க நீங்க. அதனால எடுத்த காரியத்தை எப்பாடு பட்டாவது முடிச்சுடுவீங்க. வக்கீல்கள், போலீஸ்காரங்க சாதனை படைப்பாங்க. பாராட்டும் பெறுவாங்க. கலைஞர்களுக்கு நல்ல முன்னேற்றம் தெரியும். வெளிநாட்டுத் தொடர்புள்ளவங்களுக்கு லாபகரமான வாரம். பொதுவாவே இது நல்ல வாரம்தான்னாலும் எதிலும் பேராசைப் படாதீங்க. அது கவுத்திடும். எதிலும் அகலக் கால் வைக்கிறதோ புது முயற்சிகளோ இப்ப வேணாம். சுபகாரியங்களில் டிலே தெரியும். பயணத்தால் சிலருக்கு அனுகூலம் உண்டுன்னாலும் வாரக் கடைசில போகாதீங்க.




மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*


கிரகங்களெல்லாம் உங்களுக்கு நிபந்தனையற்ற ஆதரவு கொடுக்கற வாரம்கிறதால, நீங்க நினைச்சது நடக்கும். மதிப்பும் அந்தஸ்தும் உயரும். இதுவரைக்கும் தலைவலியா இருந்த பிரச்னைகள் பறந்தோடும். நல்லவங்களோட அறிமுகம் ஆதாயம் பெற்றுத்தரும். உத்தியோகஸ்தர்களுக்கு புரமோஷன் இருக்கும். சிலருக்கு திடீர் அதிர்ஷ்டத்துக்கும் சான்ஸ் இருக்கு. சுப காரியங்களுக்குப் பிள்ளையார் சுழி போடுவீங்க. வேலையில்லாதவங்களுக்கு வேலை வாய்ப்பு கூடி வரும் வாரம் இது.

கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

அக்னிசர்மா பக்கம்



எதிலுமே விசேஷமான பலன்களை எதிர்பார்க்காதீங்க. சாதாரண பலன்தான். ஆனாலும் உங்க உழைப்பும் முயற்சியும் நிச்சயம் வீண் போகாது. புது ஆளுங்க கிட்ட பழகும் போது எச்சரிக்கையா இருங்க. அக்கம் பக்கத்தில் வம்புதும்புக்குப் போயிடாதீங்க. அது சிக்கல்ல மாட்டி வெச்சிடும். வியாபாரிங்க விழிப்போட இருக்கறது அவசியம். பண விஷயம் சாதாரணமாத்தான் இருக்கும்கிறதால சிக்கனம் அவசியம். வாரக் கடைசில நல்ல மாற்றங்கள் தெரியும்.



சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

குரு உங்க பக்கம் இருக்கறதால அவரே உங்களுக்குப் பல நல்ல வழிகளை ஏற்படுத்திக் கொடுப்பார். எதிரிங்களெல்லாம் காணாம போயிடுவாங்க. வழக்கு இழக்குன்னு ஏதும் பெண்டிங் இருந்ததுன்னா இப்போ வெற்றி காணலாம். மனசல துணிச்சலும் தன்னம்பிக்கையும் அமோகமா இருக்கறதால எதுவானாலும் ஜெயிச்சுக் காட்டுவீங்க. இதுவரைக்கும் இழுத்தடிச்சுக்கிட்டிருந்த காரியங்கள் கூட இப்ப நிறைவேறும். புதுப்புது பொருள்கள் வாங்கற சான்ஸ் இருக்கு. வெளியூர்களுக்குப் போகும் போது எச்சரிக்கை அவசியம்.



கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*


தொழில் துறையில் இருக்கற சிலருக்கு அபார சாதனைகள் செய்யற வாய்ப்பு கிடைக்கும். கவர்ன்மெண்ட் சமாசாரங்களில் அனுகூலமான போக்கு தெரியும். டாக்டர்கள், சயின்டிஸ்டுகளுக்குத் திறமை வெளிப்படுகிற வாரம். எழுத்தாளர்களுக்குக் கற்பனை ஊற்று பீறிட்டுக் கிளம்பும். கலைஞர்களுக்குப் புதிய வாய்ப்புகள் கிடைக்கும். வியாபாரிகளுக்கும் கமிஷன் ஏஜெண்டுகளுக்கும் லாபம் உறுதி.

ஆகஸ்ட் 18 முதல் 24 வரை



மிதுன ராசிக்காரரான பட்டிமன்றப் பேச்சாளர் இரா. மோகனுக்கு ஏதோ திடீர் அதிர்ஷ்டம் அடிக்கப் போகுது!

யாரிடமும் கைமாத்து வாங்காதீங்க. அதிர்ஷ்ட வாய்ப்புகளுக்காகக் காத்திருந்தாலும் ஏமாற்றம் தான் உறுதி. உடல் நலத்திலும் கவனம் தேவை.




துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம், 3-ம் பாதம் வரை)*

மாமூலான பலன்களில் எந்தவிதமான மாற்றமும் இருக்காது. வாரப் பின் பகுதியில் முக்கியமான சில காரியங்கள் நிறைவேறுகிற சந்தர்ப்பம் அமோகமா கூடிவரும். எதிரிகள் தானாகவே ஓரங்கட்டி போயிடுவாங்க. சில அரசியல்வாதிகளுக்கு முக்கிய பதவிகள் கிடைக்கற சான்ஸ் நிறையவே இருக்கு. கம்ப்யூட்டர், எலக்ட்ரானிக் துறையினருக்குக் கொழுத்த ஆதாயம்தான். சிலருக்கு டிரான்ஸ்ஃபர் கிடைக்கும். சிலருக்கு பாட்டன் முப்பாட்டன் காலத்துச் சொத்துகள் வந்து சேரும்.




விருச்சிகம் : *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

உங்க மனசுல இரக்க குணம் சுரக்கற வாரம். உதவின்னு கேட்டு வர்றவங்களுக்குத் தாராளமா உதவுவீங்க. பொதுக் காரியங்களை இழுத்துப் போட்டுக்கிட்டு செஞ்சு பாராட்டுப் பெறுவீங்க. விவசாயிகளுக்கு நல்ல வாரம். உங்களுடைய கனிவான பேச்சே பல காரியங்களை சாதிச்சுக் கொடுத்திடும். ஆனாலும் குருபலம் கொஞ்சம் வீக்கா இருக்கறதால நடக்க வேண்டிய சுப காரியங்களில் சில குறுக்கீடுகள் வரத்தான் செய்யும். பண விஷயத்தில் பிரச்னை வராது. வயிறு சம்பந்தமான பிரச்னைகள் வர்றதுக்கு நிறைய சான்ஸ் இருக்கு.



தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

ரத்தினக் கம்பளம் விரிக்கப்பட்ட வெற்றிப் பாதை தெரியும் வாரம் இது. உங்களுடைய எல்லா திட்டங்களும் வெற்றிப் பாதையை நோக்கியே செல்லும். அந்தஸ்து, கௌரவத்துக்கெல்லாம் ஒரு குறையும் இருக்காது. மத்தவங்க மெச்சும்படியான சில காரியங்களையும் செய்வீங்க. பண விஷயமும் திருப்திகரம்தான். உத்தியோகஸ்தர்களுக்கு புரமோஷன் கிடைக்கும். சிலர் புதுப் பொருள் ஏதானும் வாங்குவீங்க. வழக்கு விவகாரங்களில் நல்ல திருப்பம் ஏற்படும். பயணத்தில் மட்டும் உஷாரா இருக்கணும்.




மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

மாமூல் பலன்கள்தான் நடக்கும்னாலும் வாரக் கடைசியில் முன்னேற்றம் தெரியும். உங்கள் ஆற்றலும் திறமையும் பளிச்சினு தெரியும். வழக்கு விஷயங்களில் உங்களுக்குச் சாதகமான திருப்பம் ஏற்படும். இயந்திரப் பணியாளர்களுக்கு புரமோஷன் கிடைக்கலாம். ரியல் எஸ்டேட் பிசினஸில் லாபம் உறுதி. சிலருக்குப் புதிய சொத்துகள் வந்து சேரலாம். கலைத் துறையினருக்கு வளர்ச்சி தெரியும். கணவன் – மனைவிக்குள் விட்டுக் கொடுத்தல் இல்லேன்னா சலசலப்புகள் உருவாகும். அலைச்சல் இருக்கும். அரசியல்வாதிகளுக்கு திடீர்ச் சோதனைகள் வரலாம்.



கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

கிரகங்களெல்லாம் அனுகூலமா இருக்கறதால திட்டங்களெல்லாம் பளிச்சினு நிறைவேறும். அந்தஸ்து கூடும். அரசு உத்தியோகஸ்தர்களுக்கு ஏற்றம் உறுதி. நிர்வாகத் துறையில் உள்ளவர்கள் முன்னணிக்கு வருவாங்க. வியாபாரிகளுக்கு லாபம் உறுதி. விவசாயிகளுக்கு மகசூல் அதிகரிக்கும். கடல் வாணிபம் ஆதாயம் தரும். ஆனாலும் வாரப் பின்பகுதியில் பொருளாதாரம் தொடர்பான விஷயங்களில் எச்சரிக்கை அவசியம். வீண் செலவுகளைத் தவிர்த்திடுங்க. புது முதலீடுகளும் வேண்டாம்.



மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

இதுவரைக்கும் இந்த மந்த நிலை மெதுவா குறைய ஆரம்பிக்கும். குடும்பத்தில் சுப காரியங்களுக்கான ஆரம்பம் தெரியும். பெரியவர்கள் உங்களுக்குப் பக்கபலமா இருப்பாங்க. மனத்தில் உற்சாகம் பிறக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு நல்ல முன்னேற்றம் தெரியும். துணிவும் தன்னம்பிக்கையும் கூடும். செய்து வரும் தொழில் எதுவானாலும் அதில் வளர்ச்சி தெரியும். பண விஷயம் தாராளமாவே இருக்கும். கடிதப் போக்குவரத்தில் நல்ல சேதி கிடைக்கும். கேளிக்கை, விளையாட்டுகளைக் குறைச்சுக்கறது நல்லது. ஆண்களுக்குப் பெண்களால் சில பிரச்னைகள் வரலாம். உஷார்!



• பொன்னம்பல அடிகளார்



• நா. சுப்ரமணியன்


ஆழ்வார்க்கடியானும் வந்தியத்தேவனும் வந்திருந்தார்கள். குந்தவை கூடவே ஒரு சிம்மாசனமும் எடுத்து வந்திருந்தாள். தள்ளாத காலத்தில் செம்பியன்மாதேவியும் பெரிய பழுவேட்டரையருங்கூட சிரமம் பார்க்காமல் காரைக்குடிக்கு வந்திருந்தார்கள். மக்களாட்சியில், சீரழிவின் சகல தந்திரோபாயங்களும் கனஜோராக சாத்தியமாகிக் கொண்டிருக்கிற காலம் என்கிறபடியால், இந்த மன்னர் கால 'மாசறுபொன்'களை வரவேற்க ஒரு மடாதிபதியே நேரில் வந்திருந்தார். அவர், குன்றக்குடி ஆதீனம் பொன்னம்பல அடிகள்.

தொப்பையும் தடியுமாக அந்தக் குட்டி ஆழ்வார்க்கடியான் பிரசன்னமாகி ரகளை உண்டாக்கியபோது அடிகளார் முகத்தில் என்ன ஒரு குதூகலப் பரவசம்! வான் அளவு உயரம் கூட இல்லை, அந்த வந்தியத்தேவன். ஆடும் மரக்குதிரையின் 'மீதேறி' அவன் பேசிய வீர வசனம் அசத்தல் ரகம். கடிதார், மிடி


கனவு கூட இன்னும் வந்திருக்காது அந்தக் குழந்தைக்கு. மாட்டி விட்டார்களே, ஒரு மரவுரி போன்ற ஆடையை! யாரது, செம்பியன்மாதேவியா? அந்தக் காகிதப் பூ பூஜைக்கு. அதில் இருந்த உருக்கத்துக்குப் பக்கத்து ஊர் குன்றக்குடியிலிருந்து முருகனும் பிள்ளையார்பட்டியிலிருந்து அவனது அண்ணனும் தம் தந்தையைக் கிளப்பிக் கொண்டு டாடாசுமோவில் எந்தக் கணமும் வந்துவிடுவார்கள் என்று தோன்றியது.

வழக்கமாக மாறுவேஷப் போட்டி என்றால் எம்.ஜி.ஆர், குறவன்-குறத்தி, குருக்கள், குப்பாயி என்று யோசிக்கும் பள்ளி ஆசிரியைகள் கல்கியின் கதாபாத்திரங்களுக்கு மழலை உருவம் கொடுக்க முனைந்திருந்தது தான் காரைக்குடியில் நடந்த கல்கி விழாவின் ஹைலைட்.

• விக்கிரமன்



• தி. ராசகோபாலன்



தலைமை ஏற்றுப் பேசிய பொன்னம்பல அடிகளாரும் (அமரரான குன்றக்குடி அடிகளாரின் சரியான வாரிசு இவர். மடாதிபதியாக மட்டுமல்ல; சொற்பொழிவாளராகவும்.) இதையே குறிப்பிட்டு வாழ்த்தியது மகிழ்ச்சி என்பது ஒருபுறம் இருக்க, இத்தனை இலக்கிய ஆர்வமும் ஆற்றலும் கொண்ட ஆன்மிகவாதி இன்று வேறு யாராவது இருக்கிறார்களா என்கிற சந்தேகமும் உண்டாயிற்று.

ஒரு மடாதிபதியாக தினசரி அவர் ஆற்ற வேண்டிய கடமைகள் பற்றிப் பட்டியலிட்டுச் சொன்னார் நம்மிடம் தனியாகப் பேசிக் கொண்டிருந்த ஆதீனத்து ஊழியர் ஒருவர். "அதிகாலை தொடங்கி நள்ளிரவு வரை ஓயாத வேலைகள். இதற்கு நடுவே இவர் எப்போது இலக்கியம் படிக்கிறார் என்பது எங்களுக்கே புரியவில்லை சார்! கல்கி நூற்றாண்டுக் கொண்டாட்டங்கள்- ஆண்டு முழுவதும் என்று அறிவிப்பு வந்ததும் கல்கியின்

காரைக்குடியில் 'கல்கி கல்யாணம்'!

அனைத்துப் புத்தகங்களையும் தமது லைப்ரரிக்கென வாங்கிப் படிக்க ஆரம்பித்து விட்டார்!"

பொன்னம்பல அடிகள் வெறுமனே கதை படித்து ரசிக்கிறவர் அல்ல என்பது அன்று அவருடைய பேச்சில் தெரிந்தது. 'பகுத்தறிவும் ஆன்மிகமும் எதிரெதிர் துருவங்கள் அல்ல. இரண்டின் கனிந்த நிலைகள்தாம் சமூக மாற்றங்களுக்கு வித்திடுகின்றன. அந்த வகையில் கல்கியின் படைப்புகள் அனைத்திலும் ஆதார சுருதியாக ஓடிக் கொண்டிருக்கும் சமூக அக்கறை, அவர் எத்தனை கனிந்த ஆன்மிகவாதியாகவும் பகுத்தறிவாளராகவும் இருந்திருக்கிறார் என்பதைக் காட்டுகிறது!' என்று பேசியவர், அமரர் கல்கியின் 'கடிதமும் கண்ணீரும்' சிறுகதையைச் சட்டென்று உதாரணமாக எடுத்துச் சொல்லி, 'கல்வியின் முக்கியத்துவத்தை அவர் எப்படியொரு காதல் கதையின் மூலம் வெளிப்படுத்துகிறார் பாருங்கள்!' என்று காட்டியபோது வியந்து போனார்கள் கூட்டத்தினர். வியப்பை மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டே செல்ல அடுத்தடுத்து அவர் கல்கியின் வாழ்க்கையிலிருந்தே சம்பவங்களை (எழுதப் படிக்கத் தெரியாத தம் மனைவிக்குக் கல்வி தந்து, தம் கதைகளையே சிலாகிக்க வைத்தது போன்றவை) எடுத்துக்காட்டி, எழுத்துக்கும் வாழ்க்கைக்கும் வித்தியாசமற்று வாழ்ந்தவரைப் பற்றிய ஒரு சொற்கோலத்தையே வரைந்து காண்பித்தார்! காவி உடைக்குப் பின்னால் இருக்கும் கலை ரசிப்பு உள்ளத்தை அன்று வியக்காதவரில்லை.



• பூவண்ணன்

அன்று அடிகளாரைத் தவிர, பேசிய



• விழா மேடையில்...



• ஆழ்வார்க் கடியான்!

பேராசிரியப் பெருமக்களுக்கு ரொம்ப சிக்கலான தலைப்புகளையே தந்திருந்தனர், நிகழ்ச்சியை நடத்திய சிவகங்கை மாவட்ட எழுத்தாளர் சங்கத்தினர். வரலாற்றுக் கல்கி, வரலாற்றில் கல்கி, வரலாற்றால் கல்கி. இந்த சொற்சிலம்பத் தலைப்புகளை வைத்துக் கொண்டு சொல் நர்த்தனம் புரிந்தவர்கள் பூவண்ணனும் தி. ராசகோபாலனும்



• தமுஎச நடத்திய கல்கி விழாவில்...

கல்கியும் 'கெயிட்டி'

வில்லிவாக்கம் முழுக்க சிறுசிறு டயர் தட்டிகளில், அழகழகான வண்ண எழுத்துக்களில், நிகழ்ச்சிக்குக் கட்டியம் கூறி அனைவரையும் வரவேற்றுக் கொண்டிருந்தார்கள். பங்கேற்ற அனைவருக்கும் கல்கியின் உருவம் அச்சிட்ட பேட்சுகள். காலையில் துவங்கி மாலை வரை நடைபெற்ற விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் தேநீர், மதிய உணவு வழங்க ஏற்பாடு செய்திருந்தார்கள், கல்கி விழா கொண்டாடிய தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினர். (புரசை கிளை)

வி. சங்கரின் தமிழிசையுடன் விழா துவங்கியது.

தலைமை ஏற்றுப் பேசிய இரா. இளங்

நா. சுப்பிரமணியனும்.

பூவண்ணன் தம் பேச்சில் ஒரு 'க்விஸ்' நடத்தினார். "கல்கிக்கு முன்னாலும் தமிழில் சரித்திர நாவல்கள் எழுதியவர்கள் சிலர் இருக்கிறார்கள். எனினும் கல்கியை ஏன் சரித்திர நாவல்களின் தந்தை என்று சொல்கிறார்கள்?"

கேள்வியைக் கேட்டுவிட்டு ஓர் இடைவெளி விட்டார் பூவண்ணன்.

அதானே, சரவணமுத்துப்பிள்ளை, கூடலிங்கம் பிள்ளை எனச் சிலர் இங்கே கல்கிக்கு முன்னால் சரித்திர நாவல்கள் எழுதியிருக்கிறார்களே? அப்புறம் எப்படி?

கார்கில் வெடியை மிஞ்சும் கரவொலி வெடிகளுக்கு நடுவே பூவண்ணன் தம் கேள்விக்குத் தாமே விடையளித்தார்: "கல்கிக்கு முன்னால் எழுதியிருந்தாலும் அவர்களெல்லாம் எழுத்தைப் பொறுத்த வரை 'பிள்ளை'கள் தாம். இவர் ஒருத்தர் தான் தந்தை."

"**எ**ழுதப்பட்ட காலத்திலிருந்து இன்று வரை சாகாத, அமரத்துவம் வாய்ந்த எழுத்துக்களைப் படைத்ததால்தான் அவர் பெயரே இன்று 'அமரர் கல்கி'யாகி விட்டது" என்று பேசிய தி. ராசகோபாலன், ரயிலுக்குப் புறப்படும் அவசரத்திலும் புயலுக்கு முகவரிபோல் தம் பேச்சை அமைத்துக் கொண்டார். எத்தனை அழுத்தம், கம்பீரம், தீர்மானம்!

கல்கியின் துணிச்சலைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது, சட்டென்று அவரை வால்ட் விட்மனுடன் ஒப்பிட்டுக் காட்டினார் ராஜகோபாலன்.

விட்மன் ஒரு பத்திரிகையில் வேலை பார்த்தவர். காலம் கடந்த கவிஞனல்லவா! காலப் பிரக்ஞை மறந்துபோய் அலுவலகத்துக்குத் தாமதமாக வருவதை வழக்கமாகக் கொண்டவர் அவர்.

ஒரு நாள் பத்திரிகை முதலாளி அவரை அழைத்து, "தினமும் நீ தாமதமாக வருகிறாய்!" என்று ஞாபகப்படுத்த, விட்மன் அளித்த விடை: "தாமதமாக வருவது மட்டுமல்ல; சீக்கிரம் கிளம்பி விடுவதும்

தியேட்டரும்

கோவன், "ஆபாசத்திற்கெதிராக, தீண்டாமைக்கெதிராக, சமூக சீர்திருத்தத்திற்கு ஆதரவாக, மூடப்பழக்கத்திற்கு எதிராக, பெண்ணடிமை தீர, தமிழிசை வளர குரல் கொடுத்தவர் கல்கி" என்றவர், கல்கியின் 'ஏட்டிக்கு போட்டி' கட்டுரையில் ஆரம்பித்து, தங்கள் சங்கம் அமரர் கல்கிக்கு விழா நடத்தும் காரணங்களை அடுக்கிக் கொண்டே போனார்.

"மங்கம்மா சபதம்' படத்தில் பெண்களை விரித்தட்டு விளையாட வைப்பது போன்ற ஒரு காட்சி வரும். அதையே 'ஆபாசம்' எனக் கூறி கடுமையாகச் சாடினார் கல்கி. அவரின் 'தியாக பூமி' என்ற படம் அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டது. சென்னை கெயிட்டி தியேட்டரில் நான்கு நாட்கள் மட்டுமே ஓடியது. அந்தத் 'தியாக பூமி' என்கிற ஒப்பற்ற காவியத்தை திரையிட்ட அதே கெயிட்டி தியேட்டரில்தான் தற்போது ஆபாச சினிமாக்கள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. எத்தனை வேதனைக்குரிய விஷயம்!" என்றார் இளங்கோவன்.

தலைமையுரைக்குப் பிறகு கருத்தரங்கம் துவங்கியது. முதலாம் அமர்விற்கு க. முத்துக்குமரன் தலைமைதாங்க, 'கல்கியின் படைப்புகளில் பெண்கள்' என்ற தலைப்பில் சிறப்புரை நிகழ்த்தினார் முனைவர் தேவதத்தா.

"தமிழோடு தொடர்புடைய ஒவ்வொருவருக்கும் கல்கியோடு தொடர்பிருக்கும். எத்தனையோ விஷயங்களுக்குக் கல்கி வித்திட்டிருக்கிறார். அது விருட்சமாகி, இயக்கமாக வளர்ந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது" என்றார்.

'கல்கியின் படைப்புகளில் சமூக உறவுகள்' என்ற தலைப்பிலான கருத்தரங்க அமர்விற்கு இல.பாஸ்கரன் தலைமையேற்றார். ஆரூர் எஸ். சுந்தரராமன் சிறப்புரை ஆற்றினார்.

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் வடசென்னை மாவட்ட செயலாளர் இரா. தே. முத்து "தமிழர்களுக்கு சுயமான வரலாறு இல்லை என்ற வாதம் எழுப்பப்பட்ட போது, ஆதாரங்களைத் திரட்டி, தமிழர்களுக்கும் வரலாறு உண்டு என நிரூபித்து வரலாற்று நாவல்களை எழுதினார் கல்கி.

"அமரர் கல்கியின் இலக்கியம் ஒரு சாராருக்கு மட்டும் சொந்தமில்லை. சாதாரண, பாமர மக்களை மனதில் வைத்தும் இலக்கியம் படைத்தவர் கல்கி" என்றார்.

'விடுதலைப் போரின் பின்னணியில் கல்கியின் படைப்புகள் என்ற அமர்விற்கு சிறப்புரையாற்றினார் கமலாலயன். ஆவடி காந்திஜி மெட்ரிக் பள்ளிக்கு முதல்வரான மீனாட்சி சுந்தரம் அந்த அமர்விற்குத் தலைமை வகித்தார்.

'அலை ஓசை', 'கணையாழியின் கனவு', 'பவானி பி.ஏ.பி.எல்.' இன்னும் பல கதைகளையும் கட்டுரைகளையும் உதாரணம் காட்டி தமக்குக் கொடுக்கப்பட்ட தலைப்பை விரிவாக ஆய்வு செய்து உரையாற்றிய கமலாலயன், "தேச விடுதலைக்கான பல லட்சம் குரல்களின் ஒட்டுமொத்த குரலாக அலை ஓசை ஒலிக்கிறது" என்றார்.

மொத்த நிகழ்ச்சிகளையும் தொகுத்து நிகழ்ச்சித் தலைவர் இரா. இளங்கோவன் உரையாற்றினார்.

கருத்தரங்க அமர்விற்குப்பின் அமரர் கல்கியின் 'தியாக பூமி' திரைப்படம் திரையிடப்பட்டது.

- கே. பாலசுப்ரமணியன்

படம்: **எம். சண்முகம்**

உங்களுக்குத் தெரியுமல்லவா?"

"உங்களுக்குத்தான் தெரியுமே, நான் சத்தியாகிரஹத்தில் கலந்து கொள்வேன் என்பது?" என்று வாசனிடம் கல்கி துணிந்து பதில் கூறி, விகடனைத் துறந்து வந்து மறு அவதாரம் எடுத்த சம்பவத்தை நினைவு கூர்ந்து இதனுடன் ஒப்பிட்டார் தி.ரா.

தமிழிசைக்குக் கல்கி செய்த சேவை பற்றி நெகிழ்ந்து பேராசிரியர் நா. சுப்ரமணியம் கோத்த புகழ்மாலை, தமது எழுத்துலக துரோணரைக் குறித்து அமுதசுரபி ஆசிரியர் விக்கிரமன் வேய்ந்த சொற்பந்தல், ஒரு வரவேற்புரையைக் கூட இத்தனை இலக்கியத் தரமான ஒன்றாக நிகழ்த்த முடியுமா என்று வியக்கச் செய்த குன்றக்குடி பெரியபெருமாளின் மொழிப் பந்தக்கால், எல்லாம் சேர்ந்து அன்றைய விழாவை ஒரு கல்யாணம்போல் ஆக்கிவிட்டன.

கல்யாணத்துக்கு முன்னால் ஜானவாஸ விருந்தில்லாமலா? கல்கி போற்றிய தமிழறிஞர் 'ராய.சொ'வுக்கு இது நூற்றாண்டு நிறைவு. பேராசிரியர் அய்க்கண் தலைமையில் அன்று காலை நடந்த ராய.சொ. நூற்றாண்டு நிறைவு விழா உரைகள், சந்தேகமில்லாமல் செவி நுகர்க் கனிகள்.

— ஔரங்கசீப்

படங்கள்: **ஸ்ரீஹரி**

ராஜ தர்பார்

பா.ஜ.க.தான் ஒரிஜினல் காங்கிரஸ்?!

இந்திரா காந்திக்கு சோனியா கட்சி டிக்கெட் கொடுக்க மறுத்தது. அதுவும் ஸ்ரீபெரும்புதூர் தொகுதி. இதனால் மன முடைந்த இந்திரா காந்தி எம்.ஏ.எம்.ஸீ.பில், "நான் டெல்லியில் ஒரு மாதமாய் செய்த முயற்சிகள் வீணாயிற்று" என்று அரற்றிக் கொண்டிருந்தார், கட்சியின் அக்பர் ரோடு தலைமைக் காரியாலயத்தில். சோனியா கட்சி தொகுதி அறிவிப்பன்று இரவு வரை இதுபோன்ற பல காட்சிகளைக் கண்டது கட்சி அலுவலகம். பஞ்சாப், உ.பி. மாநில காங்கிரஸ்காரர்களுக்கு இணையாக அடித்துக் கொண்டனர் தமிழக சோனியாவினர். ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் நிறுத்த சரியான வேட்பாளர் இல்லை என்று திண்டிவனம் ராமமூர்த்தியும், தங்கபாலுவும் இணைந்து சொல்லி விட்டனராம். இதை எதிர்த்து தமிழ்நாடு சோனியா கட்சிச் செயலாளர் இளங்கோவன் சோனியாவுக் களித்த தமது பகிரங்கக் கடிதத்தில், "கட்சியின் உணர்வுபூர்வமான இந்தத் தொகுதியை விட்டுக் கொடுத்தது கேவலம்'' என்று எழுதியிருக்கிறார். டிக்கெட் கேட்டு வந்திருந்த அனைத்துத் தமிழ் சோனியாவினரும் கட்சி அலுவலக வாயிலிலேயே தவம் கிடந்தனர். திண்டிவனம் ராமமூர்த்தியினர் மற்றும் தங்கபாலுவினர் ஆப்ஸெண்ட். தென் சென்னைத் தொகுதி கேட்டிருக்கும் ஷைலா ஷங்கரிலிருந்து நாகர்கோவில் கேட்கும் சரத்குமாரின் அண்ணன் வரை காத்துக் கிடந்ததுதான் மிச்சம். அக்பர் ரோடு அசைந்து கொடுக்கவில்லை. ஆனால் திண்டிவனம் ராமமூர்த்திக்கெதிராகப் பல புகார்கள் கொடுக்கப்பட்டுள்ளன, சில பல கட்சி நிர்வாகிகளால். சோனியா கட்சி அலுவலகமோ தேர்தல் நேர அலுவலகம் போலவே தோற்றமளிக்கவில்லை. இந்திரா, ராஜீவ் கால காங்கிரஸ் அலுவலகமா இது என்று எண்ண வைத்தது பார்ப்பவர்களை. வழக்கமாக தேர்தல் கால கோஷங்கள், டிக்கெட் வாங்க முயல்பவர்களின் முந்தல்கள், பரபரப்பு... எல்லாம் ஆப்ஸெண்ட்!



இதற்கு நேரெதிர், பிஜேபியின் அஷோகா ரோடு அலுவலகம். தேசத்தின் எல்லா மூலை முடுக்குகளிலிருந்தும் டிக்கெட் கேட்போர் குவிந்து விட்டார்களோ என்பதைப் போல் ஒரு தோற்றம். வாஜ்பேயியின் ஸ்டேடஸ் உயர்ந்து, கட்சி தன் சொந்த பலத்திலேயே தனிப் பெரும்பான்மை பெற்று விடுமோ என்ற நினைப்பைத் தோற்றுவித்திருக்கிறது. ஆக, கார்கில் அறுவடையில் நல்ல மகசூல் பெற கொழுத்த பணப்பைகள்; வலுத்த தொந்திகள் என்று டிக்கெட் கேட்கும் கூட்டம் இன்றைக்கு டெல்லியில் பிஜேபி அலுவலகத்தை முற்றுகையிடுவது, பிஜேபிதான் ஒரிஜினல் காங்கிரஸ் என்று கூறலாம் போல் ஒரு தோற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது! "பிஜேபியும் காங்கிரஸ் கலாசாரம் பெற்று விட்டது" என்று கூறினார் தம் அரசியல் வாழ்வில் பல கட்சிகள் கண்டு விட்ட ஒரு வித்தகர். இரு நாட்கள் நடந்த கட்சி தேர்தல் குழுக் கூட்டத்தின் நாயகன் வாஜ்பேயி, தமிழகப் பிரதிநிதிகள் மட்டும் conspicuous by their absence. 'இலா'கணேசன், இல்லாத ரங்கராஜன், டெல்லி வரவே வராத லக்ஷ்மணன்... எல்லாம் பிஜேபி தமிழ்நாடு மற்றும் கேரளாவை மறந்து விட்டதோ என்று எண்ண வைத்தது. கட்சித் தலைமை இப்போது உ.பி, பீஹார், ம.பி, மஹாராஷ்டிரா, குஜராத், ராஜஸ்தான், பஞ்சாப், ஹிமாச்சல், டெல்லி,

மே. வங்கம், ஒரிஸ்ஸா, கர்நாடகா போன்ற இடங்களில் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளவே எண்ணுகிறது என்றார் ஒரு தே.கு. உறுப்பினர். பிற இடங்களில் கூட்டணிக் கட்சிகளின் தயவில் ஓரிரு இடங்கள் வென்றாலே கட்சி பெரும்பான்மைக்கருகில் வரும் வாய்ப்பைப் பெற்றுவிடும் என்று நம்புவதாகத் தெரிகிறது.

இது மகளிர் நேரம். எல்லாக் கட்சிகளும் மூன்றிலொரு பங்கு தொகுதிகள் மகளிருக்குக் கொடுக்கின்றனவோ இல்லையோ, சோனியா கட்சியின் அனைத்துத் தலைவர்களும் தங்கள் மனைவியர்களுக்கோ, சகோதரிகளுக்கோ டிக்கெட் கேட்கின்றனர். முந்நாள் அமைச்சர் அப்ரார் அஹ்மத் தன் மனைவிக்கு ராஜஸ்தானிலிருந்து ஒரு தொகுதி கேட்கிறார். ஹரியானா காங்கிரஸ் தலைவர் புபீந்தர் சிங் ஹூடா தன் மனைவி ஆஷா ஹூடாவிற்கு சோனிபட் தொகுதி கேட்கிறார். பஞ்சாப் தலைவர் அமரீந்தர் சிங்கின் மனைவி பர்நீத் கௌர் பாட்டியாலா தொகுதியிலிருந்து. ஒரிஸ்ஸா முதல்வர் கிரிதர் கமாங்கின் மனைவி ஹேமாவதி 'கோபட்' தொகுதி. உ.பி. சல்மான் குர்ஷீத் தன் மனைவி லூயி ஃபெர்னாண்டஸ் ஃபரூக்காபாத் தொகுதியிலிருந்து நிற்க வேண்டுமென்கிறார். ஆந்திரா ராஜசேகர ரெட்டி தன் மனைவி மாநில சட்டசபைக்குப் போக மனுக் கொடுத்திருக்கிறார். ராஜஸ்தான் முதல்வர் அஷோக் கெஹ்லாட் தன் மனைவி சுனிதா ஜோத்பூரிலிருந்து போட்டியிட வேண்டுமென்கிறார். டெல்லி முதல்வர் ஷீலா தீக்ஷித் தன் சகோதரிக்கு ஒரு தொகுதி கொடுக்க வேண்டுமென்கிறார். ஆக காங்கிரஸின் ஆண் மகன் எங்கே...? கட்சியின் ஒரே ஆண் மகன் இந்திரா காந்தி என்பார்கள். இப்போதோ, யாரை அப்படிச் சொல்வது என்கிறார் கட்சியின் ஒரு முதிர் தலை.

பாகிஸ்தான் ராஜதர்பாரில் வலம் வரும் ஒரு ஜோக் (இந்திய ராஜதந்திர வட்டாரங்களிலிருந்து டெல்லியில் கசிவது): வேலை தேடி வந்த ஒரு இளைஞனுக்கு, ஏன் வேலை கொடுக்க வேண்டும் என்று கேட்டாராம் அதிகாரி. இளைஞன், "நான் ஷெரீஃப் (நல்லவன்), இமான்தார் (நம்பகமானவன்) மற்றும் வஃப்தார் (விசுவாசமானவன் – மூன்றும் உருதுச் சொற்கள்)." என்று கூற, மற்றவன் கேட்டானாம் : "நீ எப்படி இமான்தார், வஃப்தாராக இருக்க முடியும் – 'ஷெரீஃபாக' இருக்கும் பட்சத்தில்?"

நடிகை-ராஜ்ய சபா உறுப்பினர் வைஜயந்தி மாலா தன் பாராளுமன்றக் காலம் முடிந்ததும் லோதி ரோட் அரசு பங்களாவைக் காலி செய்ய மறுக்கிறார். நரசிம்மராவினால் புனருத்தாரணம் செய்யப்பட்டவருக்கு ராஜ்ய சபா சீட் கொடுக்கப்பட்டது. முந்தைய நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் ராம் ஜேத்மலானி, அம்மையாருக்கு இணக்கமாக நடந்து கொண்டார். ஆனால் காப்பி புக் ரூல்ஸ் அமைச்சர் ஜக்மோஹன் இப்போது நடவடிக்கை எடுக்கத் தயாராகி விட்டார் என்று கேள்வி. வைஜயந்தியின் பதவிக் காலம் பல மாதங்களுக்கு முன்னரே முடிந்து விட்டது. இப்போது ஏழைகளுக்கு இலவச வாழ்வளிக்கும் மருந்து (life saving drugs) சேவை செய்கிறேன் என்கிறார் இந்த முந்நாள் நட்சத்திரம். "இப்போதுதான் ஏழைகள் வாழ்வளிப்பு மருந்து இல்லாமல் திண்டாடுகிறார்கள் என்று தோன்றியதா" என்று கேட்டார் பத்திரிகையாளர் ஒருவர், ஒரு ப்ரெஸ் மீட்டில்.

— இந்திரப்ரஸ்தன்



இந்தியத் தொழிலதிபர்களின் மனைவிகள் நடத்தும் சங்கத்தின் சார்பில், நம் நாட்டின் எதிர்காலப் பிரச்னைகள் என்னென்ன...? என்பது குறித்து ஒரு கலந்துரையாடல் ஏற்பாடு செய்திருந்தார்கள் – சூரிய கிரகணத்தன்று மாலை.

இடது கம்யூனிஸ்ட் சுபாஷிணி அலி, சுதேசி இயக்க எஸ். குருமூர்த்தி, த.மா.கா ஜெயந்தி நடராஜன், நடுவராக ஸ்டார் டீவியின் ராஜ்தீப் சந்தேகால் என்று மேடை முற்றினார்கள்.

காங்கிரஸ் சார்பில் கபில் சிபல் வருவதாக இருந்ததாம். ஆனால் வரவில்லை. அதற்கு ராஜ்தீப் சந்தேசாயின் கமெண்ட்: "10, ஜன்பத்தைத் தாண்டி இந்தியா இல்லை என்று மனிதர் நினைத்தாரோ என்னவோ!"



• ஜெயந்தி, சுபாஷிணி



• குருமூர்த்தி, ராஜ்தீப்

சுபாஷிணி அலி: நாட்டின் பாதுகாப்பு பிரச்னையிலிருந்து பேச்சை ஆரம்பிக்கலாம் என்றார்கள். கார்கிலில் இந்தியாவுக்குக் கிடைத்த வெற்றிக்குப் பாராட்டு, வீர ஜவான்களுக்குச் சேர வேண்டியது. அரசுக்கு அல்ல. இன்டெலிஜன்ஸ் ஃபெயிலியர் என்கிறார்கள். பாகிஸ்தான் எல்லையில் ஆட்களைக் குவித்துக் கொண்டிருந்தபோது, பாதுகாப்பு அமைச்சர் அதை எல்லாம் கவனிக்காமல், சென்னைக்கு ஓடி ஓடி வந்து ஜெயலலிதாவை சமாதானம் அல்லவா பண்ணிக் கொண்டிருந்தார்? (சி.பி.எம். கட்சி இப்போது அதே ஜெயலலிதாவுடன் கூட்டு வைத்திருக்கிறது!)

ஜெயந்தி நடராஜன்: போக்ரானில் அணுகுண்டு வெடித்ததை ஏதோ பெரிய சாதனையாகச் சொல்லிக்கொண்டார்கள். இனிமேல் பாகிஸ்தான் நம்மைத் தாக்காது என்றார்கள். ஆனால் நடந்தது என்ன? கார்கிலில் போர்!

வருடத்துக்கு 5000 கோடி ரூபாய் வீதம், பத்து வருடங்களில் 50,000 கோடி ரூபாய் அணு ஆயுதத் தயாரிப்புக்குச் செலவிடப்படுமாம். இதை ஆரம்ப சுகாதார வசதி, கல்வி, கிராமங்களுக்குக் குடிநீர் என்று லட்சக்கணக்கான மக்கள் பயன்பெறும் திட்டங்களுக்குச் செலவழிக்கலாமே?

ராஜ்தீப்: நீங்கள் அமைச்சராக இருந்தீர்களே? உங்கள் ஆட்சியில் என்ன செய்தீர்கள்?

ஜெயந்தி: எங்கள் ஆட்சியின்போது வெளியுறவுக் கொள்கை நன்றாகத்தான் இருந்தது. படை வீரர்களுக்குப் போதிய தளவாடங்கள் கிடைக்காததுதான் குறையாக இருந்தது. போபர்ஸ் பீரங்கிகள் எல்லாம் மோசம் என்றார்கள். அதுதானே இப்போது உதவியது? ஊழல் ஊழல் என்று கூச்சல் போட்டார்கள் அப்போது!

ராஜ்தீப்: குருமூர்த்தி, நீங்கள் சொல்லுங்கள். இந்தியா பாதுகாப்பு விஷயத்தில் ஏமாந்து போயிற்றா?

குருமூர்த்தி: கார்கில் பிரச்னைக்கு மூல காரணம் பாகிஸ்தான்தான். இந்தியா அல்ல. அப்புறம் ஏன் இந்திய அரசைக் குற்றம் சொல்லுகிறீர்கள்? போரும் அமைதியும் மாறி மாறி வருவது என்கிறார் சீன மிலிடரி மேதை சன்ஹூ. போபர்ஸ் நல்ல பீரங்கி இல்லை என்று யார் சொன்னது? அப்படி இருந்தும் ஏன் லஞ்சம் கொடுத்தார்கள் என்பதுதான் கேள்வி. மோசமான பீரங்கியைத் தலையில் கட்டத்தானே லஞ்சம் கொடுக்க வேண்டும்?

ராஜ்தீப்: அரசு ஏன் டிரான்ஸ்பரண்ட்டாக (வெளிப்படையாக) இருக்கக் கூடாது?

ஜெயந்தி நடராஜன்: கரெக்ட். நான் அப்படிப்பட்ட அரசை வரவேற்கிறேன். ஓபன் டெண்டரிங் முறை இருக்க வேணும். ஒளிவுமறைவு போகணும்.

ராஜ்தீப்: நான் பாகிஸ்தான் போயிருந்தபோது, அந்த நாட்டு மக்களின் நேசத்தைப் பார்க்க முடிந்தது. சென்னையில் கிரிக்கெட் மாட்சில் பாகிஸ்தான் வெற்றி பெற்றபோது ரசிகர்கள் பாராட்டியதை அவர்களால் வியந்து பாராட்டாமல் இருக்கவே முடியவில்லை... காஷ்மீரை எடுத்துக் கொள்ளுங்கள், மாதுரி (தீட்சித்தை) தாருங்கள் என்றெல்லாம் கோஷம் போடுகிறார்கள். இப்போது மாதுரிக்குப் பதில் காஜோலைக் கேட்கிறார்கள்! இரு நாட்டு மக்களுக்கு இடையே சிநேகம் இருக்

கிறது. ஆனால் அங்கே அரசாங்கம் அதை வளர விடாமல் விஷ விதை தூவுகிறது. அதனால் பஸ் பயணம் தவறு இல்லை.

சுபாஷிணி: பஸ் பயணம் போங்கள். வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் பீரங்கியையும் தயார் நிலையில் வைத்திருங்கள் என்றுதான் சொல்லுகிறோம். அமெரிக்கா நமக்கு ஆதரவு காட்டுகிறது என்கிறார்கள். ஆனால் அதை நம்ப முடியாது. அவர்கள் மாறி விடுவார்கள். அமெரிக்கா இன்னும் காஷ்மீரை பிரச்னைக்குட்பட்ட பகுதி என்றுதான் சொல்லுகிறது. இந்தியாவின் ஒரு பகுதிதான் என்று ஏன் சொல்ல மறுக்கிறது?

ராஜ்தீப்: உள்ளூர் பிரச்னைக்கு வருவோம் - ஜெயந்தி, நீங்கள் சொல்லுங்கள். அரசு எதற்கு இப்படி ஏர்போர்ட், விமான வசதி என்று கட்டிக்கொண்டு அழ வேண்டும்? இப்படி எதற்கு நஷ்டம் வருகிற ஐடிடிசி ஹோட்டல்களை நடத்திக் கொண்டிருக்க வேண்டும்? அரசாங்கம் பிசினஸ் செய்தால் நஷ்டம்தானே வருகிறது? தனியார் துறைக்கு விட்டுத் தொலைக்க வேண்டியதுதானே?

ஜெயந்தி: நான் இதை முழுக்க முழுக்க ஆதரிக்கிறேன். ஏர்போர்ட்டில் பாதுகாப்பு மட்டும் அரசு பார்த்துக் கொண்டால் போதும். பிளேன் விடுகிற பிசினஸ் எல்லாம் அதற்குத் தேவையே இல்லை!

ராஜ்தீப்: நீங்கள் சிவில் விமானத் துறை அமைச்சராக இருந்தபோது இதை எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கக் கூடாதா? (கூட்டத்தில் பலத்த சிரிப்பும், கைதட்டலும்)

ஜெயந்தி: என்ன செய்வது? சட்ட திட்டங்கள் அப்படி இருக்கின்றன. அவற்றை எல்லாம் மாற்ற வேண்டும்.

ராஜ்தீப்: டாடா ஏர்லைன்கூட அலுத்துப் போய் விட்டு விட்டார்கள். அவர்களை அலைக்கழித்துப் படாத பாடு படுத்தி விட்டீர்கள்! (மறுபடி சிரிப்பு)

ஜெயந்தி: நாங்கள் அலைக்கழிக்கவில்லை. அதற்குள் எங்கள் ஆட்சி முடிந்து ஜனதா தள் வந்துவிட்டது.

ராஜ்தீப்: ஆனாலும் 5 வருடங்கள் ஊறப் போடுவது...? (மறுபடி சிரிப்பும் கைதட்டலும்)

சுபாஷிணி: இப்போது டாடாக்காரர்கள் கோபித்துக் கொண்டு போய் விட்டார்கள்!

ராஜ்தீப்: தேர்தல் சீர்திருத்தங்களில் என்னென்ன தேவை?

ஜெயந்தி: தேர்தல் பிரசார காலத்தைக் குறைக்க வேண்டும். தேர்தல் செலவுகளைக் குறைக்க வழி செய்ய வேண்டும். அரசே தேர்தல் செலவு செய்ய வேண்டும் என்பதில் எனக்குச் சம்மதம் இல்லை. அரசும் செலவழிக்கும்; வேட்பாளரும் செலவழிக்க வேண்டும்... தமிழ்நாட்டு வோட்டர்களில் சுமார் 2 கோடிப் பேர் வோட்டே போடுவதில்லை. வோட்டுப் போடுவதைக் கட்டாயமாக்க வேண்டும். வோட்டுப் போடாத இந்த மிடில் கிளாஸ்தான் அரசாங்கத்தையும், அமைச்சர்களையும் சதா குறை கூறிக் கொண்டே இருக்கிறார்கள்.

சுபாஷிணி: மதவாதத்தையும், சாதி உணர்வுகளையும் தூண்டி விடுகிற மாதிரி தேர்தல் பிரசாரம் செய்கிறார்கள். இதைத் தவிர்க்க வேண்டும்.

ராஜ்தீப்: ஆனால் லாலு மாதிரி ஊழல் பேர்வழிகளுடன் கூட்டுச் சேருவது உங்களுக்குப் பரவாயில்லையா? (ஒரே சிரிப்பு)

சுபாஷிணி: மதவாதம்தான் எங்களுக்கு இப்போது பெரிது. அதனால் லாலுகூடக் கூட்டுச் சேர்வதை நான் நியாயப்படுத்தித்தான் ஆக வேண்டும்.

ஜெயந்தி: நல்ல திறமைசாலிகளை எம்.எல்.ஏ, எம்.பி ஆக்க முயல வேண்டும். அதை மக்கள்தான் செய்ய முடியும்.

கூட்டத்தில் ஒருவர்: ஜெயலலிதா மாதிரி ஆட்கள் நின்றால் என்ன பண்ணுவது? அதனால்தான் வோட்டே போடாமல் இருந்து விடுகிறார்கள்!

ஜெயந்தி: ஜெயலலிதாவுக்கு நேர்ந்த கதி தெரியாதா உங்களுக்கு? மக்கள் தண்டித்தார்களே?

கூட்டத்தில் ஒருவர்: பின் மிடில் கிளாசை ஏன் குற்றம் சொல்கிறீர்கள்? நாங்களா ஆட்களைத் தேர்தலில் நிறுத்துகிறோம்?

ஜெயந்தி: இத்தனை பேசுகிறீர்களே? நீங்கள் நிற்பதுதானே?

கூட்டத்தில் ஒருவர்: ஒன்றரைக் கோடி ரூபாய் கொடுங்கள். நானும் நிற்கிறேன்.

ஜெயந்தி: என்னிடம் ஏது?

கூட்டத்தில் ஒருவர்: பின் எப்படி எம்.பி ஆனீர்கள்?

ஜெயந்தி: நான் ராஜ்ய சபா எம்.பி. காசே செலவழிக்கவில்லை! (கூட்டத்தில் பலத்த சிரிப்பு)


தொகுப்பு:

சாருகேசி

‘காஷ்மீரை எடுத்துக்கொண்டவர் மாதிரி நடிக்கிறார்கள்!’

• சிவா

கீழே உள்ள கடிதத்தை எழுதியவர் இந்திய விடுதலைப் போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, பலமுறை சிறை சென்று, தொழுநோயால் அவதிப் பட்டு, கடைசி மூச்சு வரை நம் தேசத்திற் காகப் பாடுபட்டு உயர் நீத்த தியாகி சுப்ரமணிய சிவாதான். இது சேலம் மாவட்டத்திலுள்ள பாப்பாரப்பட்டி கிராமத்திலிருந்த சின்ன முத்து முதலியாருக்கு அவரால் எழுதப்பட்ட கடிதம். அப்போது பிரிட்டிஷ் அரசு அவருக்களித்த சிறைவாசத்தால், மிகவும்



சிலைகூட இல்லாத தியாகி!

உடல் நலம் பாதித்த நிலையில் இருந்தார் சிவா.

சுப்ரமணிய சிவாவுக்குக் குழந்தைகள் இல்லை. அவருடைய மனைவி மீனாட்சியம்மாள் அவருக்கு முன்பே காலமாகி விட்டார். சிவாவுக்கு விழா எடுப்பவர்களும், நூற்றாண்டு விழா கொண்டாடிய அரசாங்கமும், அவர் வாரிசுகள் எனக் கருதி அழைத்தது, அவரின் தம்பி வைத்தியநாத சர்மாவின் பேரன்களைத்தான். வைத்யநாத


ஓம்

கும்பகோணம்,
14.1.22


மகாசக்தி அருள்புரிக!

நான் நேற்று முன்தினம் யாதொரு நிபந்தனையு மில்லாமல் ஜில்லா வைத்தியத் தலைவரால், சரீர வியாதி யின் நிமித்தம் சிபார்சு செய்யப்பட்டு விடுதலையடைந்து இங்கு 'வந்திருக்கிறேன் என்ற செய்தி தங்களுக்கும் மற்ற நண்பர்களுக்கும் ஆச்சர்யத்தையும் சந்தோஷத்தையும் உண்டாக்குமென்பதில் சந்தேகமில்லை. நான் இப்போது படுத்த படுக்கையில் நடக்க முடியாத ஸ்திதியில் இருக்கிறேன். இச்சமயத்தில் தங்களிடமிருந்து ஏதேனும் உதவியை எதிர் பார்க்காமல் இருக்க முடியவில்லை. எதிர்பார்க்கிறேன். குப்தா முதலிய நண்பர்களிடமும் தெரிவிக்கவும்.

அன்புள்ள,
சுப்ரமணிய சிவம்.



• சத்யநாராயண சிவா



• அனந்தராம கிருஷ்ணன்

சர்மாவுக்கு ஐந்து பேரன்கள்.

அவர்களில் ஒருவரான சத்யநாராயண சிவா சொல்கிறார் :

"இது வரை என் தாத்தாவின் பெயரைச் சொல்லி எந்தச் சலுகையையும் அரசிடமிருந்து நாங்கள் பெறவில்லை. என் தம்பி அனந்தராம கிருஷ்ணனுக்கு மட்டும் 'தியாகியின் வாரிசு' என்ற உரிமையில் வேலை கேட்டு விண்ணப்பித்தோம். அதற்கு அரசுத் தரப்பிலிருந்து வந்த பதில்தான் எங்களை மிகவும் மனவருத்தத்திற்கு உள்ளாக்கியது. ஒரு கடிதத்தில், 'நீங்கள் நேரடி வாரிசு கிடையாது. எனவே பணியிலமர்த்த முடியாது' என பதில் வந்தது. இன்னொரு கடிதத்தில், 'ஏற்கெனவே, தியாகிகளின் குழந்தைகளும் வாரிசுகளும் வேலையில் அமர்த்தப்பட்டுவிட்டதால், இனி தியாகிகளின் வாரிசுகளுக்கு முன்னுரிமை அளிக்கத் தேவையில்லை என அரசு கருதுகிறது' என்று பதில் வந்தது. இது பரவாயில்லை. மற்றொரு கடிதத்தில், 'சுப்ரமணிய சிவாவுக்குத் திருமணமே ஆகவில்லை. நீங்கள் எந்த விதத்தில் வாரிசு எனத் தெரிவிக்கவும்' என்று கேட்டிருந்தார்கள். அதைத்தான் தாங்க முடியவில்லை!"

அரசிடமிருந்து வந்த இந்தக் கடிதங்களை சத்யநாராயண சிவா பத்திரமாக வைத்திருக்கிறார். சமீபத்தில் கூட, தியாகிகளின் வாரிசுகள் எனக் கருதப்பட்ட 28 பேருக்கு அரசு வேலை வழங்கியிருக்கிறது.

நியாயமான கோரிக்கை ஒன்று சத்யநாராயண சிவாவிற்கு இருக்கிறது.

"எத்தனையோ சிலைகளை அரசு வைத்துக் கொண்டிருக்கிறது. என் தாத்தா சுப்ரமணிய சிவாவுக்கு ஒரு சிலை கூட இல்லை. பாப்பாரப்பட்டியில் உள்ள பள்ளியில், பள்ளி நிர்வாகமே ஒரு சிலை செய்து வைத்திருக்கிறது; அவ்வளவுதான். சென்னையிலுள்ள ராணி அரங்கத்துக்கு, அந்தக் காலத்தில் 'திலகர் கட்டம்' என்று பெயர். அங்கே ஒரு டேபிளைப் போட்டு, கைத்தடியால் தட்டி ஓசையெழுப்பி, கூட்டத்தைக் கூட்டுவார் சுப்ரமணிய சிவா. அந்த இடத்தில் ஒரு சிலை வைத்தால் கூடப் போதும். அது அவருக்குச் செய்த மரியாதையாக இருக்கும்" என்றார் சத்யநாராயண சிவா.

— கே. பாலசுப்ரமணியன்



"உன் காதல் கல்யாணத்துக்கு ரெண்டு பேர் எதிர்ப்புங்கிறியே, உன் அப்பாவும் உன் காதலனோட அப்பாவுமா?"

"இல்லை, நானும் என் காதலரும்!"

— பா. ஜெயக்குமார்



"இருந்தாலும் அம்மா இப்படியெல்லாம் செய்யக் கூடாது."

"அப்படி என்ன செஞ்சுட்டாங்க?"

"ரெண்டு சீட்டு அதிகம் கேட்டதுக்கு, கேட்டுக்கு வெளியே தோப்புக்கரணம் போடச் சொல்லியிருக்காங்க!"

— குடந்தை கே.ஆர். ரவிக்குமார்



"நான் கேட்ட பணத்தை கடனா கொடுத்து, கூடவே ஒரு சின்ன மாத்திரை ஒன்றும் கொடுத்திருக்கீங்களே எதுக்கு?"

"அது ஞாபக சக்தி மாத்திரை!"

— வெ. நாகராஜ்

"உங்களுக்கு என்ன பைத்தியம் பிடித்து விட்டதா? ஷோ பிசினசில் இருந்து கொண்டு, சன்னியாசி போலப் பேசுகிறீர்களே!" என்று ஏளனமாகக் கேட்டார் ஸ்பான்சர். பெண்களை மதிக்க வேண்டும் என்ற சிந்தனையே அவருக்குப் புரியவில்லை!

என் கொள்கையை விட்டுத் தருவதற்கு மனமில்லாவிட்டாலும், எனக்கு முதல் தடவையாக ஜப்பானுக்குச் செல்லும் வாய்ப்பு வரும்போது அதை நிராகரிக்க வேண்டியிருக்கிறதே என்ற ஏக்கமும் இருக்கவே செய்தது.

"பெண்களின் கவர்ச்சி மீது உங்களுக்கு இருக்கும் நம்பிக்கை, என்னுடைய திறமை மீது இல்லை என்று அறிகிறபோது எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. நான் ஒரு திட்டம் சொல்லுகிறேன். அதை நீங்கள் பரிசிலனை செய்யுங்கள். நான் உங்கள் அழைப்பை ஏற்றுக் கொள்கிறேன். ஜப்பான் வருகிறேன். போகவர விமான செலவு, சுமாரான வசதிகள் கொண்ட ஓட்டலில் தங்கும் செலவு இவற்றை மட்டும் நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள். எனக்கு ஒரு ரூபாய் கூட நீங்கள் சன்மானம் தர வேண்டாம். ஏழே ஏழு நாட்களுக்கு என் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யுங்கள். அந்த ஏழு நாட்களில் கிடைக்கிற கலெக்ஷன் உங்களுக்குத் திருப்திகரமாக இல்லையெனில் நான் ஊருக்குத் திரும்பி விடுகிறேன்" என்றேன்.

சிறிது நேர யோசனைக்குப் பின், என் ஐடியாவை அவர் ஏற்றுக் கொண்டார். அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை.

பெஞ்சமின் கிளேமென், ஆர்னால்டு ஃப்ரஸ்ட் என்ற இரண்டு உலகப் புகழ் பெற்ற மேஜிக் நிபுணர்கள் ஜப்பானில் மேஜிக் ஷோ நடத்திவிட்டுப் போயிருந்தனர். அவர்கள் தான் என்னைப் பற்றிக் குறிப்பிட்டு, "கட்டாயமாக லாலை ஜப்பானுக்கு வரவழைத்து மேஜிக் ஷோ நடத்துங்கள். மாபெரும் வெற்றி பெறலாம்" என்று சொல்லியிருந்தார்கள்.

ஜப்பானில் என் குழுவுடன் போய் இறங்கியபோது ஏர்போர்ட்டில் என்னை வரவேற்று அழைத்துப் போக வந்திருந்தார் ஸ்பான்சர் தோமி ஹாரா. அவர் முகத்தில் உற்சாகம் இல்லை. அவர் முகத்தைப் பார்த்த



போது எனக்குக் கூட கொஞ்சம் நம்பிக்கை குறைந்து போனது.

அப்புறம்தான் இன்னொரு விஷயமும் எனக்குத் தெரிவிக்கப்பட்டது. ஏழு நாளும், ஒரே அரங்கில் நிகழ்ச்சி கிடையாது. டோக்கியோ மற்றும் அதனைச் சுற்றியிருக்கும் சிறு நகரங்களில் ஒன்று அல்லது இரண்டு ஷோக்கள் வீதம் ஏற்பாடாகி இருந்தது. காரணம், ஏழு நாட்கள் ஒரே இடத்தில் நிகழ்ச்சி நடத்துவது கலெக்ஷனை பாதிக்கும் என்று கருதி, ஆங்காங்கே சிறு ஸ்பான்சர்களுடன்

மேஜிக் நிபுணர் கே. லால்

ஏற்பாடு செய்து கொண்டிருந்தார் என்னுடைய பிரதான ஸ்பான்சர். இதிலும் எனக்கு உள்ளூர வருத்தம். ஆனால் வெளிக் காட்டிக் கொள்ளவில்லை.

முதல் நிகழ்ச்சி. அரங்கம் நிறைந்திருந்தது. நான் மேஜிக் ஐட்டங்கள் ஒவ்வொன்றாகச் செய்து காட்டினேன். ஒவ்வொன்றையும் முடித்தவுடன் பலத்த கைதட்டல். நிகழ்ச்சி சூடு பிடிக்க, பிடிக்க கரவொலி அதிகரித்துக் கொண்டே இருந்தது. ஒன்றை முடித்துவிட்டு, அடுத்ததற்குப் போக மூன்று நான்கு நிமிடங்கள் வரை கைதட்டல் ஓயக் காத்திருக்க வேண்டியிருந்தது. இடைவேளையின் போது, என் மனைவி, என் கைகளைப் பிடித்துக் கொண்டு சந்தோஷத்தில் அழுது விட்டாள். ஆனால், நான் எதிர்பார்த்த ஸ்பான்சர் என்னை வந்து சந்திக்கவில்லை. எனக்கு இது ஏமாற்றம் அளித்ததுடன் புதிராகவும் இருந்தது.



மீண்டும் நிகழ்ச்சி தொடங்கியது. மறுபடி அதே போல வரவேற்பு. நிகழ்ச்சி முடிந்தபோது, என்னை வந்து சந்தித்தார் ஸ்பான்சர். அவர் சொன்ன முதல் வார்த்தை, "லால், ஆறுமாதங்களுக்கு உங்களை ஒப்பந்தம் செய்கிறேன்."

எனக்கு இனிய அதிர்ச்சி. அவரே தொடர்ந்து பேசினார். "ஒரு நாள், நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இடத்தில் கூட இரண்டு வாரம் மேஜிக் நடத்த ஆர்வமாக இருக்கிறார்கள். மற்ற ஊர்களிலிருந்தும் ஏகப்பட்ட விசாரணைகள். அனைவருடனும் பேசி, கருத்து அறிந்து,மொத்த நாட்களைக் கணக்கிட வேண்டியிருந்ததால்தான், இடைவேளையின் போதே வந்து உங்களைச் சந்திக்க முடியவில்லை. நீங்கள் மாஜிக் ஷோ மாமன்னர். மக்கள் மனம் அறிந்தவர். நான் போட்ட கணக்குதான் தப்பு" என்றார்.

ஆறு மாத காலம், மேஜிக் ஷோ வெகு அமர்க்களமாக நடந்தது. ஜப்பான் முழுக்க நான் பிரபலமானேன். பேப்பர்கள் என் நிகழ்ச்சிகளைப் பார்த்து, பிரமித்துப் பாராட்டி எழுதின.

ஆறு மாதம் முடிகிறபோது, இன்னும் மூன்று மாதங்களுக்கு ஷோவை நடத்த வேண்டும் என்று விரும்பினார்கள். எங்கள் விசா முடியும் நிலையில் இருந்தது. நானும் இந்தியாவிலிருந்து புறப்பட்டு ஆறுமாத காலம் ஆகிவிட்டதால், இந்தியா வர விரும்பினேன். எனவே, "இப்போது இந்தியாவுக்குப் போகிறேன். ஒரு மாதம் கழித்து மறுபடி ஜப்பானுக்கு வருகிறேன்" என்றேன். அதற்கு ஒப்புக் கொண்டார்கள். இந்தியா திரும்பினேன்.

ஒரு மாதம் கழித்து, மறுபடி ஜப்பான் போனேன். ஜப்பான் மக்களிடையே முன்னிலும் அதிக வரவேற்பு. இந்தியாவுக்குப் புறப்படுவதற்குமுன் என் ஸ்பான்சர் "நான் இது வரை எத்தனையோ நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து, வெற்றிகரமாக நடத்தியிருக்கிறேன். ஆனால் உங்களைப் போல எனக்குப் பண வசூல் கொடுத்தது வேறு யாருமில்லை. உங்கள் நிகழ்ச்சி மூலமாக நான் சம்பாதித்த பணத்தைக் கொண்டு, டோக்கியோ நகரின் பிரதான பகுதியில் பெரிய வர்த்தகக் கட்டடமே வாங்கி விட்டேன். எல்லாம் உங்கள் மேஜிக் ஷோவின் பயன்" என்று நெஞ்சம் நெகிழ்ந்து கூறினார்!

நெகிழச் செய்த ஜப்பானியர்!

ஜப்பானியர்கள் கடும் உழைப்பாளிகள் என்பது தெரியும். அவர்களுடைய நேர்மையைப் பற்றியும் அறிந்து கொள்ள எனக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது.

ஒரு தடவை, ஜப்பான் போயிருந்தபோது,

ஒரு குறிப்பிட்ட ஹோட்டலுக்கு எங்களை அழைத்துச் சென்றார்கள். நாலைந்து டாக்சிகளில் அந்த ஓட்டலுக்குப் போய் இறங்கிய பின்புதான் தெரிந்தது, அது ரொம்ப விலை உயர்ந்த ஓட்டல் என்று. இவ்வளவு விலை உயர்ந்த ஓட்டல் அவசியமில்லை என்று நான் என் ஸ்பான்சரிடம் கூற, அவர் உடனடியாக வேறு ஓட்டலில் தங்க ஏற்பாடு செய்தார். மறுபடி வேறு டாக்ஸி பிடித்து, அந்த ஓட்டலுக்குப் போய் இறங்கினோம்.

அரைமணி நேரம் கழித்து, ஒருவர் என்னைச் சந்திக்க வந்தார். அவர் ஒரு டாக்ஸி டிரைவர். அவர் கையில் ஒரு கர்சிப். நாங்கள் முதலில் சென்ற ஓட்டலுக்கு அவர் டாக்சியில் போகிறபோது, எங்கள் குழுவைச் சேர்ந்த ஒருவரது கைக்குட்டையை மறந்து டாக்ஸியிலேயே விட்டு விட்டதாகவும், அதை அவர் எங்களை இறக்கிவிட்டுப் போனபோதுதான் கவனித்ததாகவும் சொன்னார். உடனே, அந்த கர்சிப்புடன் மறுபடி அந்த ஓட்டலுக்குப் போயிருக்கிறார். அந்த ஓட்டலில் 'நாங்கள் அங்கே தங்கவில்லை' என்று தெரிவித்ததுடன் நாங்கள் தங்கப் போகிற ஓட்டல் பெயரையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். நேரே அவர் நாங்கள் தங்கியிருந்த ஓட்டலுக்கு வந்து விட்டார். கர்சிப்பைத் திருப்பிக் கொடுக்க!

அவரைப் பார்த்தவுடன் எனக்கு ஆச்சரியமான ஆச்சரியம். நம் ஊரில் டாக்சியில், கைப்பெட்டியை விட்டு விட்டாலே திரும்பக் கிடைக்காது. இந்த ஜப்பானிய டாக்ஸி டிரைவர், கைக்குட்டையை மெனக்கெட்டு திருப்பிக் கொடுக்க வந்திருக்கிறார் என்றால் ஆச்சரியமாக இருக்காதா?

இன்னொரு முறை எங்கள் ஜப்பானிய விஜயத்தின் போது, டோக்கியோவிலிருந்து சுமார் அறுநூறு கிலோ மீட்டர் தொலைவில் ஒரு ஊரில் நிகழ்ச்சியை நடத்தி முடித்தோம். அடுத்து, அங்கிருந்து முன்னூறு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ஒரு ஊரில் நிகழ்ச்சிக்கு ஏற்பாடாகியிருந்தது. விடியற்காலை ஐந்து மணியளவில் ஓட்டலை காலி செய்து விட்டு, நாங்கள் பெரிய, வசதியான பஸ்ஸில் புறப்பட்டோம். ஓட்டலின் முதலாளியே வந்து, எங்களை வழியனுப்பி வைத்தார்.

பகல் ஒரு மணிக்கு, மாசுமுடோ என்கிற அந்த ஊரை அடைந்தோம். மனைவியிடம் என்னுடைய பணம் வைத்திருந்த பையைக் கேட்டேன். தன் கைப் பையில் தேடிப் பார்த்தாள், பெட்டிகளில் தேடினாள். மற்றவர்களைக் கேட்டாள். ஒரு பயனுமில்லை. திடீரென்று நினைவு வந்தவளாக, ஓட்டல் அறையில் இருந்த டேபிள் மீது வைத்துவிட்டு, புறப்படுகிறபோது எடுத்துக் கொள்ள மறந்து விட்டதாகச் சொன்னாள். எனக்கு அதிர்ச்சி!

"கவலைப்படாதீர்கள். உங்கள் பணப்பை எங்கேயும் தொலைந்து போகாது. நீங்கள் தங்கியிருந்த ஓட்டலில் பத்திரமாக எடுத்து வைத்திருப்பார்கள். இப்போது, உங்களுக்கு எவ்வளவு பணம் தேவை என்று சொல்லுங்கள். நான் உங்களுக்குத் தருகிறேன்" என்றார் மாசுமுடோவில் நாங்கள் இறங்கிய ஓட்டலின் உரிமையாளர். என் ஸ்பான்சர், "பணம் வந்து விடும், கவலை வேண்டாம். அப்படி வராது போனாலும், அந்த நஷ்டம் உங்களுக்கு ஏற்படக் கூடாது. நான் அதைக் கொடுத்து விடுகிறேன்" என்றார்.

நாங்கள் ஏற்கெனவே தங்கியிருந்த ஓட்டலுக்குப் போன் செய்து விஷயத்தைச் சொன்னபோது, ஆச்சரியம் காத்திருந்தது. "நீங்கள் புறப்பட்டுப் போன பின்தான், பணப்பையை மறந்து வைத்து விட்டுப் போய் விட்டது எங்களுக்குத் தெரிய வந்தது. எங்கள் ஓட்டல் முதலாளியும், அவரது மனைவியும் உங்கள் பணப்பையை உங்களிடம் சேர்ப்பிக்க காரில் புறப்பட்டு வந்து கொண்டிருக்கிறார்கள். எங்களது கவனக் குறைவால், உங்களுக்கு ஏற்பட்ட சிரமத்துக்கு வருந்துகிறோம்" என்றார்கள்!

அடுத்த சில மணி நேரங்களில் ஓட்டல் முதலாளி, தன் மனைவியுடன் வந்து சேர்ந்தார். பணப்பையை என்னிடம் கொடுத்து விட்டு, கணவனும் மனைவியுமாக நெடுஞ்சாண்கிடையாக என் காலில் விழுந்தார்கள்! "தவறு செய்தவர்கள், இப்படி மன்னிப்புக் கேட்பதுதான் இந்திய முறை என்று ஒரு நண்பர் மூலம் தெரிந்து கொண்டோம். நீங்கள் ஓட்டலை விட்டுப் புறப்படும்போதே, ரூம்களில் ஏதாவது விட்டு விட்டீர்களா என்று செக் பண்ணியிருக்க வேண்டும். அப்படிப் பண்ணாதது எங்கள் தவறு. இதனால் உங்களுக்கு ஏற்பட்டுவிட்ட சிரமத்துக்கு, நஷ்டமாக இதை ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று வேறு ரூபாய்க் கட்டையும் நீட்டினார். நான் அவரது நேர்மையைப் பாராட்டி விட்டு, அவர் அளித்த ரூபாய்க் கட்டை வாங்க மறுத்து விட்டேன்.

எனக்குத் திரும்பக் கிடைத்த அந்தப் பணப்பையில் எவ்வளவு இருந்தது தெரியுமா? இரண்டரை லட்சம் ரூபாய்!

(தொடரும்)



• மோயாரில் ஆய்வுக்களத்தில்...

அரசுப் பள்ளியில் ஐந்து விஞ்ஞானிகள்!

நாரோடின சுவர்கள். சரியான பராமரிப்பு இல்லாமல் ஆங்காங்கே 'தொங்கும்' ஜன்னல்கள். விழத் துடிப்பது போல் சரிந்து நெளியும் ஓட்டுக் கூரைகள். இப்படி சோர்வூட்டக்கூடிய தன்மையில் அமைந்திருக்கும் கோவை – இடிகரை அரசினர் உயர்நிலைப் பள்ளி.. இங்கு படிக்கும் மாணவர்களில் ஐவர், சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தில் 'குழந்தை விஞ்ஞானிகள்' பட்டம் பெற்றுள்ளனர். 'தேசிய குழந்தைகள் அறிவியல் காங்கிரஸ்' விருதினைத் தம் ஆராய்ச்சிகள் மூலம் தட்டிக் கொண்டு வந்துள்ளனர்!

இவர்கள் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்டதும் அற்ப சொற்பமான விஷயம் அல்ல. வனவிலங்குகளும் யானைகளும் கூடவே வீரப்பனும் நடமாடும் – மேற்குத் தொடர்ச்சி மலையும், கிழக்குத் தொடர்ச்சி மலையும் சந்திக்கும், கிடுகிடுக்கும் கானகப் பிரதேசமான 'மோயார் பள்ளத்தாக்கில்' (நீலகிரி) கிட்டத்தட்ட முப்பது நாட்களுக்கு மேல் தங்கியிருந்து அப்பகுதியின் பல்லுயிர்ப் பெருக்கம் மற்றும் பழங்குடியினர் பாதுகாப்பு பற்றிய ஆய்வுரையைத் தயாரித்து அளித்துள்ளனர்.

எப்படி நிகழ்ந்தது இந்த அதிசயம்?

பள்ளியின் தலைமையாசிரியர் கோமளத்தை அணுகியபோது, "எல்லாம் எங்கள் ஆசிரியர் விக்டர் மனோகர் செய்த சாதனை" எனக் கூறி அவரிடமே அழைத்



• ஆசிரியருடன் 'விஞ்ஞானி'கள்

துச் சென்று விட்டார். அவரோ தாம் பேசுவதை விட மாணவர்களே பேசுவது சாலச் சிறந்தது எனும் பாணியில் அவர்களையே நம் முன் கொண்டு வந்து நிறுத்தினார்.

"எங்களுக்கு இதுபற்றி ஒன்றுமே தெரியாது சார். எல்லாம் ஆசிரியரின் தூண்டுகோல். இப்படி ஓர் இடத்துக்குப் போகலாம் – ஆராய்ச்சி செய்யலாம் – விஞ்ஞானியாக – சாதனையாளனாக மாறலாம் என எங்களைத் தேர்ந்தெடுத்து, ஊக்குவித்துப் பேசியதும் அவர்தான். எங்கள் வீட்டில் அம்மா, அப்பா ஒப்புக்கொள்ளவில்லை. வீரப்பன், யானைக்காடு, புலி அடிச்சிடும் போகக் கூடாதுன்னு எல்லாம் பயமுறுத்தல். வீட்டுக்கே வந்து அப்பா அம்மாவை சமாதானம் செய்து, நம்பிக்கையூட்டி சம்மதமும் வாங்கினார் ஆசிரியர்!"

"வாரா வாரம் சனிக்கிழமையானா போதும். பஸ் பிடிச்சு, தெங்கு மரஹாட்டா போயிடுவோம். அங்கிருந்து பரிசல் பயணம். அப்புறம் ட்ராக்டர்ல புறப்பாடு. பிறகு அஞ்சாறு கி.மீ. நடந்து போய் பயிர் பச்சைகளை ஆராய்வோம்!"

"வழியெங்கும் யானைக் கழிவுகளா கிடக்கும். அதைக் கூட எங்க ஆராய்ச்சியில் விடலை. ஒரு கூடை போட்டு, ஒரு மலைவாசியைக் காவலுக்கு வைத்து, அடுத்த வாரம் சென்று அதில் முளைவிடும் வேலிக் கருவை முள்ளை அக்குவேறு ஆணி வேறாகப் பிரித்துப் பார்ப்போம். வாட்டர் போர்டில் நுழைந்து அங்கே பெய்யும் மழைநீர் அளவுகளையெல்லாம் சேகரித்தோம். போன ஆயுத பூஜை, சரஸ்வதி பூஜை விடுமுறைகளில் கூட அங்கேதான் இருந்தோம்!"

நம்மிடம் பேசிய ராம்மோகன், லோகநாதன், சிவசங்கரன், ஆசீர்வாதம், நித்யானந்தம் அனைவர் கண்களிலும் நிறைய மலர்ச்சி.

"இப்போதெல்லாம் வேலிக்கருவை முன் மோயார் பள்ளத்தாக்கையே ஆதிக்கம் கொண்டு விட்டது. யானைகள் உண்ணும் தாவரம் அரிதாகிப் போய்விட, வேறு வழியில்லாமல் இதனையே உண்டு, இதனையே செரிமானம் செய்து, எருவாக்கி விளைவிக்கவும் செய்கின்றன யானைகள்! காடுகள் அழிக்கப்பட்டதன் விளைவே இந்தப் பரிதாபம். இதனால் மிகப் பெரும் மோயார் ஆற்றின் அகலம் கூடக் குறுகி விட்டது. மழைபொழிவு, யானைகளின் இனவிருத்தி, மூலிகைகளின் வளர்ச்சி எல்லாமே வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அதற்கான காரணங்களையும், கானகத்தைக் காப்பாற்ற, சூழலைக் காப்பாற்ற யோசனைகளை – ஐம்பது பக்கங்களுக்கு மேல் 'டேட்டா' கலெக்ஷனோடு கொடுத்தோம்" என்கிறார்கள்.

ஐந்து பேரும் தற்போது பத்தாம் வகுப்பு மாணவர்கள். மேற்கொண்டு ஆராய்ச்சியில் ஈடுபட மாணவர்களுக்கு ஆசைதான். இருந்தாலும் படிப்பில் கவனம் செலுத்த இந்த வருடம் 'லகான்' போடப்பட்டுள்ளதாகச் சொல்கிறார் ஆசிரியர். எல்லாம் சரி. இப்படிப் போக வர, மோயாரில் தங்க, உணவுக்கு என நிறைய செலவாகுமே? அரசுப் பள்ளியென்பதால் அரசுத்தரப்பில் உதவி வாங்குவதென்பதும் உடனடி சாத்தியமில்லை. மாணவர்களைப் பார்த்தாலும் ஏழைமையின் வடிவாக இருக்கிறார்கள். எப்படி?

"போக வர பஸ் செலவு மட்டும் எங்களை ஏத்துக்கச் சொன்னார் ஆசிரியர். அதிலயும் ரெண்டு பேருக்கு வசதியில்லை. ஆசீர்வாதத்தோட அப்பா சாதாரண வாட்ச்மேன். அவனுக்கு முன்னூறு ரூபாதான் செலவுக்குக் கிடைச்சது. மீதி இருநூறு ரூபா நான் போட்டுட்டேன்"

மாணவன் ஒருவன் ஆசிரியரைப் பார்த்துக்கொண்டே தயங்கித் தயங்கி பேச, இதற்குப் பதில் பேச விக்டர் மனோகரே முன்வந்தார்.

"பஸ் செலவு மட்டும் ஐநூறு ரூபா தயார் பண்ணச் சொன்னேன். அதுவே அந்த மாணவர்களால் முடியலை. ஒருத்தருக்கொருத்தர் உதவி செஞ்சுட்டாங்க. ஆராய்ச்சிக்கு டேட்டா கலெக்ஷன், இன்செக்ட் கலெக்ஷன், உணவுச் செலவுன்னு இருபது, இருபத்தியையாயிரம் எனக்கு செலவாச்சு. சென்னை போய் அவார்டு வாங்க தனியாக வேறு செலவு. அதற்கும் பஸ் செலவு செய்யக்கூடிய இரண்டு மாணவர்களை மட்டும் அழைத்துப் போய்த் திரும்பினேன். வந்த பிறகு பள்ளியில் தலைமையாசிரியர் ஐயாயிரம் ரூபாய் இதற்கென கல்வித் துறை அதிகாரியிடம் விண்ணப்பித்துப் பெற்றுத் தந்தார். மற்றபடி மாணவர்களுக்கு சில தனியார் நிறுவனங்கள் உதவ முன் வர, அதை அவர்கள் மேற்படிப்புக்காக வங்கியிலேயே டெபாசிட் செய்து விட்டோம்!"

ஆசிரியர் விக்டர் மனோகர், ஏற்கெனவே உதகை வனப்பிரதேசத்தில் மாணவர்களை வைத்து தங்கம் இருப்பதாக – அதற்குண்டான கனிம வளம் இருப்பதாக – ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்து, முன்பிருந்த மேட்டுப்பாளையம் பெத்திகுட்டைப் பள்ளியில் ஐந்து மாணவ விஞ்ஞானிகளை உருவாக்கியிருக்கிறார். அதனடிப்படையில் வளர்ந்த ஆர்வம் இவர்களையும் உருவாக்கியுள்ளது. இந்த வருடம் எட்டாம் வகுப்பு மாணவர்களைத் தேர்ந்தெடுத்து 'வால்பாறை' பகுதியில் சிங்கவால் குரங்கு ஆராய்ச்சிக்கு அழைத்துச் செல்லப் போகிறாராம்.

"இதற்கெல்லாம் செலவு?"

யோசிக்கிறார். விஞ்ஞானிகளை உருவாக்க எந்தத் தரப்பிலிருந்தும் உதவி எதிர்பார்க்கிறார்.

— கா.சு. வேலாயுதன்

நோபல் விந்தைகள்!

● 1946ம் ஆண்டு வைரஸ் துகள்களைப் பற்றி ஆராய்ந்து வேதியியல் துறையில் நோபல் பரிசைப் பெற்றவர், ஹார்வார்டு பகுதியைச் சேர்ந்த ஜேம்ஸ் சம்னர். இதில் என்ன செய்தி என்கிறீர்களா? இவர் தன்னுடைய 17வது வயதிலேயே இட்து கையை இழந்தவர். இவர் செய்த ஆராய்ச்சிகள் எல்லாம் ஒற்றைக் கையில்தான்.

● 1978ம் வருடம் 'குறைந்த வெப்ப இயற்பியல்' துறையில் ஆரரய்ச்சி செய்து அதற்காக இயற்பியல் துறை நோபல் பரிசு பெற்றவர், லினோர்டோவிட் கேபிட்சா. இவர் ரஷ்ய விஞ்ஞானி. நோபல் பரிசுக்கான ஆய்வுகளை எங்கே மேற்கொண்டார் தெரியுமா? ரஷ்ய சர்வாதிகாரி ஸ்டாலினால் சிறைப்பிடிக்கப்பட்டு சிறையில் இருந்த போது கண்டு பிடித்ததுதான் இவை! (இவரின் மனைவியும், இரு குழந்தைகளும் வறுமையில் இறந்து போயினர் என்பது வேதனையான விஷயம்).

● 1979ம் ஆண்டு மருத்துவத் துறைக்கான நோபல் பரிசைப் பெற்றவர்கள், சர் ஜியோஃப்ரி ஹன்ஸ் ஃபீல்டு மற்றும் ஆலன் கோர்மக். இவர்கள் இருவரும் டாக்டர்களோ அல்லது உளவியல் அறிஞர்களோ அல்ல! பின் எப்படி மருத்துவ துறை நோபல் பரிசு? 'CAT ஸ்கேன்' கருவியைக் கண்டு பிடித்ததற்காக.

● அவர் பள்ளிக் கூடத்தில் ஒழுங்காகப் படிக்கவில்லை. அதனால் பள்ளிப் படிப்பைக் கூட முடிக்கவில்லை. காரணம், எப்போதும் வேறு புத்தகங்கள் படிப்பதிலும், நண்பர்களுடன் அரட்டை அடிப்பதிலும் நேரத்தை செலவிட்டதுதான். மிக்க சிரமத்தின் பேரில் கிடைத்த தபால்காரர் பதவியிலிருந்தும் இவர் இந்தப் பழக்கத்தால் பணி நீக்கம் செய்யப்பட்டார். இவர்தான் 1949ஆம் ஆண்டிற்கான இலக்கியத் துறை நோபல் பரிசைப் பெற்ற வில்லியம் ஃபாக்னர்.

● ஐன்ஸ்டின் உலகப் புகழ் பெற்றது அவருடைய கண்டு பிடிப்பான "சார்பியல் கோட்பாடு" மூலம்தான் என்பது விஞ்ஞானம் பயின்ற அனைவரும் அறிந்தது. ஆனால் நோபல் பரிசு கமிட்டி அவருக்கு 'போட்டோ எலெக்ட்ரிக் எஃபெக்ட்' கண்டு பிடிப்பிற்காக வழங்கியது. காரணம் 'சார்பியல் கோட்பாடு' குறித்து அந்தக் கால கட்டத்தில், விஞ்ஞானிகள் இடையே நிலவிய கருத்து வேறுபாடுதான். இதனால் தனக்கு வழங்கிய நோபல் பரிசுப் பண 'செக்'கை புக்மார்க்காகப் பயன்படுத்தி தன் வெறுப்பைக் காட்டினார் ஐன்ஸ்டின்.

● இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்ற ஒரு லட்சம் ரூபாயையும் ஒரு வங்கியில் டெபாசிட் செய்தார், இரவீந்தரநாத் தாகூர். அந்த வங்கி சில நாட்களில் திவாலாகி விட்டது.

இயற்பியல் துறை நோபல் பரிசு பெற்ற சர் சி.வி. இராமன் பெங்களூரில் ஒரு வங்கியில் அந்தப் பணத்தை 'டெபாசிட்' செய்தார். அந்த வங்கியும் திவாலாகி விட்டது!


● நட் ஹாம்சன் என்கிற நார்வே நாட்டு இலக்கியவாதிக்கு 1921ல் இலக்கியத் துறை நோபல் பரிசு அளிக்கப்பட்டபோது அமெரிக்கப் பத்திரிகைகளெல்லாம் "பஸ் கண்டக்டருக்கு நோபல் இலக்கியப் பரிசு" என்று தலைப்பிட்டு செய்தி வெளியிட்டன. காரணம் நார்வேயிலிருந்து அமெரிக்காவிற்கு வந்த ஆரம்ப நாட்களில், இவர் பஸ் கண்டக்டராக இருந்தார்!

— கோவி. ராஜேந்திரன்

• தாகூர்



• ஐன்ஸ்டீன்



• சி.வி. ராமன்





ஒரு தடவை அரசுப் பேருந்தில் திருச்சி டு சென்னை வருகையில் இட நெரிசலை முன்னிட்டு எனக்கருகே காலியான இருக்கையில் அந்தப் பெயர் தெரியாத சுரிதார் பெண் அமர்ந்து வந்தாள்.

அன்னிய ஸ்த்ரீயுடன் 'விவரம் புரிந்த' முதல் ஸ்பரிசம்.

காலை நகர்த்தவே இடமற்ற வசதிக் குறைவான பேருந்து. விரும்பியோ, விரும்பாமலோ இடித்துக் கொண்டே தீர வேண்டும்.

கண்டக்டருக்கும் முழு ஒப்புதல் இல்லை.

வேறிடம் பார்க்க முயன்றவனை அந்தப் பெண் தடுத்து விட்டது.

'இதுவே போதும்!'

அவன் என்னைப் பொறாமையாய்ப் பார்த்து விட்டுப் போக, பயணம் முழுக்க பேசாமலேயே வந்தாள்.

நான்தான் விழுப்புரத்தில் 'காப்பி வேண்டுமா' என்று கேட்டு, பதில் பெறாமல் இறங்கி, குடித்தேன்.

அழுத்தமான தலையசைப்பு. 'வேண்டாம்' பேச்சே இல்லை.

குரோம்பேட்டையில் இறங்கியவளை மறுபடி சந்திக்கிற 'பாக்கியமே' கிட்டவில்லை.

இதைத் தவிர சொல்லிக் கொள்கிற மாதிரி வேறு ஸ்பரிசங்கள் என் வாழ்க்கையில் இல்லை. இதுவரை, 'நல்லா இருக்கியாடா' என்று கன்னம் வழித்த அம்பது, அறுபது வயசு உறவு மூதாட்டிகளைக் கணக்கில் எடுக்காமல் விட்டால்.

என் அறையில் அந்த கல்யாணப் பெண் மறுபடியும் என் கையைப் பற்றி கெஞ்சுதலாக அழுத்தியது.

'ப்ளீஸ். காட்டிக் கொடுக்காதே.'

அறைக்குள் சுவரை ஒட்டி மறைந்தாற் போல அமர்ந்து கொண்டது.

வெளியே வந்தேன்.

சங்கரன்தான். கையில் டிபன் கேரியர்.

"என்ன ஆச்சு. லைட் எரிஞ்சுது. அப்புறம் அணைஞ்சு... ஆளையும் காணோம். ஏறிக் குதிக்கலாமான்னு பார்த்தேன்" என்றான்.

நல்ல வேளை. செய்யவில்லை.

"இங்கேதான். வாசல்ல இருந்தேன்."

"சரி. சாப்பிடு... கேரியரை நீயே வச்சிரு. அப்புறம் வாங்கிக்கறேன்."

எடுத்துக் கொண்டேன். கனத்தது.

''நிறைய வச்

அவசரத் மணமகள் தேவை



2

ரிஷபன்

சிருப்பே போல இருக்கே."

"பரவாயில்லே. முடிஞ்சவரைக்கும் சாப்பிடு."

உள்ளே மணமகள். என்ன செய்யப் போகிறேன்!

"சிவா, நீ எப்ப தூங்குவே."

"ஏன்... எதுக்கு கேட்கறே."

"இங்கே கஷ்டமா இருந்தா... உன்னோட ரூமுக்குப் படுக்க வரலாமான்னுதான்."

"அ... அப்படியா."

"ஆனா உனக்குத்தான் சிரமம். தூக்கம் கெடும். பன்னண்டு மணிக்கு வருவேன். நாலு மணிக்கு எழுந்துப்பேன். பரவாயில்லையா."

எப்படி வர வேண்டாம் என்று சொல்வது. சோறு போட்ட புண்ணியவான்.

"வாயேன்."

"தெஜம்மாவா. உனக்கு கஷ்டம் இல்லியே?" என்றான் அப்பாவியாய்.

"நிச்சயமா வா. நான் முழிச்சுக்கிட்டு இருக்கேன். நாம பேசி எவ்வளவு நாளாச்சு. நாளைக்கு ஸண்டேதான். எனக்கு லீவு."

கோர்வையாய்ப் பேசினேன். ஒரு வேளை சங்கரன் பார்வையில் பட்டிருந்தால் அல்லது எங்கள் பேச்சு கேட்டிருந்தால்... எழும்பிய துளி சந்தேகமும் அற்றுப் போகட்டும்.

சங்கரன் முகத்தில் உற்சாகம் தெரிந்தது.

"நிச்சயமா வரேன். அரட்டை அடிக்கலாம்."

கேரியருடன் உள்ளே வந்து கதவை மூடி உட்புறம் தாளிட்டேன்.

ஜன்னல் கதவையும் மூடினேன். விளக்கைப் போட்டேன்.

இப்போதுதான் அவளை நன்றாகப் பார்க்கிறேன். மணப்பெண்ணின் அழகு அலங்காரத்தால் சிதைக்கப்படுகிறது என்பதில் முழு உடன்பாடு எனக்கு. இவளுக்கு அதையும் மீறி ரசனை கூட்டியது. அதற்காக உலக அழகிப் பட்டம் தரவில்லை. நிச்சயம் இரண்டாம் தடவை திரும்பிப்

பார்க்கத் தூண்டுகிற அழகுதான்.

முகம் தெரியாத அவளது காதலன் மீது பொறாமை பீறிட்டது.

"சாப்பிட்டாச்சா" என்றேன்.

"இல்லே."

"உன் பேரென்ன."

"வசந்தி."

"உங்க வீட்டுச் சாப்பாடுதான்" என்றேன் அசட்டுச் சிரிப்புடன்.

கேரியரைப் பிரித்து பகிர்ந்தேன். சாப்பிட்டதும் அடுத்து என்ன செய்வது என்ற கவலை முழுமையாய்ப் பற்றிக் கொண்டது.

"பேசினதைக் கேட்டீல்ல."

"ம்... உங்க நண்பர் இங்கே வரப் போறார்... படுக்க."

"அவன் உன்னை இங்கே பார்த்தா... வேற வினையே வேணாம்."

"இப்ப என்ன செய்யப் போறீங்க" என்றாள் அலட்டிக் கொள்ளாமல்.

அடிப்பாவி. இது என் பிரச்னை மாதிரி திசை திருப்பி விட்டாயே.

சட்டென்று பளிச்சிட்டது ஐடியா.

என் அறையிலிருந்து அடுத்த அறைக்குச் செல்ல இடையே ஒரு கதவு உண்டு. ஆனால் எங்கள் வீட்டு சொந்தக்காரர் அதை மூடி விட்டு, இரு போர்ஷன்களாய்ப் பிரித்து வாடகைக்கு விட்டிருக்கிறார்.

அடுத்த அறைக்காரரோ ஊர் போய் விட்டார். எங்களுக்குள் கதவைத் திறந்து வைக்க எந்த அவசியமும் நேரிடாததால் தாளிட்டே வைத்திருந்தேன். ஒரு வேளை அவரும் அவருடைய பக்கத்தில் பூட்டி வைத்திருந்தால்... சிரமம்தான்.

இதயம் படபடக்க தாழ்ப்பாளைத் திறந்தேன்.

லேசான கிரீச்சுடன் கதவு திறந்தது.

அடுத்த அறை தெரிந்ததும் மனச்சாட்சி உறுத்தியது.

மணப் பெண்ணை மறைத்தல்... அடுத்தவர் அறையில் அனுமதியின்றி பிரவேசித்தல்... இன்னும் என்னென்ன தப்புகள் பண்ணப் போகிறேனோ.

திரும்பி வசந்தியைப் பார்த்தேன்.

அதற்குள் அவளும் யூகித்துவிட, சிரித்துக் கொண்டிருந்தாள்.

"நல்ல ஐடியா. நான் அந்தப் பக்கம் போயிடறேன். அந்தப் பக்கம் பூட்டிக்கிறேன். சரியா."

"எனக்கு நேரம் சரியில்லை" என்றேன் பொருமலாக.

"ப்ளீஸ்" என்றாள் மீண்டும்.

இந்த ஒரு வார்த்தையை அடிக்கடி உப யோகித்து என்னை அசைத்து விடுகிறாள்.

"சரி. பத்திரம். சொதப்பிடாதே. திடீர்னு கதவைத் திறந்துக்கிட்டு இங்கே வராதே. அங்கே லைட்டும் போட்டுராதே."

எத்தனை உதவிகள் செய்கிறேன் என்கிற பெருமிதம் என்னுள் பூக்கத் தொடங்கியது.

வசந்தியைப் பார்த்தேன்.

மனசு மாறி என்னையே தேர்ந்தெடுத்து விடுவாளோ என்ற நப்பாசையுடன்.

"குட்நைட்" என்றாள் புன்னகையுடன்.

அடுத்த அறைக்குள் நுழைந்து கதவைத் தாளிட்டுக் கொண்டாள்.

நான் ஜன்னலைத் திறந்தேன். புழுக்கம் மறைந்து வெளிக்காற்று உள்ளே வந்தது. கதவையும் திறந்தேன்.

மண்டபத்தினுள் ஏகப்பட்ட இரைச்சல்.

எப்படி இதுவரை எனக்குக் கேட்க வில்லை? என் பிரச்னையில் இருந்ததாலா.

என்ன நிகழப் போகிறது என்ற எதிர்பார்ப்பும், நானும் உடந்தை என்ற குறுகுறுப்பும் சேர்ந்து தாக்க இன்னது செய்வது என்று புரியாத மனநிலை.

சங்கரன் தெரிந்தான்.

"சங்கர்."

காம்பவுண்டு சுவர் அருகே வந்தான். படபடப்பில் இருந்தான்.

"என்ன... பிரச்னை" என்றேன் கூடிய வரை அப்பாவியாய்.

"பொண்ணைக் காணோமாம்."

"எ...ன்ன?"

"அவ விரும்பாத கல்யாணமாம். அதட்டி மிரட்டி அழைச்சுக்கிட்டு வந்துட்டாங்க. எப்படித் தப்பிச்சான்னு தெரியலே. ஆளைக் காணோம்."

"இப்ப... என்ன செய்யப் போறாங்க."


"போலீசுக்குப் போன்னு ஒரு கூட்டம் விரட்டிக்கிட்டு இருக்கு."

கைவிலங்குடன் நடுத்தெருவில் என்னை இழுத்துப் போகிற பிரமையில் ஆழ்ந்தேன்.

"சனியன்... குடும்பப் பெயரைக் கெடுக்க வந்தவளை... உதறிட்டு வேற யோசனை பண்ணுங்கன்னு அவ அண்ணன் சொல்றான்."

"அ...ப்படியா?"

"நான் போறேன். யாரும் சாப்பிட வர மாதிரி தெரியலே. கார்த்தால டிபனுக்கு, சாப்பாட்டுக்கு காய் அரிஞ்சு வச்சாச்சு. வடைக்கு நனைச்சாச்சு. கல்யாணம் உண்டா... இல்லி



பிச்சை எடுப்பதற்கு சொல்லித்தர நியூயார்க்கில் 'ஓமர்' என்ற புனைப் பெயரைக் கொண்ட ஒருவர் பள்ளி நடத்துகின்றாராம். இந்தப் பள்ளியில் ஒரு வாரப் பயிற்சிக் கட்டணம் 50 டாலர்!

— ப. இராம் முருகன்

யான்னு புரியலே. பணத்தை செட்டில் பண்ணுவாங்களோ... அம்போன்னு விட்டுருவாங்களோ..."

சங்கரன் அவன் தவிப்பில் புலம்பி விட்டுப் போய் விட்டான்.

படுக்க வர மாட்டானோ... என்று இவ்வளவு கவலையிலும் ஓர் அபத்த யோசனை.

சிவ ராத்திரிதான். அறைக்குள் நுழைந்து அடுத்த அறைக் கதவைப் பார்த்தேன்.

உள்ளே எந்த சத்தமும் இல்லை.

கொடுத்து வைத்தவள். நிம்மதியாய்த் தூங்குகிறாள். பிரளயத்தையே உண்டாக்கி விட்டு.

ஒரு மணிக்கு சங்கரன் கதவைத் தட்டினான்.

திடுக்கிட்டு விழித்தேன்.

"யா... யாரு."

"நான்தான் சங்கரன்."

கதவைத் திறந்தேன்.

"ஸாரிடா" என்றான்.

"ஸாரி. நானும் தூங்கிட்டேன்.".

சட்டென்று புத்தி விழித்துக் கொண்டது.

"என்ன ஆச்சு. பொண்ணு கிடைச்சாச்சா."

"அவ எங்கே போனாளோ... ஆனா பிரச்னை தீர்ந்தாச்சு. அவ தங்கை சம்மதிச்சுட்டா. அதே முகூர்த்தம். அதே மணமகன். பெண் மட்டும் வேற. என்னோட காண்ட்ராக்டும் பிழைச்சது" என்றான் நிம்மதி தெரிகிற குரலில்.

"என்ன இருந்தாலும் அவ பண்ணது சரியில்லே" என்றேன்.

'நமக்கென்ன அவளைப் பத்தி. வா. தூங்கலாம். எனக்கு இன்னும் மூணு மணி நேரந்தான் அவகாசம். வேலைக்கு ஓடணும்" என்றான் கொட்டாவியுடன்.

படுத்துக் கொண்டோம்.

திடுக்கிட்டு விழித்தபோது மணி ஐந்து.

வாசற்கதவு திறந்து கிடந்தது.

எனக்குள் பகிரென்றது.

(தொடரும்)

நாளைக்கு நிச்சயம் காளான் வளர்ந்து விடும்.

இன்றும், நேற்றும் அப்படித்தான் நினைத்துக்கொண்டார். கடந்த ஒரு வாரமாகவே அவரும், மனைவியும் காளான் வளர்ச்சியை எதிர்பார்க்கிறார் கள். அவருக்குச் சற்று கூடுதல் ஆர்வம். வளராது என்று தூக்கிப் போடவும் முடிய வில்லை.

சில சமயங்களில் அந்த வைக்கோலின் மக்கல் வாசனையினால் அதைத் தூக்கிப் போட்டு விடத் தோன்றுகிறது. ஒருநாள் முழு வதும் கஷ்டப்பட்டதையும் நினைத்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. இன்னும் இரண்டு நாள் வைத்திருப்பதில் நஷ்டம் ஏதும் ஏற்படப் போவதில்லை. வளராமல் போனால் தான் நஷ்டமாகும்.

வீட்டுக்கு வருபவர்களுக்குத்தான் பதில் சொல்ல முடியவில்லை. பெரிய வீடாக இருந் தால் அந்த வைக்கோல் படுக்கைகளை ஏதாவது ஓர் அறையில் மறைத்து விடலாம். சமையல றையும் கூடமும்தான். கூடமும் ரொம்பப் பெரிய தில்லை. கூடத்திலேயே அந்த வைக்கோல் படுக் கைகள் ஒரு ஓரமாக இடம் பிடித்துக்கொண்டன.

அது ஒன்றும் பெரிய இடத்தை அடைத்துக் கொள்ளவில்லை. இரண்டு ஆட்கள் உட்காரும் இடம்தான். ஆனால் கூடத்தில் அமர்பவர்களுக்கு அது தனியாக, ஏதோ புதிய விஷயமாகத் தோன்று கிறது.

அவர்களுக்கு மட்டுமில்லை. வீட்டில் எல்லோருக் கும் முதலில் அது புதிய விஷயமாகத்தான் இருந்தது. இந்த ஒரு மாதத்தில் அதைப் பற்றி எல்லோருக்கும் சொல்லிச் சொல்லி இப்போது அது புதிய விஷயமாகத் தெரியவில்லை. ஆனால், அதன் வளர்ச்சி மட்டும்தான் புரியாத விஷயமாக இருக்கிறது.

பயிற்சியின்போது வளர்க்கப்பட்டிருந்த காளான் களை அவர் பார்த்திருக்கிறார். 'காளான் வளர்வதற்கு ஏற்ற வெப்பநிலை சரியா இருந்தாத்தான் சீக்கிரம் பூக்கும். சில சமயம் இப்படித்தான் பூப்பதற்கு லேட்டாகலாம்' என்று வீட்டில் சொல்லிக் கொண்டிருக்கிறார். இன்று காலையிலும் எழுந்தவுடன் முதல் வேலையாக ஏதாவது ஒரு பக்கமாவது பூக்க ஆரம்பித்துள்ளதா என்று பார்த்து விட்டு மற்ற வேலைகளைக் கவனித்தார்.

குருமூர்த்தி வந்து போனதிலிருந்து அவருக்குக் கவலை யாக இருந்தது. குருமூர்த்தி தன்னுடைய வீட்டில் இரண்டு நாட்கள் முன்புதான் பூக்க ஆரம்பித்ததாகச் சொன்னான். அவனுடைய வீடு பெரிய வீடாக இருப்பதும் ஒரு வகையில் வசதி. இன்று காலையில் ஒரே சமயத்தில் மூன்று இடங் களில் காளான் முளைப்பதாகச் சொன்னான். அவனுடைய வீட்டில் எப்பொழுதும் நிழலாகவே இருக்கும் ஒரு இடத் தில் அவற்றை வைத்திருந்தான். இந்த வீட்டில் வெயில் வரும்போது நிழலான பகுதிக்கு அந்த மூன்று வைக்கோல் படுக்கைகளை யும் இடம் மாற்றி வைக்க வேண்டியிருக்கிறது.



இதுவரை ஒருநாள்கூடத் தன் மீது வெயில் பட்ட தில்லை. இன்றும் வெயில் வரும் நேரம் பார்த்து இடம் மாற்றி வைத்து விட்டார்.



முத்துராமன்

மாலை குருமூர்த்தி வீட்டுக்குப் புறப்பட்டார்.

பூத்திருக்க ஆசை

காளான் வளர்ப்பது பற்றிய பேச்சை அவன்தான் ஆரம்பித்தான். இவருக்கும் ரிடையர் ஆன பிறகு வீட்டில் சும்மா உட்காராமல் சம்பாதிக்க வேண்டும் என்ற ஆசை. இரண்டு பேரும்தான் பயிற்சிக்குப் போனார்கள். பயிற்சிக்குப் பிறகு வைக்கோல் எந்த இடத்தில் வாங்க வேண்டும் என்பதும் இவருக்குத் தெரிய வில்லை. குருமூர்த்தியே இவருக்கும் சேர்த்து வாங்கி வந்துவிட்டான் அவன் வீட்டின் முன்னறையிலேயே உட்கார்ந்து வைக்கோலை சிறு சிறு துண்டுகளாக வெட்டிக்கொண்டு வந்து விட்டார். அன்று முழுவதும் கத்திரி பிடித்த விரல்களில் வலி அதிகமாகவே இருந்தது. மறுநாள் சில சிரமங்களுக்குப் பின் மூன்று வைக்கோல் படுக்கைகள் தயாரித்து விட்டார். இருபது நாட்களுக்குப் பிறகு ஒவ்வொரு நாளும் காளான் முளைப்பதற்குக் காத்திருக்கிறார். இதுவரை முளைக்க



''நம்ம வேலைக்காரி முனியம்மா இருபத்தோராம் நூற்றாண்டை வரவேற்கத் தயாராயிட்டா!''

''எப்படி?''

''அக்கம் பக்கத்துச் செய்திகளை மத்தவங்க தெரிஞ்சுக்க இன்டர்நெட்ல தனி ''வெப் சைட்''டே தொடங்கிட்டா...!''

– பாளை பசும்பொன்



''பேப்பரை உங்க வீட்டுக்கே கொண்டு போய் படிச்சிட்டுத் தாங்க!''

''ஏன் சார்?''

''இங்கேயே படிச்சா ஃபேன் வேறு போடச் சொல்லுவீங்க!''

– பார்வதவர்த்தினி

வில்லை.

மூன்று இடங்களில் வெண்மையாக, மிகவும் சிறியதாகப் பூக்க ஆரம்பித்திருந்தது. பயிற்சியில் பார்த்ததைவிட இது நன்றாக இருந்தது. தண்ணீர் தெளித்திருந்ததில் முத்து முத்தாக அதன் மேலும் நீர்த்துளிகள்.

"உங்க வீட்டுல அனல் ஜாஸ்தி சார். அதான் வளர்றதுக்குக் கொஞ்சம் டயம் எடுத்துக்குது" என்றான் குருமூர்த்தி.

"டிரெயினிங்லதான் இதைப் பத்தி சொன்னாங்களே... என்ன பத்து நாள் லேட்டாகுமா?"

"பத்து நாள் ஆகாது சார். அதிகம் போனா அஞ்சு நாள் லேட்டாகும்."

கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு இருட்ட ஆரம்பித்ததும் கிளம்பி விட்டார்.

வீட்டிற்கு வந்தபோது சங்கரன் தன் மனைவியிடம் கத்திக் கொண்டிருந்தது வாசல்வரை கேட்டது. சங்கரனை அவர் இப்போது எதிர்பார்க்கவில்லை. இன்னும் பத்து நாட்கள் கழித்துதான் வருவான் என்று நினைத்திருந்தார்.

காளான் படுக்கைகளைப் பார்த்திருப்பான். என்ன செய்வது என்று தெரியவில்லை. சமாளிக்கவும் முடியாது. பத்து நாட்கள் கழித்து வந்திருந்தால் அவனிடம் வளர்ந்த காளான்களைக் காட்டி விவரம் சொல்லி இருக்கலாம். புதிய பொருளைப் பார்க்கும் ஆர்வத்தில் கொஞ்சம் பொறுமையுடன் கேட்டிருப்பான்.

வீட்டின் உள்ளே நுழைந்தபோது அவனுடைய கையில் 'ஃபார்மலின்' பாட்டில் இருந்தது. கோபமான பார்வை.

"என்னப்பா இதெல்லாம்?" என்று வைக்கோல் படுக்கைகளைக் காட்டிக் கேட்டான். குரலில் சலிப்பு இருந்தது.

"அது வைக்கோல் காளான்னு நிறைய எக்ஸ்போர்ட் பண்றாங்க. அதுல கொஞ்சம் வளர்க்கலாம்னு"

"இதெல்லாம் தேவையா நம்ம வீட்டுக்கு?"

"இல்லடா, வீட்டுல சும்மாதானே இருக்கோம்னு..."

"உங்களை நான் சம்பாதிக்கச் சொன்னேன்னு எப்பவாவது கேட்டேனா? பென்ஷன் பணம் என்னாச்சுன்னு ஏதாவது கேட்கிறேனா?"

அவனுடைய குரலில் கோபம் இருந்தது.

"இருக்கிறது ஒரு ஹால். இதுல வைக்கோலைக் கொண்டு வந்து வெச்சிக்கிட்டு... வீட்டுக் கதவைத் திறந்தா ஒரே கொசுவா கத்துது... " அதற்கு மேல் அவன் பேசியது தெளிவாகக் கேட்கவில்லை. பாத்ரூமுக்குப் போய்விட்டான்.

அவருக்கு என்னவோ போல் இருந்தது. வைக்கோல் படுக்கைகளின் ஓரங்களில் வெண்மையாகப் பூசணம் படர்ந்திருந்ததைப் பார்த்தார். அந்த வைக்கோல் உருளைகளைப் பேரனிடம் கொடுத்துக் குப்பைத் தொட்டியில் போட்டு விடச் சொன்னார்.

ஒரு ரோஜாச் செடியைப் பதியன் போட்டிருந்தால் இப்படி வெறுமை சூழ்ந்திருக்காது. எவ்வளவோ பூக்கள் பூத்திருக்கும் என்று நினைத்துக் கொண்டார். ●

✉ நாகலாந்து லாட்டரிச் சீட்டில் நிகழ்ந்துள்ள ஊழல் பிரமிக்க வைக்கிறது. இதில் கணிசமான தொகை தமிழ்நாட்டினரின் பங்காகவே இருக்கும். ஒரு மாநிலத்தின் பட்ஜெட்டுக்கு இணையான தொகை ஊழல் செய்யப்பட்டிருப்பது வேதனைக்குரியது. 'திருநெல்வேலித் துயரம்' தலையங்கமும் தக்கமுறையில் தகவல் தந்துள்ளது. 'சேரிடம் அறிந்து சேர்' என்கிற ஔவை வாக்கை த.மா.கா. மறந்து விட்டது போலும்!
தஞ்சாவூர், ஜி. ராமதாஸ்.

✉ 'பிரதமர் குற்றவாளியா?' என்ற கட்டுரையில் அடல்ஜி பற்றிய உண்மையை உலகுக்குத் தெரிய எழுதியதற்கு எனது மாவட்ட சிவசேனாவின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
விழுப்புரம், டி.கே.எஸ். இராஜசேகரன்.

✉ "மாகரல் - சமத்துவபுரம்" கட்டுரையைப் படித்தபோது எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது தெரியுமா? மாகரலைப் போலவே ஒவ்வொரு ஊரும் மாறினால்... எண்ணிப் பார்க்கவே நெஞ்சினிக்கிறது.
ஆலங்குளம், ஆர். சாலமோன்.

✉ இரண்டாம் பரிசு பெற்ற ஜானகிராஜனின் நடைமுறைகள் இந்நாள் அரசு அலுவலக நடைமுறையின் யதார்த்தமான பிரதிபலிப்பு.
மணவாளநகர், பொன். இளவேற்கோ.

✉ கடந்த 24 வாரங்களாக வலம் வந்த 'மாதா பிதா மாணவன்' சிந்தனைத் தொடர் அருமையாக இருந்தது. திருமதி ஒய்.ஜி.பி. நம்முடன் நேரடியாக உரையாடியது போல் இருந்தது. குறிப்பாக பள்ளிக் கல்வித் திட்டம் பற்றி அவரின் கருத்துக்கள் வரவேற்கத்தக்கன.
சொக்கனூர், எல். கோபாலகிருஷ்ணன்.

✉ திருமதி ஒய்.ஜி.பி. அவர்களின் மாதா, பிதா, மாணவன் ஒவ்வொரு மாதாவும், பிதாவும், ஆசிரியரும் அவசியம் படிக்க வேண்டியவை; கடைப்பிடிக்க வேண்டியவை.
திண்டுக்கல், வ.உ.சி. வாலேஸ்வரன்.

✉ டீ.வி. அறிவிப்பாளர் ஸ்வர்ணமால்யா அனாவசியமாக ரிமோட் பிளேஸ் என்று திருச்சியைக் கூறியுள்ளார். இதிலிருந்து அவருக்கு திருச்சி பற்றிய அறிவு பூஜ்யம் என்று தெரிகிறது. கல்கி வாசகர் என்ற முறையிலும் திருச்சி நகரினைச் சேர்ந்தவன் என்ற முறையிலும் என் கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
திருச்சி, எஸ். நடராஜன்.

ரூ. 50 பரிசு பெறும் கடிதம் :

✉ டீ.வி.யால் பண்பாட்டுச் சீர்குலைவு என்று எல்லாத் தொகுப்பாளர்களும் பூசித்தான் மெழுகுகிறார்கள். உடைகளில் மட்டும் அல்ல, உரைகளிலும் (பேச்சு) மிதமிஞ்சிய ஆபாசம் காணப்படுகிறது. கேட்டால் இருக்கவே இருக்கிறது - மக்கள் ரசிக்கிறார்கள்; ஸ்பான்ஸர்கள் கிடைக்கிறார்கள் என்று! சாம்பிளுக்கு சென்ற வாரம் விஜய் டீவியில் வியாழன் அன்று இரவு 7:30 மணிக்கு "என்ன மாதிரி" என்ற நிகழ்ச்சியை உறவினர் வீட்டுக்குச் சென்ற போது பார்க்க வேண்டிய சோகம்/வேதனை வந்தது! கேள்வி கேட்ட பெண் 20 வயதுக்குள்தான் இருந்தார்! அத்தனையும் கல்லூரி மற்றும் +2 மாணவர்கள்! அத்தனை கேள்வியும், பதில்களும் நெளிய வைக்கும்படியான கேள்வி - பதில்கள்! ஆபாசத்தின் உச்சநிலை என்று கூடச் சொல்லலாம்.
காஞ்சிபுரம், தென்காசி கணேசன்.

நெளிய வைத்த விஜய் டீவி!

✉ 'சிறுதொழில் தொடங்கலாம் வாங்க!' எனும் தங்களின் இலவச இணைப்பு அனைவருக்கும் உதவும் வகையிலான தகவல் கொடுத்திருந்தது. மகிழ்ச்சி. ஆனால் நடைமுறை என்ன? தாங்கள் குறிப்பிட்டுள்ள PMRY திட்டத்தில் கிளீனிங் பவுடர் தயாரிப்பதற்காக ரூ. 50,000 நிதியுதவி கேட்டு விண்ணப்பித்தேன். DICயின் சிபாரிசு இருந்தும் வங்கிக் கடன் கிடைக்கவில்லை. காரணம், வீடோ நிலமோ அடமானமாக வைக்கப்பட வேண்டுமாம். அரசின் விதிமுறைப்படி PMRY திட்டத்தில் நிதியுதவி பெற குடும்பத்தின் ஆண்டு வருமானம் 24,000 ரூபாயைத் தாண்டக் கூடாது. அப்படியிருப்பவர்களுக்கு அடமானம் வைக்க வீடும் நிலமும் எங்கிருந்து வரும்? என்னைப் போன்றோருக்கு என்றுதான் கடன் கிடைக்கும்?
கும்பகோணம், எஸ். பாலகிருஷ்ணன்.



30

குறையொன்றுமில்லை

ஜகன்னாதப் பெருமாளைப் போய்ப் பார்க்கிறார் ஒருத்தர். சமுத்திர தீரம். விசேஷமான சன்னதி. அங்கே பார்த்தால் பகவான் கட்டையிலே இருக்கிறான்! எல்லா ஊர்களிலும் சிலா ரூபமாக இருப்பவன் - கல்லிலே இருப்பவன் - கட்டையாக இருக்கிறான்.

'ஏன் கட்டையில் இருக்க வேண்டும்' என்று சந்தேகம் வந்தது சேவிக்கப் போனவருக்கு. பகவானைப் பார்த்துக் கதறி அழ ஆரம்பித்தார்.

'எவ்வளவு கஷ்டம் ஏற்பட்டிருந்தால் இப்படி நீர் ஆகியிருப்பீர்!' என்று அவர் அழ, பகவானுக்கே ஆச்சரியமாகப் போய்விட்டது. 'இந்த மனிதர் என்ன சொல்கிறார்?' என்று இரண்டு காதையும் நீட்டிக்கொண்டு கேட்டானாம் பகவான்.

அந்த பக்தர் சொல்லி, கதறி அழுத கதை உங்களுக்குத் தெரியும்:

பகவானுக்குக் கல்யாணம் ஆயிற்றாம். யாரோடு...? ஸ்ரீ என்கிற பூமாதாவோடு.

கைலாசபதி பரமசிவன், இவர்கள் இரண்டு பேரையும் கைலாசத்துக்கு விருந்துக்கு அழைத்தார். உடனே பகவான் பூமாதாவைப் பார்த்து, "கிளம்பு, கிளம்பு. பரமசிவன் அழைத்திருக்கிறார். போக வேண்டும்" என்றான்.

அவள் சொல்கிறாள்: "சுவாமி! என் மீது இத்தனை ஜீவன்கள் இருக்கின்றன. இவையெல்லாம் விட்டு விட்டு எப்படி என்னால் வர முடியும்? உம்மோடு நான் இருக்க வேண்டும் என்று நினைத்தால், என்னோடு நீர் உட்கார்ந்து விடும். 'என் நிலைமையைப் புரிந்து கொள்ளும்'' என்றாள்.

பூதேவி இல்லாமலே விருந்துக்குப் போனான் பரமாத்மா! எங்கு போனாலும் தனியாகவே போனார். பரிகாசம் செய்தார்கள். அது தாளாது கஷ்டப்பட்டான்!

சமுத்திர ராஜன் தன் பெண் மஹாலக்ஷ்மியை - அதி ரூப சுந்தரியை - பகவானுக்கு விசேஷமாகக் கன்னிகாதானம் அளித்தான். அவளோ ஒரு இடத்தில் நில்லாமல் ஓடிக்கொண்டே இருந்தாள். எந்த விருந்துக்கும் வரவில்லை.

செல்வம் எப்போதும் ஓரிடத்தில் நிற்பதில்லை. எப்போது வரும், எப்போது போகும் என்று தெரியாது. தேங்காய்க்குள் தீர்த்தம் மாதிரி நமக்குத் தெரியாமலேயே வரும். போகும்!

வித்யை அப்படி இல்லை. சம்பாதிப்பது தான் கஷ்டம். அதைச் செலவு செய்வதோ ரொம்ப சந்தோஷம். பிறருக்குச் சொல்லிக்

கொடுக்கிறபோது ஆனந்தம். ஆனால் பொருள் இருக்கிறதே - அது அப்படி இல்லை! சம்பாதிப்பது கஷ்டம்; செலவழிக்கும்போதும் கஷ்டம்!

இதை உணர்த்துகிற மாதிரிதான் மஹாலக்ஷ்மி ஓடிய வண்ணமாக இருக்கிறாள்!

பகவான் பார்த்தான் - இனிமேல் கல்யாணமே பண்ணக்கூடாது என்று முடிவுக்கு வந்தான்.

மகனிடம் போய் இருக்கலாம் என்று புறப்பட்டான். புஷ்ப பாணத்தினால் சகலத்தையும் ஈர்க்கக்கூடிய மகன் - மன்மதன். அவனிடம் வேகமாகப் போனான்.

போனால், எதிரே ஒருத்தர் ஓலை கொண்டு வந்தார். 'பரமசிவனிடத்திலே அபசாரப்பட்டு அவனுடைய மூன்றாவது கண்ணுக்கு இலக்காகி பஸ்பமாகி விட்டான் மன்மதன்' என்று.

புத்ர சோகம் தாளவில்லை பகவானுக்கு! மாமனார் வீட்டுக்குப் போகலாம் என்றாலோ, அவர் கொடுத்த பெண்கூட வர மாட்டேன் என்று தனியாய் இருக்கிறாள். தனியாய்ப் போய் நின்றால் 'என்ன வேண்டும்? எதற்கு வந்தாய்' என்றல்லவா கேட்பார்கள்! போனவரை சமுத்திரராஜன் ஒரு பெரிய அலையால் அடித்து, தூக்கி வெளியே தள்ளி விட்டான்!

ரொம்ப வியசனம் பகவானுக்கு. அவனை அறியாமல் கண் இழுத்தது. (வியஸனம் அதிகமானால் இப்படிக் கண் இழுக்கும்!)

ஆதிசேஷன் வந்தான். அவன் மீது ஏறிப் படுத்துக்கொண்டான் பகவான்.

படுத்துக்கொண்டால், 'புஸ்' என்று சீறுகிறான் அவன்! விஷமாகக் கொட்டுகிறது.

ஆதிசேஷன், எப்போதும் ம்ருதுவாக இருப்பவன், மூச்சு விடுவதே தெரியாது விடுபவன் - இப்படி ஆயிரம் தலையால் மூச்சு விட்டால்...?

பகவானால் படுத்துக் கொள்ள முடியவில்லை. விழுந்து விட்டான்!

'இனிமேல் பிரயோஜனமில்லை; நமக்கு என்று ஒருத்தரும் இல்லை. காசிக்குப் போய் விடலாம்' என்று புறப்பட்டான்.

வடதிசையாகப் போய்க்





அருள்வாக்கு

நாம் இப்போது நான்கு விதங்களில் பாபம் செய்கிறோம். உடம்பால் பல கெட்ட காரியம்; வாயால் புரளிப் பேச்சும் அசத்தியமும்; மனத்தினால் கெட்ட நினைவுகள்; பணத்தினால் செய்கிற பாவத்தைச் சொல்லவே வேண்டாம்.

எந்த நான்கால் பாவம் செய்தோமோ, அந்த நான்காலுமே புண்ணியம் செய்யப் பழக வேண்டும்.

உடம்பை, பரோபகாரம் – பகவானைப் பிரதக்ஷிணம் செய்து நமஸ்கரிப்பது இவற்றில் ஈடுபடுத்திப் புண்ணியம் செய்ய வேண்டும்.

வாயால் பகவந் நாமாவைச் சொல்லிப் புண்ணியம் செய்ய வேண்டும். 'சம்பாதிப்பதிலேயே பொழுதெல்லாம் போய் விடுகிறது; இதற்கு அவகாசம் இல்லையே' என்பீர்கள். சம்பாதிப்பது கிருகஸ்தர்களுக்கு அவசியம்தான். ஆனால் யோசித்துப் பார்த்தால் அதற்கே பொழுது முழுதும் போய் விடவில்லை என்று தெரியும். வீண் பேச்சு, பரிகாசம், வேடிக்கை பார்ப்பது, நியூஸ் பேப்பர் விமரிசனம் இவற்றில் எவ்வளவு பொழுது வீணாகிறது? அதையெல்லாம் பகவந்நாம ஸ்மரணையில் செலவிடலாமே! இதற்கென்று தனியே பொழுது ஏற்படுத்திக் கொள்ள முடியாவிட்டாலும் பரவாயில்லை. காரியாலயத்துக்கு பஸ்ஸிலோ, ரயிலிலோ போகும் போது பகவந்நாமாவை ஜபித்துக் கொண்டே போகலாமே? ஓடி ஓடிச் சம்பாதிப்பதில் ஒரு பைசா கூடப் பிற்பாடு உடன் வராதே! மறு உலகத்தில் செலாவணி பகவந்நாமா ஒன்று தானே?

மனசு பகவானின் இடம். அதைக் குப்பைத் தொட்டியாக்கியிருக்கிறோம். அதைச் சுத்தப்படுத்தி மெழுகி பகவானை அமர வைத்து நாமும் அமைதியாக அமர்ந்து விட வேண்டும்.

தி ன

கொண்டிருந்த போது கருடத்மான் அங்கே வந்து இறங்கினார். இவர் கருடன் மேல் ஏறி உட்கார்ந்தார். பகவானுடைய வாகனம்.

பூரி என்கிற ஊரின் மேல் பறந்து போகிற போது கீழே ஒரு பாம்பு போயிற்று. அதைப் பார்த்துவிட்டது கருடன்! பார்த்தவுடனே பகவானிடம் பேசுகிறது:

"சுவாமி! எனக்கு ஆகாரம் கீழே போய்க் கொண்டிருக்கிறது. சாப்பிட வேண்டும். ரொம்பப் பசிக்கிறது. ஆகையினால் இங்கே இறக்கி விட்டு விடுகிறேன் உங்களை, நான் சாப்பிட்டு விட்டு வரவரையில் உட்கார முடியவில்லை என்றால் நடந்து கொண்டேயிருங்கள். நான் வந்து ஏற்றிக்கொள்கிறேன்" என்றான்.

எப்போதும் 'என்ன பண்ணட்டும்? என்ன வேண்டும்?' என்று கைகட்டி வேலை செய்கிற சேவகன் நாம் சொன்னால் கேட்காத நிலை வந்துவிட்டதே!' என்று பகவான் தலையிலே கை வைத்துக்கொண்டு பூரியிலே உட்கார்ந்து விட்டானாம். தன் வீட்டினுடைய கஷ்டத்தை நினைத்து நினைத்து பகவான் கட்டையாகப் போய்விட்டானாம்!

பூரிக்குப் போன யாத்ரிகர் இந்தக் கதையைத்தான் தெலுங்கு கவியாகப் பாடினார்!

இந்த மாதிரி, மகான்களுக்கே கஷ்டம்! தர்மபுத்ராதிகள் பட்ட கஷ்டம் நாம் படுகிறோமா! நள சக்ரவர்த்தி பட்ட கஷ்டம் நாம் படுகிறோமா? ஹரிச்சந்திரன் பட்ட கஷ்டம் நாம் படுகிறோமா!

'அந்த மாதிரி கஷ்டமெல்லாம் நமக்கு இல்லாமல் பகவான் நம்மை மேலாக வைத்திருக்கிறான்' என்று நாம் பகவானை நினைத்து கஷ்டத்தையே பிரார்த்திக்க வேண்டும்!

அப்படிக்கூட யாராவது பிரார்த்திப்பார்களா? உண்டா? என்று கேட்டால், குந்தி பிரார்த்தித்தாள். விபத்தே எப்போதும் ஏற்பட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்று பகவான் கிருஷ்ணனிடத்திலே பிரார்த்தித்தாள்.

பகவான் கேட்டான். "எல்லோரும் அதைக் கேட்கிறார்கள், இதைக் கேட்கிறார்கள். நீ என்னடாவென்றால் விபத்தைக் கேட்கிறாயே!"

"கேட்டதெல்லாம் கிடைத்து விட்டால் அப்புறம் உன்னை நினைவார்களா...? ஆபத்துக் காலத்திலேதானே நினைப்போம்" என்றாள்.

இதைத்தான் வசிஷ்டர் சொல்லிக் கொடுத்தார். வியாசரே சொன்னார்.

பெரியதாகக் கஷ்டம் வந்து விட்டதானால் விஷ்ணுஸ்வைத்தான் ஜபிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகையினால், அவனைத் தவிர சுத்யந்தம் உண்டா? அதனால்தான் கஷ்டத்தையே கொடுக்கும்படி மகான்களெல்லாம் கேட்டிருக்கிறார்கள் என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

கேட்கும் சக்தி, பார்க்கும் சக்தி, பிராணன், மற்ற இந்திரியங்கள், ஆத்மா யாவுமே கெடாதவாறு ஆத்ம சம்ரக்ஷணம் நீயே

மும் ஐந்து நிமிஷங்களாவது இப்படி தியானம் செய்ய வேண்டும். லோகமே முழுகிப் போனாலும் நிற்காமல் நடக்க வேண்டிய காரியம் இது. ஏனெனில், லோகம் முழுகும் போதும் நமக்குக் கை கொடுப்பது இதுதான்!

பணத்தைக் கொண்டு பகவானுக்காகவும் ஏழைகளுக்காகவும் பல விதங்களில் தர்மம் செய்து புண்ணியம் சேர்க்க வேண்டும்.

பாபத்துக்கு இரண்டு சக்திகள். ஒன்று, இன்று இப்போது நம்மைத் தவறில் ஈடுபடுத்துவது. இரண்டாவது, நாளைக்கும் இதே தவறை நாம் செய்யுமாறு தூண்டுவது. உதாரணமாக, பொடி போடுவது அன்றைக்குக் கெடுதல் செய்கிறது; அதோடு நில்லாமல் நாளைக்குப் பொடி போடவும் தூண்டுகிறது. இதுதான் பழக்க வாசனை என்பது. இந்த வாசனையை மங்க வைத்து, புண்ணியங்களைச் செய்து செய்து புண்ணிய வாசனையை ஏற்ற வேண்டும்.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய
ஸ்வாமிகள்

பண்ணி அருள வேண்டும். அதற்கு மேல் உன்னுடைய பெருமை என்னாளும் குறையாது இருத்தல் வேண்டும்.

– இதுதான் யக்ஞோ யக்ஞேன கல்பதாம் என்ற பிரார்த்தனை. இதை வைத்துக் கொண்டுதான் மங்களா சாசனம் என்பது வந்தது.

மங்களா சாசனம் என்பது புதிதாக வைஷ்ணவத்தில் கண்டுபிடிக்கப்பட்டது அல்ல. அது வேதத்தில் சொல்லப்பட்டதுதான். வைணவமும் சொல்கிறது.

பகவானுக்கே மங்களத்தைப் பிரார்த்தித்தல்!

வேதம் பாருங்கள் – யக்ஞமானது யக்ஞத்தால் ரக்ஷிக்கப்படட்டும் என்கிறது. அவன் அவனாலே ரக்ஷிக்கப்படுவான். இதுதான் மங்களா சாசனம்:

'பல்லாண்டு பல்லாண்டு
பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா
உன்
சேவடி செவ்வி திருக்காப்பு
அடியோமோடும் நின்னோடும்
திருவின்னி ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின் மலர்மார்பில்
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
படைபோர் பொக்கு முழங்கும் அப்
பாஞ்சசன்யமும் பல்லாண்டே'

மதுரை மாநகரத்திலே பெரியாழ்வார் விஷ்ணுவினுடைய பரதத்வத்தை சதஸிலே பேசி பொற்கிழியலைப் பெற்றார்.

அந்தப் பாண்டிய தேசத்து ராஜா அவரை யானை மேல் ஏற்றி மதுரை மாநகரிலே வலம் வரச்செய்து பெருமையைத் தந்தான்.

யானை மேல் உட்கார்ந்து பட்டணப் பிரவேசம் பண்ணுகிறார் விஷ்ணுசித்தர்.

இவர் யானை மேல் வருகிறபோது பார்ப்பதற்காக எதிரே கருட வாகனனாகத் தோன்றினான் பகவான்.

எதிரே வந்த பகவானைப் பார்த்ததனாலே பொங்கிய பரிவாலே, அந்த யானைக்குத் தொங்கக் கூடிய இரு மணிகளையே தாளமாக வைத்துக் கொண்டு 'தமிழ் மறை இன்னிசை தந்த வள்ளல்' என்று அவனைப் பாடினார் ஆழ்வார்.

'ஐயோ! இப்படி இறங்கி வந்துவிட்டாயே! லோகமெல்லாம் உன்னைப் பார்க்கிறதே. உனக்குக் கண் திருஷ்டிப் பட்டு விடப் போகிறதே. கல்லடி பட்டாலும் படலாம்; கண்ணடி படக்கூடாது என்பது உலக வழக்கு ஆயிற்றே. திருஷ்டி தோஷம் ரொம்பக் கெடுதல் என்பார்களே... ஆகையினால் திருஷ்டி பட்டு விடாமல் பல்லாண்டு பல்லாண்டாய் நீ இப்படியே இருக்க வேண்டும். சக்கரத்தாழ்வார், மஹாலக்ஷ்மி எல்லோரும் இப்படியே பல்லாண்டு இருக்க வேண்டும்..."

என்று ஆழ்வார் பாடினார்.

வாழ்த்துவது என்றால் பெரியோர்கள் தான் சிறியோரை வாழ்த்துதல் உலக வழக்கு. ஆழ்வார் தன் சிறுமையை மறந்து பகவானுடைய பெருமையை மறந்து அவனுக்கே வாழ்த்துக் கூறினார்! இதுதான் மங்களா சாசனம்.

விஷ்ணுவினுடைய பெருமை விஷ்ணுவினாலேயே விளங்கட்டும் (யக்ஞோ யக்ஞோ கல்பதாம்) என்ற வேத வாக்யத்துக்கு இது விளக்கமாகிறது. அவன் மங்களமுடையவனாக இருந்து, அவனே அவன் பெருமையைக் காட்டட்டும். எங்கும் பரந்திருக்கக்கூடிய விஷ்ணுசித்த வாக்யனான மகாவிஷ்ணுவினுடைய 'பெருமையை லோகமெல்லாம் அறியட்டும் என்று வேத வாக்யம் எடுத்துக் காட்டுகிறது.

(தொடரும்)

டுப்பியின் குடும்பம்

அலமு; அரஸ்



Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi

Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.

Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.

Annual Subscription : India : Rs. 250/-; Overseas : Rs. 1900/- (Air Mail)

Half Yearly Subscription : India : Rs. 125/-; Overseas : Rs. 950/- (Air Mail)

ஏன் கடவுளுக்கு நைவேத்தியம்காட்டி சாப்பிட வேண்டும்?



- ஒவ்வொரு பதார்த்தத்திலும் ஜீவனுண்டு. அதையறுத்து சமைப்பதனால் தோஷம் உண்டாகின்றது. அவைகளை கடவுளுக்கு ஆராதனைசெய்து சாப்பிட்டால் அந்த தோஷம் நிவாரணையாகும்.
- யஞ்ஞத்தினால் ஆராதிக்கப்பட்ட தேவதைகள், சந்தோஷ மடைந்து இஷ்ட்டமான போகங்களைக் கொடுப்பார்கள். ஆதலால் நீங்கள் சாப்பிடுவதற்குமுன் அன்னமும் பதார்த்தங்களும் கடவுளுக்கு காட்டி ஆராதனை செய்து அந்த சேஷத்தைச் சாப்பிடவேண்டும்.
- இந்திராதி தேவதைகளும் ஜனங்களுக்கு ஜீவனார்த்தமாகிய பதார்த்தங்களைக் கொடுப்பதற்கு மழையைப் பெய்விக்கப் பகவானால் நியகிக்கப்பட்டிருக்கின்றது. ஆதலால் அவர்களால் விளைவித்துக் கொடுக்கப்பட்ட பதார்த்தங்களை மறுபடியும் அவர்களுக்கு அர்ப்பணம் செய்வதனால் அவர்களை சந்தோஷித்து மறுபடியும் பிரதி வருஷங்களிலும் மழையை விருத்து செய்து கொண்டே வருவார்கள். அதனால் ஜனங்கள் க்ஷேமமாய் விருத்தியடைவார்கள்.

ஆதாரம்: ஜீவப்ரஹமைத்ய வேதாந்த ரஹஸ்யம்

ஆகையால் கிராண்ட் ஸ்வீட்ஸ் வாங்கி நல்லோருக்கு விநியோகம் செய்யவும்.

திருமண வைபவங்களுக்கு சீர் முறுக்கு, சீர் அதிரசம், முள்ளு தேன்குழல், பருப்புத் தேங்காய் வகைகள், திரட்டுப்பால் அப்பம் முதலியவை வழங்கப்படும்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2வது மெயின் ரோடு, காந்தி நகர், அடையாறு,
சென்னை - 20. போன்: 4915662, 4914213

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4392 /99* Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka